

# ஞானகாந்தி

கற்பின் ஜோதியாக விளங்கும் ஞானகாந்தி என்னும் இக்கதா நாயகியின் பதிபக்தி, அறிவு, ஆற்றல், பொறுமை, தன்னடக்கம், பிறர் துயரங் கண்டிரங்கல், பரோபகாரம் முதலியவை பல அத்தாட்சிகளோடு அனைவரும் படித்து ஆனந்திக்குமாறு வரையப்பட்டிருக்கின்றன.

புதிய பதிப்பு விலை ரூபா 1-6-0

# குசாவதி அல்லது ஒரு வஞ்சக வநிதை

குசாவதி என்னும் பெண்மணி பாலியத்தில் பணம் சம்பாதிக்கும் நிமித்தம் அஞ்சா நெஞ்சுடன் பல அரிய செயல்களை மேற்கொண்டு, வம்புச் சண்டைக்கெல்லாம் வல்லவளாயும், வஞ்சகத்திற்கெல்லாம் மிஞ்சினவளாயும், பேர்போன திருடர்கள் மோசக்காரர்களிடமே தன் கைவரிசையைக் காட்டி குபேர சம்பத் தடைந்தும் பிறகு கடைசியில் ஒரு சந்நியாசியைக் கண்டு அவருதவியால் தன் மனதை நிலை நிறுத்தி தன் எல்லா ஆஸ்தியையும் பெண்கள் பாடசாலைக்கும், பிரசவ ஆஸ்பத்திரிக்கும் பகிர்ந்து எழுதிவைத்து துறவறம் பூண்டு எளிய வாழ்க்கையை நிம்மதியாய் மேற்கொண்டு பரமனடி பாடி பரகதி அடைந்தது படிக்கப் படிக்க பேரானந்தத்தையும் ஆச்சரியத்தையும் விளைவிக்கும். இதன் விலை அணா 6.

ஸ்ரீமான்-செய்யூர் வித்வான் ஆறுமுகஞ்சேர்வை எழுதியது

# கலியாண சந்தடியில் தாலி கட்ட மறந்த கதை

நண்பர்களே! கலியாணத்தில் கூட தாலிகட்ட மறந்துவிடும் சண்டிக் கழுதைகள் உண்டா! என்று நீங்கள் ஆச்சரிய மடையக்கூடும். இக்கதையை நீங்கள் படிப்பீர்களானால் அப்பேர்ப்பட்ட மானங்கெட்ட மாடுகளும் உண்டென்று தெரிந்து கொள்வீர்கள்.

இதன் விலை அணா 5.

# ஓயாச் சிரிப்பு என்னும் அவுட்டுச் சிரிப்புக் கதைகள்

இப்பெயருள்ள நூல் நூதனமாக வெளிவந்த மகா விநோதப் புத்தகம் படிக்கப்படிக்க அடங்காச் சிரிப்பை யுண்டாக்கும். இதன் ஆரம்பமுதல் முடிவுவரை ஓயாத சிரிப்பை யுண்டாக்கும் விநோத சம்பவங்களை நிரப்பியிருக்கும்.

இதன் விலை அணா 6.

# மின்சார மாயவன்

இது ஓர் மிக்க அபூர்வமான திருடன் சரித்திரம். இதன் கதாநாயகனாகிய மின்சார மாயாவன் என்னும் திருடன் கல்வியும் மிக்க புத்தி சாமர்த்தியமும் தீரமும் உடையவன். ஆதலால் அவன் செய்கைகள் ஒவ்வொன்றும் மிக்க வியப்பை யுண்டாக்கத்தக்கதா யிருக்கும். அவன் ஆபத்தில் சிக்கிக் கொள்ளும் ஒவ்வொரு சமயமும் தப்புவான் என்று ஒருவரும் கருதார்கள். அப்படியிருந்தும் தப்பித்துக்கொள்வான். இது அறிவாளிகளுக்கு மிக்க விருப்பத்தை யுண்டாக்கத்தக்கது. மனிதர் உலக அனுபவம் பெற அறிந்து கொள்ள வேண்டிய பல விஷயங்களை பலர்க்கு அளிக்கக்கூடியது.

இதன் விலை ரூ 1—8—0

ஆனந்தபோதினி காரியாலயம், சௌகார்பேட்டை. சென்னை





"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள
மெய்ப்பொருள் காண்பது அறிவு."—திருவள்ளுவர்.


| | | |
|---|---|---|
| தொகுதி 32 | வியய ௵ ஆடி ௴ க ௳<br>1946 ௵ ஜூலை ௴ 16 ௳ | பகுதி 1 |


## உள்ளுறை.


| எண். | பொருள். | பக்கம் |
|---|---|---|
| 1. | கடவுள் வணக்கம் | 2 |
| 2. | கல்வித் திட்டத்தில் மாறுதல் | 3 |
| 3. | தாய்மொழியில் போதனை | 6 |
| 4. | அப்பாவி வேலன் | 13 |
| 5. | தேச சுதந்திரம் | 17 |
| 6. | தமிழ் நாடகக் கலை | 25 |
| 7. | பொற்கொடி | 28 |
| 8. | வாலிபர் சங்கம்! | 34 |
| 9. | அவன் தொழில் | 38 |
| 10. | சொல்லும் செயலும் | 42 |
| 11. | ஜ்யோதிஷ பல ரகஸ்யம் | 46 |
| 12. | மாற்றாந்தாய் | 48 |
| 13. | சுற்றுப் பிரயாணம் | 51 |
| 14. | நிராயன சுத்த ஸ்புடம் | 59 |
| 15. | பஞ்சாங்கம் | 60 |

# ஆனந்த போதினி

207719

## கடவுள் வணக்கம்.

சோதியே சுடரே சூழொளி விளக்கே
சுரிகுழல் பணைமுலை மடந்தை
பாதியே பரனே பால்கொள்வெண் ணீற்றாய்
பங்கயத்து அயனு(ம்) மால் அறியா
நீதியே செல்வத் திருப்பெருந் துறையில்
நிறைமலர்க் குருந்தமே வியசீர்
ஆதியே அடியேன் ஆதரித்து அழைத்தால்
அதெந்துவே என்று அருளாயே. (1)

திருத்தனே நிமலா நீற்றனே நெற்றிக்
கண்ணனே விண்ணுளோர் பிரானே
ஒருத்தனே உன்னை ஓலமிட்டு அலறி
உலகெலாம் தேடியும் காணேன்
திருத்தமாம் பொய்கைத் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அருத்தனே அடியேன் ஆதரித்து அழைத்தால்
அதெந்துவே என்று அருளாயே. (2)

துப்பனே தூயாய் தூயவெண் ணீறு
துதைந்துஎழு துளங்கொளி வயிரத்(து)
ஒப்பனே உன்னை உள்குவார் மனத்தின்
உறுசுவை அளிக்கும்ஆ ரமுதே
செப்பமா மறைசேர் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அப்பனே அடியேன் ஆதரித்து அழைத்தால்
அதெந்துவே என்று அருளாயே. (3)

முத்தனே முதல்வா முக்கணா முனிவா
மொட்டறா மலர்பறித்து இறைஞ்சிப்
பத்தியாய் நினைந்து பரவுவார் தமக்குப்
பரகதி கொடுத்தருள் செய்யும்
சித்தனே செல்வத் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அத்தனே அடியேன் ஆதரித்து அழைத்தால்
அதெந்துவே என்று அருளாயே. (4)



# கல்வித் திட்டத்தில் மாறுதல்

உலகிலுள்ள சுதந்திர நாடுகள் அனைத்திலும் தத்தம் தாய்மொழியில் கல்விப்போதனை நடந்து வருகின்றது. ஆனால், அடிமைத் தனத்தின் காரணமாக, நம் நாட்டில் ஆங்கில மொழியின் மூலம் அதாவது நமக்கு முற்றும் வேறான ஒரு மொழியில் கல்விப் போதனை நடந்துவந்தது. இதனால் நம்முடைய எண்ணப் போக்கிலும், மனோபாவத்திலும் மறுமலர்ச்சி ஏற்படாத ஒரு தேங்கிய நிலைமை இருந்துவந்தது. இந்தத் துர்ப்பாக்கிய நிலைமை போகவேண்டும் என்று மொழி நூலும், உள நூலும் பயின்ற சிறந்த அறிஞர்கள் அவ்வப்பொது எடுத்துக் காட்டி வந்தனர். இதனை அரசாங்கம், போதிய முக்கியத்துவம் கொடுத்துக் கவனிக்கவில்லை. பொது மக்களும் இதன் உட்கருத்தைப் புரிந்து கொள்ளாமல் விட்டு விட்டனர். முடிவில் 'தலையெழுத்து' என்ற பெயரைச் சொல்லிக்கொண்டு, முன்போலவே ஆங்கில மொழியின் ஆதிக்கத்திற்கு உள்ளாகி வந்தோம். கடைசியாக, இதன்மூலம் அடைந்த பயன் மிகச்சிறிது என்பது யாவரும் அறிந்தது. ஆங்கிலக் கல்விக்கு நாம் கொடுத்துவந்த ஒரு போலி மதிப்பின் காரணமாய், தாய்மொழியில் எழுதுவதும், பேசுவதும் கௌரவக் குறைவு என்று நினைக்கும்படியான நிலைமைக்கு நாம் வந்திருப்பது ஒன்றே, நாம் அடைந்திருக்கும் பெருமை! கல்வியின் நோக்கம் எழுதப் படிக்கத் தெரிந்து கொள்வதல்ல; ஆனால் எது சரி, எது தப்பு என்பதை ஊகித்து அறிந்து கொள்வதேயாகும். இந்தக் கருத்தில் நமக்குப் போதனை அளிக்கப்பட்டு வரவில்லை. காலஞ்சென்ற வங்க நாட்டுப் பேரறிஞர் பி. ஸி. ரே குறிப்பிட்டதைப் போல நம்முடைய கல்வியின் மதிப்பீடு 40 ரூபாய்க்குள் அடங்கிக் கிடக்கிறது. இதுதான் உண்மை நிலைமை. ஆங்கிலக் கல்வியினால் நாம் அடைந்த சீர்கேடுகளையும், சாதக பாதகங்களையும் குறித்து ஸ்ரீ தத்தர் எழுதிய புத்தக மொன்றில், மிகத் தெளிவாக விளக்கி யிருக்கிறார். அடிமை நாடுகளுக்கு ஏற்பட்ட சாபக்கேட்டில் இதுவும் ஒன்றுபோலும்!

கடைசியாக, நம் மாகாணத்தில் முன்பு இருந்த காங்கிரஸ் மந்திரி சபை ஒரு நல்ல காரியத்தைச் செய்தது. தீமையிலும் ஒரு நல்லது கிடைக்கும் என்ற வாக்குப்படி, இந்தி கட்டாய மொழியின் மூலம் ஏற்பட்ட தீமையின் பயனாக, ஆங்கிலம் தவிர, ஏனைய பாடங்களைத் தாய்மொழியிலேதான் சொல்லிக் கொடுக்கவேண்டும் என்று உத்திரவு பிறப்பித்ததின் மூலம் நன்மை ஏற்பட்டது. இது சரியான பயனைப்

பெறுவதற்கு முன்பே. காங்கிரஸ் மந்திரி சபை பதவியிலிருந்து விலகிக்கொண்டுவிட்டது.

இப்பொழுது அதிகாரத்திற்கு வந்திருக்கும் புது காங்கிரஸ் மந்திரி சபையில் கல்வி மந்திரி பதவி வகிக்கும் ஸ்ரீ அவிநாசிலிங்கம் செட்டியார், போதனைக் கருவியான மொழி விஷயத்தில் சில நல்ல உத்திரவுகளைப் பிறப்பித்திருக்கிறார். இதனை நாம் முழுமனதோடு வரவேற்டதோடு, தமிழ் மொழிக்கு நல்ல காலம் ஏற்பட்டிருக்கிறது என்பதாகக் கருதி மகிழ்ச்சியடைகிறோம்.

ஸ்ரீ அவிநாசிலிங்கம் செட்டியார் விடுத்திருக்கும் உத்திரவுகளில் இரண்டு முக்கியமாய் இங்கே குறிப்பிட வேண்டியவைகளாகும். ஒன்று 5-ம் வகுப்பு வரையில் ஆங்கிலத்தை நீக்கி, தமிழ்மொழியிலேதான் பாடம் (தமிழ் நாட்டில் தமிழும், தெலுங்கு நாட்டில் தெலுங்கும் என்பது பொருள்) சொல்லிக் கொடுக்கவேண்டும் என்பது. பிறிதொன்று இதுவரை முதன்மொழியாக இருந்து வந்த ஆங்கிலத்திற்குப் பதிலாக, தமிழ்மொழி முதன்மொழியாக இருக்கவேண்டும் என்பதுமேயாகும். (தெலுங்கு, மலையாளம் கன்னட நாடுகளில் முறையே அப்பிரதேச மொழியில் போதனை நடப்பிப்பது)

முதல் உத்திரவின்டடி 5-ம் வகுப்பு வரை தாய் மொழியில்தான் ஒரு குழந்தை கல்வியைப் பெற முடியும். இதனால் குழந்தைக்கு சீக்கிரம் விஷயங்களைக் கிரகிக்கும் அறிவும் தாய்மொழிப் பற்றுதலும் ஏற்படுகிறது. இதன்காரணமாய் குழந்தையின் அறிவு வளர்ச்சி சீக்கிரமாக விரிவடைகிறது என்று உளநூல் அறிஞர்கள் கூறுகின்றனர். ஒருவேளை, இன்றுள்ள ஏற்றத் தாழ்வான சமுதாய அமைப்பில் 5-ம் வகுப்புவரை படித்துப் பள்ளியை விட்டு நிற்கும்படியான நிலைமையில் உள்ள குழந்தைகள், அதுவரை தாங்கள் பெற்ற தாய் மொழிக் கல்வியின் உதவியால் அறிவு நூல்களைப் படித்து முன்னுக்கு வர ஏது விருக்கிறது. (மேல் படிப்புக்கு இந்த நாட்டில யாருக்கும் பஞ்சம் இருக்கக்கூடாது என்பதுதான் நம்முடைய கருத்து)

இந்த உத்திரவு நமக்குப் புதியதாகத் தெரியலாம். ஆனால் நமது அண்டை நாடான இலங்கையில் இவ்வுத்திரவு சென்ற பல வருஷங்களாய் அமுலில் இருந்து வருகிறது என்பதையும் நினைப்பூட்டுகிறோம். இதன்மூலம் அங்கு நல்ல பலன் கிடைத்திருப்பதாகவும் தெரிகிறது.

இரண்டாவது உத்திரவின் மூலம் ஆங்கிலத்தின் மதிப்பு இரண்டாந்தரமாகக் குறைக்கப்பட்டு இருக்கிறது. இதன்



மூலம் தாய் மொழிக்கு ஒரு ஏற்றம் கொடுக்கப்பட்டு இருக்கிறது. இதுதான் நியாயமுங்கூட. மற்ற நாடுகளிலும் அவரவர்கள் மொழிக்குத்தான் முதல் இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. உதாரணமாக பிரஞ்சு நாட்டில் ஆங்கிலத்தை முதன் மொழியாக வைத்துக்கொள்வதற்கு சம்மதிப்பார்களா என்பதை யோசிக்தும்படி வேண்டுகின்றோம். இந்த இரு உத்திரவுகளின் மூலம் பொதுவாய் பிரதேச மொழிகளுக்கும், குறிப்பாய் தமிழ் மொழிக்கும், தமிழ் நாட்டுக்கும் செய்த நன்மைகளின் பொருட்டு கல்வி மந்திரியைப் பாராட்டுகின்றோம்.

மூன்றாவதாக உள்ளது ஆங்கிலம் தவிர, மற்ற பாடங்களைத் தாய் மொழியில் போதிப்பது என்ற விஷயம். இது விஷயமாய் நாம் கொண்டு இருக்கும் சில சந்தேகங்களையும் தெரிவித்துவிட விரும்புகிறோம். உதாரணமாக உலகத்தைப் பயமுறுத்திக்கொண்டு இருக்கும் 'அணுக்குண்டு' (Atom bomb) என்ற சொல்லுக்கு அணுநாசக்குண்டு, பரமாணுக்குண்டு, அணுராக்கினிக்குண்டு, அணுசக்திக்குண்டு, அணுவாதக்குண்டு என்றெல்லாம் சாதாரணமாய் வழங்கப்பட்டு வருகிறது. ஆங்கிலப் பதத்திற்கு வழங்கப்படும் நேரடியான தமிழ்ச்சொல் பல வடிவுகளில் இருக்கக்கூடாது. இதன்மூலம் மாணவர்கள் வீண் குழப்பத்தை அடைவார்கள். இன்று பள்ளிக்கூடங்களில் தமிழ் மொழியில் நடைபெற்றுவரும் பூகோ, பௌதிக சாஸ்திரப் பாடங்களில் உள்ள பதங்களைக் கண்டு நாம் பயப்படுகிறோம் அவை தமிழுமல்ல. அதே சமயத்தில் ஆங்கில விஞ்ஞானப் பதங்களுக்கு நேரடியான கருத்தைப் பிரதிபலிக்கும் சொற்களுமல்ல என்பதையும் எடுத்துக் காட்ட விரும்புகிறோம். அதாவது தசாம்ச பின்னம், அப்ஜனக வாயு, கந்தகிகா அமிலம், அப்ஜஹரிதகிகா அமிலம், பரிசோஷணம், ஸபுபுஜத்ரி கோணம் முதலான இன்ன பிற சொற்கள். இந்தக்குறையை நிவர்த்தி செய்வதற்கு தகுந்த தமிழ் அறிஞர்களைப் பொறுக்கியெடுத்து, சரியான கலைச் சொற்களைத் தமிழில் கண்டுபிடிக்கச் செய்யவேண்டும். இதன் மூலந்தான் மூன்றாவது உத்திரவின் முழுப்பயனையும் மாணவர்கள் அடைய முடியும். கலைச்சொற்களைக் கண்டுபிடிப்பதற்கு அதிக வருஷங்கள் பிடிக்குமாகையால், அதுவரை மேற்படி பதங்களை ஆங்கிலத்தில் இருந்துவரும்படி செய்வது சிறப்புடைத்தாகும். கடைசியாக, இப்புதுமாற்றத்தின் - கல்வித்துறையில் செய்யப்பட்டிருக்கும் புரட்சியின் வெற்றியானது, படிக்கும் மாணவர்கள், ஆசிரியர்கள, பெற்றோர்கள், எல்லாவற்றிற்கும்மேலாக அரசியலார் ஆகியோரின் ஒத்துழைப்புகளைப் பொறுத்து இருக்கின்றது என்று தெரிவிக்க விரும்புகின்றோம்.

**பிள்ளைகளுக்குத் தாய் மொழியில் போதனை செய்வதால், என்னென்ன விதமான அநுகூலங்கள் உண்டாகும் என்பதையும், சமீபத்தில் நம் கல்வி மந்திரி கல்வித் திட்டத்தில் செய்துள்ள மாறுதல் எவ்வளவு நன்மையுண்டாக்கும் என்பதையும் நன்கு விவரிக்கும் இந்த அருமையான கட்டுரையை ஊன்றிப் படியுங்கள்.**

# தாய் மொழியில் போதனை

**திருமலை-இராமாநுஜன்**

★

தமிழிலே, எழுதவும்-படிக்கவும் தெரியாத பாமரத் தொழிலாளி, தெருக்கூட்டிக் கொண்டிருக்கிறான். பக்கத்து வீட்டிலே குழந்தையைக் கொஞ்சும் தாய்; தன் குழந்தையை 'கண்ணே வா' என்கிறது, அவன் காதிலே விழுகிறது. விழுந்த அளவிலே, 'கண்ணே' என்று அழைத்த தாயின் நெஞ்சிலே நிறைந்த, அன்பு, ஆர்வம்-உணர்ச்சியாவும், அவனுக்குப் புலனாகி விடுகிறது. "குழந்தையைக் 'கண்ணே' என்றது உவமையா-உருவகமா? 'கண்' என்றதனால் கிடைத்த பொதுத் தன்மை என்ன?"—என்பன, போன்ற நுட்ப விஷயங்களை-'அறியும் ஆற்றல்' அவனுக்கு இல்லாதிருக்கலாம்! அது வேறு விஷயம். சொல்லின் பொருள்; பொருளின் கருத்து 'கருத்திலே செறிந்த அன்பு-அன்பு நிறைந்த நெஞ்சினது ஆழம்-இவை யாவும், அவனுக்கு உடனடியாகப் புலனாகி விட்டது. இதே விஷயத்தை-மற்றொரு அன்னியன்-பிறமொழியாளன், கேட்பதாக வைத்துக் கொள்ளுவோம். அவன் சொல்லின் பொருளைக் 'கற்றுத் தெரிந்தவன்' தான். அதன் உணர்ச்சி வேகம், தாய் மொழியாளனுக்குப் போல் அவனுக்குப் புலனாக மாட்டாது. தமிழறிந்த ஆங்கிலப் பாதிரி, அகராதியைப் புரட்டி, 'என் கண்ணே வா' என்ற இடத்தில், கண்ணுக்குக் காணும்-'பிரதி பதங்களை' எல்லாம் அமைத்து, 'என் அக்கே வா'-'நேத்திரமே வா'-'விழியே வா'—என்றெல்லாம், அமைத்து வழங்கி விடுவான். காரணம், சொல்லின் உணர்ச்சி வேகத்தை அறிவதென்பது தாய் மொழியாளனுக்கு இயல்பாகவே அமைவது. பிறமொழியாளனுக்கு அப்படி இல்லை. நமக்கு ஆங்கிலமும் இப்படித்தான்.

இப்படித் தாய்மொழியானது, அவரவரது நெஞ்சை ஒட்டினின்று உணர்ச்சி செய்யும் திறத்தாலேதான், எல்லா விஷயங்களையுமே, தாய் மொழியில் பயிலுவது சிறந்ததென்றும், 'பிறமொழியிற் பயிலுவதெல்லாம் 'தாய்மொழிப் போதனை'யைப் போல் 'நேர் போதனை'யாகாது 'மொழி பெயர்ப்புப் போதனை' முறையே ஆகும் என்றும்; ஆங்கிலம் ஒழிந்த மற்றைய பாடங்களை மாணவர்கள் தாய்மொழி மூலம் பயிலுவதே நல்லது என்



றும்;—கற்றுவல்ல பெரியோர்கள் தெரிந்து முடிவு செய்திருக்கின்றார்கள்.

இதை ஒட்டி, நம் நாட்டிலே கடந்த காங்கிரஸ் மந்திரி சபையானது, எல்லாக் கலாசாலைகளும் "ஆங்கில மொழிந்த பிறபாடங்களைத் தாய் மொழியிலேயே போதிக்க வேண்டும்' என்று உத்திரவிட்டது. உஸ்மானியா சர்வகலாசாலையிலும், பாட்னா சர்வகலாசாலையிலும்-பெரும் 'கல்லூரி வகுப்புக்களில்' கூடத் தாய்மொழிப் போதனைத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவந்து நடைமுறையிலே நடத்தி வருகின்றார்கள். நம் நாட்டிலோ, சென்ற காங்கிரஸ் மந்திரி சபை கலைந்த உடனே, பல கலாசாலைகள் இம்முறையைக் கைவிட்டு, மறுபடியும் 'வேதாளம் முருக்க மரத்தில் ஏறிக்கொண்ட' கதையிலே, 'ஆங்கில மூல போதனை'யை மேற்கொண்டுவிட்டன. இதைக் குறிப்பிட்டு, தற்போதைய கல்வி மந்திரி அவர்கள் மிக வருத்தத்துடன், இனி அப்படிப்பட்ட விதிவிலக்குத் தரப்படமாட்டாது என்று கண்டிப்பாய்ச் சொல்லிக் கல்லூரிகளில் கூட 'தமிழிலே நடத்த வேண்டும்' என்று திட்டமிட்டு நடைமுறையிலே கொண்டுவர நல்ல முயற்சிகளை எல்லாம் எடுத்து வருகின்றார்கள். நல்ல தமிழ்ப்பற்றோடு கூடிய அவர்களது முயற்சியை முழு மனதுடன் நாம் வரவேற்பதுடன், அவர் நெஞ்சிலே எழுந்துள்ள 'தமிழ்க்கனல்' அவியாது அணையாது ஒளிர வேண்டுமாய் விரும்புகின்றோம். இப்படி விரும்பி வரவேற்பது உண்மைத் தமிழர் ஒவ்வொருவரது கடமையுமாகும்.

இந்த நிலைமையிலே, நாடும் நகரமும் போற்றி வரவேற்க வேண்டிய ஒரு திட்டம், 'சென்ற முறை காங்கிரஸ் மந்திரி சபையால்' கொண்டுவரப்பட்டும் நல்ல பலனளியாமல் போனதன் காரணம் என்ன? திட்டத்தின் குறையா அல்லது அநுஷ்டித்த மார்க்கத்தின் சீர்கேடா?—என்பன போன்ற சில விஷயங்களை நன்கு பரிசீலனை செய்வது இனிமேலாவது நமக்கு நல்ல வழிகாட்டியாய் இருக்கும்;

முதலிலே 'தாய் மொழிப் போதனைத் திட்டம்' கேவலம் படிக்கும் மாணவர்களை மட்டும் பொறுத்ததல்ல. போதிக்கும் 'ஆசிரியர்கள்-படிக்கும்-'மாணவர்கள்' படிக்கவைக்கும் 'பெற்றோர்கள்'-வேலை கொடுக்கும் - 'அரசியலார்' - ஆகிய நால்வரையும் மிகப் பெருத்த அளவில் பாதிக்கும் ஒரு 'சீர்திருத்தம்' என்பதை, நன்றாக மனதில் இருத்திக் கொள்ளவேண்டும். எனவே, இச் சீர்திருத்தம் நல்ல முறையிலே பலனளித்துச் சிறக்க வேண்டுமானால் இந் நால்வர் ஒத்துழைப்பும் பரிபூரணமான முறையிலே கிடைக்க வசதி முதலிலே செய்துகொள்ள வேண்டும். ஒரு சாரார் எதிர்ப்பிருந்தாலும் பயனில்லை. யாருக்கு நன்மை செய்கின்றோமோ அவர்கள் அல்லவா, அதை நன்மை என்று கருதி ஏற்றுப் போற்ற வேண்டும்?

இத்திட்டத்தை மாணவர்கள் என்றென்றும் ஏற்றுப் போற்றியே தீருவர். மந்திரி சபையிடம் உள்ள நம்பிக்கையைக்

காட்ட வேண்டியோ அல்லது தேச பக்திப் பாசத்தாலோ அல்ல; 'தாய் மொழியிலே தெரிந்து கொள்வது' என்ற நிலை வந்து விட்டால் தெரிந்ததைக் கண்டிப்பாய் எழுதிவிட முடியும். தெரிந்து கொள்வதும் எளிது. இந்த 'சாதகம்' மாணவர்கட்கு 'தாய் மொழிப் போதனையிலே உண்டு. ஆங்கிலம் 'மூல' போதனை மொழியாய்' இருந்தால் தெரிந்து கொள்வதும், தெரிந்ததை எழுதுவதும் கூட மிகக் கஷ்டம். இது பொய்யும் புனைந்துரையுமில்லை. கண் கூடாக அநுபவத்திற் குட்பட்ட விஷயம். கடந்த ஆண்டு சர்வகலாசாலைப் பரீக்ஷையில், இண்டர் மீடியேட்-பௌதிக சாஸ்திர வினாத்தாளில் ஒரு மாணவர் 'ஆங்கில இலக்கிய பாடத்தில் படித்துப் பாடம் செய்த-வெனிஸ்வர்த்தகன் கதையை' எழுதிவிட்டு வந்தது நானறிவேன். கல்வியிலே கைதேர்ந்த நிபுணர்கள் அடங்கிய சர்வகலாசாலை இது பற்றித் தீர்க்கமாகச் சிந்தித்திருந்தால் உண்மையிலே செய்ய வேண்டியதென்ன? தாய் மொழிப் போதனையாக மாற்றி விடுவதுதான் வழி. இப்படிப் பல துறையிலும், சாதகமடையும் மாணவர்களிடையே இத் திட்டம் பற்றி உண்மையிலே நிலவிவரும் கருத்தென்னவென்று தெரியவேண்டும். அவர்களுடைய முழு ஆதரவைப் பெறும் நிலையிலே இத் திட்டம் வெற்றி பெற்று விடவில்லை. அவர்கள் எல்லாம் சர்க்கார் சட்டத்தால் நடுத்தரக் கலாசாலைகளாகிய 'ஹைஸ்கூல்களிலே' தமிழில் படித்துத் தேர்ந்தார்கள். கல்லூரியிலே மேற்படிப்புக்குச் சென்றபோது ஆங்கிலமாகிய அன்னிய மொழியிலே தான் படிக்க வேண்டியதாயிற்று. காரணம், சர்வகலாசாலையாருடைய திட்டம் ஆங்கிலத்திலேயே படிக்கவேண்டும் என்பது. இப்படி இரு வேறு பிளவுகள் போதனா முறையிலே இருந்து விடுமானால் படிக்கும் மாணவர்களது இடர்ப்பாடு மிகமிகப் பெரிது. எனவே "மாணவர்களில் சிலர் கல்லூரிகளில் ஆங்கிலத்திலேயே படித்துத் தீரவேண்டி வரும்போது ஹைஸ்கூலில் மட்டும் தமிழில் படித்துவிட்டுப் பின்பு தடுமாறுவானேன். இப்போது முதற் கொண்டே ஆங்கிலத்தில் படித்தே தொலைத்து விடுவோம் என்று கருதி ஆங்கில போதனை வகுப்புக்களைச் சிருஷ்டிக்குமாறு அதிகாரிகளை வற்புறுத்துகிறார்கள். இப்படியாகவே பல பள்ளிக்கூடங்களில் ஆங்கில போதனைத் திட்டத்துடன் கூடிய வகுப்புக்களை ஏற்படுத்தி விதிவிலக்கும் பெற்றிருக்கிறார்கள். எனவே முதல் முதலில் இச்சீர்திருத்தத்தை கல்லூரி வகுப்புக்களில் இருந்து தொடங்கி, 'ஹைஸ்கூலுக்கும் காலேஜுகளுக்கும்' போதனை மொழியிலே 'பிளவேற்படாமல்' பார்த்துக் கொண்டிருக்க வேண்டும்.

இத்திட்டத்தை முதன் முதலிலே நடை முறைக்குக் கொண்டுவந்த கடந்த காங்கிரஸ மந்திரிசபை இதுபற்றி அக்கரை கொள்ளவில்லை. அதற்குத் தலையாய காரணம், 'இந்தி மொழியைக் கட்டாய பாடமாக்குவதால், நாட்டிலே நியாயமாக ஏற்படக்கூடிய எதிர்ப்பைச் சமாளித்துக் கருத்தை மாற்றும் அளவிற்கு ஒரு கருவியாகவே, 'தாய் மொழிப் போதனைத் திட்டத்தைக் கொண்டுவந்தார்கள் என்பது. மற்றொன்று சர்வகலாசாலையின் அமைப்பு நிலைமை சர்வகலாசாலையானது மேனாட்டுக் கேம்பிரிட்ஜையும், ஆக்ஸ்போர்டையும் நம் மாகாணத்தில் கொண்டுவந்து விடவேண்டும் என்று கருதும் ஆங்கிலப் பட்டதாரிகளாகிய பேராசிரியர்கள் அடங்கிய அவர்கள் செல்வாக்கே செலாவணியாகும் படியான-சர்க்காரின் பரிபூரண அதிகாரத்திற்கு உட்படாத ஒரு சங்கம், நாட்டு மக்கள் கருத்தறிந்து நடந்து விடும் நிலையிலே, அதை மாற்றியமைக்க காலம் சென்ற கல்வி மந்திரி கனம் பாத்ரோ அவர்கள் எவ்வளவோ முயன்று நகராண்மைக் கழகங்களினின்றும்-முனிசிபாலிடிகளினின்றும் பிரதிநிதிகள் சென்று பங்கெடுத்து மாற்ற வசதி செய்தும் கூட இன்னும் பேராசிரியர்மார் ஆட்சி அதில் குறைந்து பொது மக்கள் கருத்துப் பிரதி பலிப்பதில்லை. அதிலும் மற்றைய சர்வகலாசாலைகள் மனமாறி ஒப்புக் கொண்டாலும், நம் சென்னை சர்வகலாசாலை ஒருநாளும் மனமுவந்து ஏற்று மாறுதல் செய்ய ஒருப்பட மாட்டாது. தாய் மொழியிலே பிறபாடங்களைப் போதித்தால் 'ஆங்கில பாஷையின் விகிதாசாரஞானம்'—மாணவர்களிடையே குறைந்து விடுமே என்று இரவு பகல் உறங்காமல் கண்ணீர் வடிக்கும் கூட்டத்தினர் பலர் நம் சர்வ கலாசாலைக் கல்லூரிகளிலே இருக்கின்றனர். அவர்களது முட்டுக் கட்டையை எல்லாம் மீறி சர்வகலா சங்கம் 'தாய்மொழி மூல போதனை'யைக் கட்டாய முறையிலே எல்லாக் கல்லூரிகளிலும் அமுலுக்குக் கொண்டுவருமாறு சட்ட மிடும் என்று நாட்டுமக்கள் நம்பிவிடுவதற்கில்லை. கல்லூரிகளில் தமிழ் மாணவர்கட்குத் தமிழ்ப் பாடங்களைத் தமிழிலே போதிக்கும், தமிழ்நாட்டுத் தமிழாசிரியர்கட்கே, "ஆங்கிலத்தில் ஐந்து வினாத் தாள்கள் கட்டாய முறையிலே எழுதித் தேறும்படி, 'ஆங்கிலத் தமிழ்ப்பாடத்திட்டம் அமைத்து, தமிழை ஆங்கிலத்தோடு போற்றி வளர்பதற்குப் பதிலாக மாற்றி வளர்த்து அப்படிப்படித்த ஆசிரியர்களாகிய 'ஆங்கிலத் தமிழ்ப் பண்டிதர்களைத்' தனித் தமிழ்ப் பண்டிதர்கள் தலைமேல் போட்டு, பிற ஆசிரியர்கட்கு ஒத்த சம்பளம் அவர்கட்கு மட்டும் கொடுக்கப்பட வேண்டும்"—என்று கல்லூரிகட்குச் சுற்றறிக்கை அனுப்பியிருக்கும் நம் சர்வகலாசாலையார்கள் தனித் தமிழுக்கு ஆக்கம் தரும் மொழிய போதனை'யை ஒப்புக்கொண்டு சீர்திருத்தம் செய்ய முற்படுவார்களே ஆனால், அதை ஒரு பெரிய யுகப் புரட்சியாகவே காணமுடியும்." எனவே, இத் திட்டத்தை மாணவர்கள் மனமுவந்து ஏற்கும்படி செய்ய வேண்டுமானால், தற்போதைய 'கனம் மந்திரி' அவர்கள் முதலிலே சர்வகலாசாலையார் மூலம், கல்லூரிகளிலும் இத்திட்டத்தை நடை முறையில் கொண்டுவர முயற்சிப்பது அவசியமாகும்.

இனி அடுத்தபடி ஆசிரியர்கள் விஷயத்திற்கு வருவோம். நாம் நூற்றைம்பது வருஷங்களாக, ஆங்கிலத்தைப் படித்துத் தேர்ந்து வருகிறோம். நோக்கம் எல்லாம் பிறர் சொல்வதைப் புரிந்து கொண்டு பேசவும் எழுதவும் வரும்படியான 'நடை முறை

அறிவு' பெறுவதும், அதன் பயனாய் 'சர்க்கார் உத்தியோகம்' பார்ப்பதும்-ஆகிய இரண்டைத் தவிர வேறில்லை. ஆண்டு தோறும், நாலாயிரம் ஐயாயிரம்' என்று தேறும் பட்டதாரிகளிலே, எத்தனையர் 'ஆங்கிலப் பேரிலக்கியங்களை' சுவைத்துணரும் நோக்கோடும் போக்கோடும் கல்வி கற்றுத் தகுதியுடையராய் வெளிவருகின்றனர்? இந்த 'நடைமுறை அறிவு' பெறுவதற்கே. தாய்மொழியைப் புறக்கணித்து, நாலாம் வகுப்பு முதல் பி. ஏ முடிவுவரை-பல ஆண்டுகள், ஆங்கிலத்தை முதல் மொழியாய் வைத்து மரியாதை செய்தும் அதன் மூலமே பிறபாடங்களை எல்லாம் படித்தும் அதற்கென அதிக நேரங்கள் பள்ளிகளில் ஒதுக்கியும் என் அது போதிக்கும் ஆசிரியர்கட்குக் கூட அதிகச் சம்பளம் கொடுத்தும் படித்து வந்திருக்கிறோம். இது நாட்டறிந்த செய்தி? இவ்வளவு பெருமைகளும், நம்மை ஆளும் மொழி' என்பதனால் அதற்கு ஏற்பட்டுள்ளது. இந்தச் சூழ்நிலையிலே, ஆங்கிலத்தை முதன் மொழியாகப் போற்றிப் படித்து அதிலே அன்புகுன்றாதிருக்கும் 'ஆங்கிலப் பட்டதாரிகளாகிய எல். டி.களைக் கொண்டு, 'ஹைஸ்கூல்களிலும்' எம். ஏ.க்களைக் கொண்டு கல்லூரிகளிலும், தமிழிலே நடத்துங்கள்' என்று சொன்னால் பிழை திட்டத்திலே உளதென்று கொள்ள வேண்டியதே ஒழிய, அன்னிய மொழி கற்று ஓரளவு அன்னியர்களாகவே மாறிவிட்ட அவர்கள் மீது குறைகூற வழி இல்லை. அவர்களால் எதையும் தன் மொழியிலே சிந்திக்கவும் சொல்லவும் கூடுவதில்லை. அன்னிய மொழிப் பயிற்சியால்!! உடனே அவர்கள் எல்லாம் கூட்டங்கூடி, "தமிழிலே சொற்களில்லை. தகுதியான பாடப் புத்தகங்களில்லை. தமிழர்க்கு இப்பூத பௌதிக அறிவுகளே" பழங்காலத்தில் இருந்ததில்லை தமிழிற் சொன்னால் மாணவர்கட்கு விளங்காது. விளங்கினாலும் ஆங்கிலத்தில் சொல்லிப் புரிவது போல் புரியாது" என்று தீர்மானம் செய்து தங்கள் குறையைத் திட்டத்தின் மேலும் நாட்டின மேலும் மொழியின் மேலும் மாணவர்கள் மேலுமாகச் சரிபாகம் பகிர்ந்து ஏற்றித் தங்கள் 'புலமையை' நிரூபித்து விடுகிறார்கள். சாதாரணக் குடியானவர்களை ஆலையிலே சென்று. ஆய்ந்தோய்ந்து அலுத்து வந்த காலத்திலே வெட்ட வெளியிலே கூட்டி நிறுத்தி அவர்களும் புரிந்து கிளர்ச்சி பெறும் முறையிலே ருஷியப் பொதுவுடைமைத் தத்துவம், ஸ்டர்லிங் நிதி விவரம், பொருளாதாரச் சமநிரவல் வகை, மேனாட்டு அரசியல் திட்ட நுணுக்கங்கள் ஆகிய பல வேறு விஷயங்களைச் சாதாரண தேசிய வாதிகள் தமிழ் ஒன்றே தெரிந்தவர்கள் சொல்லி வெற்றி பெறக் காண்கிற நாம் சர்வகலாசாலையிலே பயின்று பட்டங்கள் பெற்று நீடித்த நாள் ஆட்சி அநுபவங்களுடன் கூடிச் சிறக்கப் பெற்ற பேராசிரியர்களாகிய தமிழர்கள் கல்லூரியில் படிக்கவரும் மாணவர்கட்குத் தமிழிலே சொல்லிக்கொடுக்க இயலாதவர்களாய்த் திட்டத்தைக் குறைகூறும் நோக்கத்தோடும் இருக்கிறார்கள் என்பதைக் கேட்கும்போது வெட்கித் தலை குனியத்தான் வேண்டி வருகிறது!!



பிறமொழிப் பயிற்சி எவ்வளவு தூரம் நம்மவரை மாற்றி விடுகிறது என்பதற்கு இவர்களுடைய உதாரணமே போதும்! மேலும், தமிழிலே பிறபாடங்களைப் போதிப்பதென்றாலும் அதற்கும் தமிழறிவு சற்று அதிகமே வேண்டும் என்று அறிவது தகும். இன்னும் தெளிவாகச் சொல்லப்போனால் பி. ஏ வகுப்புவரை தமிழ் முதன் மொழியாக வந்து அதிலே கற்றுத்தேர்ந்த பட்டதாரிகளாலேயே தாய் மொழிப் போதனையைச் செவ்வையாகக் கொண்டு செலுத்த முடியும் என்பதையும் நிச்சயமாக நம்பலாம். ஆகவே இப்போது விஷயத்தை வேறு விதமாகப் பரிசீலனை செய்ய வேண்டியது அவசியமாகிறது. தேசிய கௌரவத்திற்குப் பங்கம் வராத முறையிலே தாய் மொழியை முதன் மொழியாக இருந்துவர அநுமதிப்பதா? என்பதைத் தீர யோசித்து முடிவு செய்ய வேண்டுவது முதலிலே அவசியம். தாய் மொழியே முதன் மொழியாக இருக்க வேண்டும் என்று தன் மான உணர்ச்சியுடன் நாம் முடிவுகட்டி அமுலுக்குக்கொண்டுவரச் சட்டமிடுவோமானால் இதுபற்றிய பல தொல்லைகள் தாமே நீங்கிவிடும். இல்லை ஆங்கிலமே முதன்மொழி என்ற நிலை இன்னும் நீடித்திருக்க அவசிய முண்டானால், இச்சீர்திருந்தங்களைத் தேசபக்திப் பாசங் காரணமாகப் புகுத்துவதில் பொருளும் பொருத்தமும் இராது. ஒரே துணிவாகச் சென்னைச் சர்வகலாசாலையார் செய்துள்ளது போல் தமிழையே ஆங்கிலத் தமிழாக மாற்றியமைக்க மந்திரிமார்களும் சட்டமிட்டு விடலாம்! அதை முக்கிய பிரச்சினையாக மதித்துத் தமிழையே முதன் மொழியாக்கிக் கல்வி பயிற்றும திட்டத்தைத துணிவுடன் மேற்கொண்டால் ஆங்கிலத்தையே தமிழாக்கிப் படித்துப் பயனடையும் நிலையில் நாடிருந்துவிடும். பின்னர் ஆசிரியர்மார்களின் எதிர்ப்பே இருக்க முடியாது.

ஆங்கிலம் இன்று அரசாங்க மொழி. கோர்டு நாடு நடவடிக்கைகள் எல்லாம் அதிலே தான் இருக்கின்றன. பையன்களைப் படிக்கவைக்கும் பெற்றோர்கள் நோக்கம் என்னை? ஆங்கிலம் கற்று நம் பிள்ளை உத்தியோகம் பெறவேண்டும் என்றே கருதுகிறார்கள். அப்படிக் கருத்துடைய பெற்றோர்கள் இத்திட்டத்தால் தங்கள் பிள்ளைகள் ஆங்கில ஞானமே கற்று உத்தியோகத்திற்குத் தகுதி அற்றவர்களாய்ப் போய்த் தவிப்பார்களோ என்று பயந்து நடுங்குகிறார்கள்; இவ் வகையால் ஆங்கிலம் ராஜ பாஷையாய் இருந்து செல்வாக்குப் பெறும் வரையும் தாய் மொழி மூல போதனைக்கு அவர்கள் எதிர்ப்பும் இருந்துதான் தீரமுடியும். அப்பொழுது செய்ய வேண்டியதென்ன? கோடு நாடு நடவடிக்கைகளையும் நாட்டு மொழியிலே நடை பெறும்படி மாற்றியமைக்க வேண்டும். உடனடியாக முடியாவிட்டாலும் நாளடைவில் மாறித்தீரும் என்ற அசையா நம்பிக்கையை நாட்டு மக்களிடையே ஊட்டத் துரிதமான மாற்ற முறைகளைச் சிறுகச் சிறுக இப்போது முதற்கொண்டே நடைமுறையில் கொண்டுவந்துவிட இந்த மந்திரி சபையாவது முயற்சிக்கவேண்டியது அவசியமாகிறது. இந்நிலை மாறாமல் போதனைக் கருவி மொழியை மட்டும் மாற்றி

யமைக்கச் சட்டமிட்டு முயல்வது உடலமைப்பை மாற்றாமல் முகத்தை மட்டும் குரங்கு முகமாக்கி மனிதனைக் குரங்காக மாற்றியமைக்க முயலுவதற்கு ஒப்பாகும்!

இன்னும், இம்முறையால் போதிய பயன் கிட்டி நாடு நலம் பெற வேண்டுமாயின், "மாகாணங்கள் பாஷாவாரியாகப் பிரிபடுவதுகூட" உடனடியான அவசியம்-என்று துணிந்து கூறமுடியும். இல்லாவிட்டால் பலனில்லை. ஓர் உதாரணம் பாருங்கள். மதுரையிலே 'அமெரிக்கன் கல்லூரிகளை' எடுத்துக் கொள்வதிலும் பிழை இல்லை. அங்கெல்லாம், 'பூத பௌதிக பாடங்கள்' போதிக்கும் ஆசிரியர்கள் மேனாட்டாராகக் கூட இருக்கிறார்கள். அவர்களை எல்லாம் நாட்டு மொழிகளிலே போதிக்கும்படி எப்படி நிர்ப்பந்தப் படுத்த முடியும்? முடிந்தாலும், நம் தமிழனே தமிழில் போதிப்பது முடியாது என்று சொல்லும்போது - அவர்களைப் பற்றி நாம் என்ன சொல்ல முடியும்? சிந்தியுங்கள். இப்படியே, பல கல்லூரிகளில், தமிழ் நாட்டுக் கல்லூரிகளில், தெலுங்கர், கன்னடியர், மலையாளிகள் - யாவரும் ஆங்கிலங்கற்றுப் பேராசிரியர்களாய் அமர்ந்திருக்கிறார்கள். தமிழிலே போதியுங்கள், என்றால் அவர்கள் கதி என்னவாகும். மாணவர்கள் விஷயமும் இப்படியேதான் தமிழ்நாட்டுக் கல்லூரிகளிலே, தெலுங்கு, மலையாளம், கன்னடம்-இவற்றைத் தாய் மொழியாகக் கொண்ட மாணவர்கள் பலர் படிக்கிறார்கள். தமிழிலே போதித்தால், அவர்கள் நிலை என்ன?-இப்படிப்பட்ட பல தொல்லைகளையும், சிந்தித்து முடிவு காண வேண்டியது அவசியம். இவையாவும் முற்ற நீங்கி-முயற்சி பலனளிக்க வேண்டுமானால், 'பாஷாவாரி மாகாணப் பிரிவினையும்' அவசியம் ஏற்பட்டே தீர வேண்டும் என்ற நிலை யேற்படுகிறது.

எனவே, முடிவான கருத்தாகச் சொல்ல வேண்டுமானால், முற்கூறிய பிரச்சினைகளை எல்லாம் தீர யோசித்து முடிவுகட்டி, அம்முடிவுகளை நடை முறையிலே கொண்டு வந்தால்தான்-'தாய் மொழிப் போதனைத் திட்டமா'னது, ஆசிரியர்கள் - மாணவர்கள்-பெற்றோர்கள், அரசியலார்கள், என்ற எல்லாருடைய ஒத்துழைப்பையும் பெற்று இனிய பலனளிக்கும் என்று துணிந்து சொல்லிவிடலாம். உடனடியாக, தமிழ்-தமிழினம்-தமிழ் நாடு, தமிழரசு-முதலியவற்றைப் பற்றி நாட்டு மக்களது பற்றினைத் தன் மான உணர்ச்சியோடு கூடித் தூண்டிவிடக்கூடிய மற்றைய மாறுதல்களையும் கையோடு ஏற்படுத்திக் கொள்ள வேண்டியது. மேற்படி சீர்திருத்தம் முனபுபோலல்லாமல், இனியேனும் வித்தூன்றி வளருவதற்கு ஏற்றதொரு மார்க்கமும் ஆகும்.

இப்படிப்பட்ட, பல பிரச்சினைகளையும் சேர்த்துத் தற்போதைய கல்வி மந்திரி அவர்கள் கவனித்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. முதலாவது பாரம் வரையும் ஆங்கில போதனையை மாற்றி யமைத்து, அதனிடத்திலே தாய் மொழிப் பயிற்சிக்கு ஆக்கம் தேடிச் சட்டமிட்டிருப்பது-அதன் அறிகுறி. இவ்வுத்திரவு நான் முற்கூறியபடி, மேற்காட்டிய நான்கு பகுதியாரிடமும்

பிரசித்தி பெற்ற பிரஞ்சுக் கதாசிரியரான 'அனடோல் பிரான்ஸ்' எழுதியுள்ள "கிரான் குபில்" என்ற நாடகத்தை நமது பிரபல எழுத்தாளர் முகம்மது கனி தமிழ்ப்படுத்தியிருக்கிறார்.

# அப்பாவி வேலன்

"கனி"

★

வேலன்:—காய்கறி வியாபாரஞ் செய்யும் கிழவன்.

கணபதி:—பத்திரிகை விற்கும், கூலி சுமக்கும் சிறுவன்.

164:—போலீஸ்காரன் தடிவீரன்,

235:—இன்னொரு போலீஸ்காரன்.

மன்னார்சாமி:—மாஜிஸ்டிரேட்.

இன்னும் வேலன் வக்கீல், ஹக்கீம் சாகிபு, பொரிகடலைக்காரன், செருப்புக்கடைக்காரி பொர்த்தாச்சி, மற்றும் பலர்.

## முதல் காட்சி

பெரியகடை பஜார். வருவோரும் போவோருமாக இருக்கின்றனர். வேலன் ஒரு தள்ளு வண்டியில் காய்கறிகளை நிரப்பிக் கொண்டு வருகிறான்.

வேலன்:—முட்டைக் கோஸ், மிளகாய், கத்தரிக்கா......

[இப்படிச் சத்தமிட்டபடியே வண்டியைத் தள்ளுகிறான். கணபதி அவனைச் சந்திக்கிறான்.]

கணபதி!—பாட்டையா, என்ன இண்ணக்கி ஒரு பாடு காகறி கொண்டாந் திருக்கேபோல் இருக்கே!

வேலன்:—என்னடா கணபதி, சாப்பிட்டியாடா?

கண:—இல்லியே தாத்தா. இனிமே ஏதாச்சும் சுமை எடுத்துத்துட்டு வாங்கித்தான் சாப்பிடப் போவணும்.....

---

தமிழ்' உணர்வைக் காண்பித்து, மனமாற்றம் அடையச் செய்து இருக்கிறது. இப்படியே, தமிழை முதன் மொழியாக்கியும்-கோடு நாடு நடவடிக்கைகளைத் தமிழில் மாற்றியும்-கல்லூரிகளிலும் தாய் மொழி மூலபோதனைத் திட்டத்தை ஏற்குமாறு செய்தும்-திருத்த முயன்றால் நாடு நலம் பெறும். இதனால் பயன் பெற்ற வருங்காலத் தமிழுலகம், மற்றுமொரு முறை சங்க காலத்தைக் கண்டு களிக்கும். அந்நாள் வெகு தொலைவில் இல்லை என்பதை நாடோறும் நாட்டில் நடைபெறும் நிகழ்ச்சிகள் நமக்கு உறுதிப் படுத்திக் கொண்டிருக்கின்றன. அவ்வுறுதியிலே நம்பிக்கை கொண்டிருந்து, செயலாற்ற முனைவது தமிழர் கடன்; தமிழ் வாழ்க!

வேலன்:—(மடியிலிருந்து துட்டெடுக்கிறான்) இந்தாப்பா, அரையணா கொண்டுபுட்டு வாங்கித் திண்ணு. பீடி கீடி வாங்காதே.

கண:—தாத்தா, உன்னமாதிரி தங்கமான ஆளைப்பாக்கவே முடியாது! வவுறுகாயுது, நானு பீடி வாங்குவேன் (துட்டைக் காதில் செருகிக்கொண்டு போகிறான் கையில் பையோடு ஒரு சிறுமி வருகிறாள்.)

சிறுமி:—முட்டைக்கோஸ் நல்லதா வெச்சிருக்கியா?

வேலன்:—இருக்கும்மா கொளந்தே! நல்ல தள்தள்னு இருக்கு. எம்புட்டும்மா வேணும்?

சிறுமி:—அப்பாவுக்கு உடம்பு சொகமில்லே. உங்கிட்டே ஒரு ராத்தல் முட்டைக்கோஸ் வாங்கி வரச் சொன்னாு.

வேலன்:—(முட்டைக்கோஸை வெட்டி நிறுத்துக்கொண்டே) அப்பாவுக்கு என்னம்மா ஒடம்பு? இந்தா பாரு, உங்கப்பாவுக்கு குடுக்கறமாதிரியே உனக்கும் நிறுத்துத்தாரேன். கொடுக்கற துட்டு இல்லேன்னா வத்திக்காது பாரு (ஒரு இலையில் அதைப் பொதிந்து கொடுக்கிறான். சிறுமி காசு கொடுக்கிறாள்) என்னம்மா ராத்தல் மூணணா, இன்னம் அரையணா......

சிறுமி:—அப்பா இவ்வளவுதான் தந்தார்.

வேலன்:—மடியிலே பாரு இருக்கும்.

சிறுமி:—இல்லேண்ணேனே...

வேலன்:—சரி, போ, ஓடு, ஓரமாப்போ. (சேஷி வருகிறாள்.)

சேஷி:—என்ன இன்னிக்கி தக்காளிக்காய் நல்லதா வச்சி இருக்கியாடா வேலா?

வேல:—அம்மாளா? இருக்குங்க. எவ்வளவு நிறுக்கணும், ரெண்டு பவுண்டு போட்டடுங்களா? (தராசை எடுக்கிறான்.)

சேஷி:—இந்தத் தக்காளி நன்னாயில்லையேடா! இது கசக்குப்போல் இருக்கே?

வேல:—நல்லாச் சொன்னீங்க. கடலைப்பருப்புப் போட்டு கூட்டுவச்சா தேன்மாதிரி இருக்குங்களே. அம்மா எப்பவும் ஒரு குத்தம் சொல்லாம வாங்க மாட்டிய...

சேஷி:—சரிடா, ஓரணாவுக்குப் போடு (அவன் நிறுக்கிறான்) என்ன இருந்தாலும் எங்க கிராமத்துக்கு வருமா? எல்லாம் தோட்டத்திலேயே போட்டிருப்பேன். கத்திரிக்காய்ன்னா இளநீர் மாதிரி இருக்கும்...சரி ஒரு பலம் கூடப்போடு...இந்தா, நன்னா நிறு......

வேல:—அதெல்லாம் குறைச்சு நிறுக்கற வளக்கம் எங்கிட்டே இல்லீங்க. கொறயச் சொல்லி நெறைய அளஇங்கறது சொல்வடையாச்சே. புடிங்க.

சேஷி:—இன்னொருகா போடு.

வேல:—நீங்க இப்பிடிக் கசடாமப் போகமாட்டிய. போங்க (இன்னொருகாய் போடுகிறான். அவள் போகிறாள் அவன் தனக்குள்ளாகவே பேசிக்கொண்டு வண்டியைத் தள்ளிச் செல்கிறான்)



ரோக்கியமாப் பொளைக்கணும். பொய் சொல்லிச் சம்பாரிச்சா கடவுள் கண்ணையில்லா அவுச்சுப் போடுவாரு. (ஒரு செருப்புக் கடையிலிருந்த படியே ஒரு பெண் அவனைக் கூப்பிடுகிறாள். அந்தக் கடைமுன் வண்டியை நிறுத்துகிறான்.)

பெண்:—கீரைத்தண்டு கெட்டு என்ன வெலெ!

வேல:—ஒரு நாா் இருக்காது, வெண்ணெமாதிரி இருக்கும். கட்டு அரையணாத்தான்.

பெண்:—அணாவுக்கு மூணு போட்டுக் குடுக்கிறயா?

வேல:—அப்போ நான் தலைமேலே கையப் போடவேண்டியது தான்? என் அட்க்க வெலைக்கும் கொறச்சுக்கேட்டாக் கட்டுமா? (வண்டியைத் தள்ளப் பொகிறான்.)

பெண்:—போவுது, ஒண்ணேகாலணாவுக்கு மூணுகெட்டுக் குடு.

வேல:—(மூன்றுகட்டுக் கீரையை எடுக்கிறான்) சரி, இந்தாங்க முக்காத்துட்டுக்கா உங்களிட்டே நான் சண்டை போட்டுக்கிட்டு நிக்க முடியாது. சீக்கிரம் துட்டைப் போடுங்க போலீஸ்காரரு வாராரு.

பெண்:—(கீரையை வாங்கிக்கொண்டு) வெளியே சில்லறை இல்லே. உள்ளேபோய் காசு எடுத்தாறேன். நில்லு (அவள் உள்ளே போகிறாள். ஒரு போலீஸ்காரன் நெருங்குகிறான்.)

வேல:—அம்மா, சீக்கிரம் கொண்டாங்க.

போலீஸ்காரன் 164:—(கிட்டே வந்து) ஏன் வண்டியை இங்கே விட்டுக்கிட்டிருக்கே. இழு...உம்...

வேல:—துட்டுக்காக நிக்கேன் எசமான்!

164:—நான் உன்னைத் துட்டுக்காக நிக்கச் சொல்லலியே; இழுன்னு சொன்னா மண்டையிலே படலெ?

வேல:—இந்தச் செருப்புக்கடைக்காரப் பொம்பிளை கீரை வாங்கினா. அதுக்குத் துட்டுத்தரணும்......

164:—என்னப்பா, நான் என்ன சொல்தேன். நீ நிண்ணுக்கிட்டே இருக்கியே! நடு ரோட்டிலெயா வண்டியெ நிறுத்துவாங்க? இழு......

வேல:—அட கடவுளே இந்த நாப்பது வருசமா நானும் இப்பிடித்தானே பொளைக்கேன்? ஒண்ணேகாலணா போயிருமேண்ணு பாத்தா......

164:—(தன் நோட்டையும் பென்சிலையும் எடுத்துக்கொண்டு) சரி, உன் லைசென்ஸை எடு.

வேல:—லைசென்சா?

164:—ஆமா...காகறி விக்கிற லைசென்ஸ்.

வேல:—அது எங்கையிலே இல்லீங்களே.

164:—என்னடாது, லைசென்ஸ் இல்லியா?

வேல:—லைசென்சு இருக்குங்க. இப்போ இங்கே இல்லெ. முன்னாடி ரெண்டுவாட்டி அது பஜாரில் தொலஞ்சு போச்சு. அதுக்கு வேறெ முனிஸிபாலிட்டி காரங்களுக்கு எட்டணா அழ வேண்டிய திருந்துச்சு......

164:—உம் பேரு?

வேல:—அட கடவுளே, என் ஒண்ணேகாலணாவும் வராது போலிருக்கே! (தன் வண்டியைத் தள்ளுகிறான்.)

164:—நிறுத்துடா, நிறுத்தறியா என்ன?

வேல:—எசமான், நான் போயிட்ரேன்.

164:—இன்னிமேயா? நில்லுடா கழுதை! (இந்தச் சமயத்தில் 'ராங்சைடு'ல் வந்த ஒரு சைக்கிள் காய்கறி வண்டியில் மோதுகிறது. ஸைக்கிளில் வந்தவன் எழுந்து அதை உருட்டிக்கொண்டு போகிறான். ஒரு பாரவண்டி அதன் சக்கரத்தில் இடித்துக்கொண்டு போகிறது.)

164:—(கோபத்தோடு) பார்த்தியாடா, இதெல்லாம் உன்னாலே தான்.

வேல:—(வயிற்றெரிச்சலோடு) எல்லாம் அந்தக் கடைக்காரியாலெதான். அவ ஒண்ணேகாலணாவை ஒடனே தந்தா இம்புட்டும் ஏன்? (இதற்குள் அவர்களைச் சுற்றிப் பல திறப்பட்டவர்கள் கூடுகின்றனர். 164-க்குக் கோபம் பொங்குகிறது.)

164:—என்னை நீ செல்லாச்சல்லிண்ணு சொன்னீலடா? வா ஸ்டேஷனுக்கு.

வேல:—(திடுக்கிட்டவனாய்) என்னங்க, செல்லாச்சல்லியா?

164:—ஆமடா, நட...(பலர் சிரிக்கின்றனர்) நீதானடா சொன்னே?

வேல:—நானா? செல்லாச் சல்லிண்ணா?

164:—இன்னம் பாக்கி இருந்தாலும் திட்டிக்கோடா.

வேல:—அப்பிடி என்னங்க நான் செஞ்சேன்?

164:—செல்லாச்சல்லிண்ணு சொன்னதுமில்லாமல் என்ன செஞ்சேண்ணா கேக்கே? வாடா, ஸ்டேஷனுக்கு.

ஒருவன்:—(கூட்டத்தைத் தள்ளிக்கொண்டு வந்து) என்ன சங்கதி?

வேல:—அவுங்க சொல்றுங்க, நான் அவுங்களை (போலீஸ்காரனைப் பார்த்துத் திரும்பி) செல்லாச்சல்லி இண்ணு கூப்புட்டேனாம்.

164:—(டைரியில் ஏதோ குறித்தவாறே) இன்னம் எத்தினி வாட்டி வேணுமானாலும் சொல்லிக்கோ. அதுக்கு எக்ஸ்ட்ரா ஒண்ணுமில்லே.

வேல:—நான் நடந்ததைத்தானே எசமான் சொல்றேன்?

(தொடரும்.)

தேவகி மாதவனை மணஞ்செய்துகொண்டு கூடிக் களித்தது ஏழே நாட்கள்தாம்! அதற்குள் மாதவன் 'ரஜா' முடிந்து போர்முனைக்குத் திரும்ப வேண்டியதாயிற்று. இதனால் ஏற்பட்ட கொடிய பிரிவை—மூன்று வருடகாலப் பிரிவை—அவள் பொறுமையாகச் சகித்துவந்தாள், கணவன் கூடிய சீக்கிரம் தன்னை வந்து கூடுவான் என்ற நம்பிக்கையால்! ஆனால் மாதவன்......................?

# தேச சுதந்திரம்

ஆங்கிலத்தில் எழுதியது: **சித்ரபானு நம்பூத்ரிபட்**

தமிழ்ப் படுத்தியது: **அ. இளங்கோவன்**

★

அன்றிரவு அவள் அதிர்ச்சியடைந்தவளாய் ஒடுங்கிப்போய், உட்கார்ந்து இருந்தாள். அணைந்து போகும் விளக்கின் வெளிச்சம், அவள் முகத்தில் பட்டு அவள் உள்ளக்கிடக்கையின் ''வெள்ளை'க் கருத்தை வெளிப்படுத்திக்கொண்டு இருந்தது. அவளது துயரச் சாயல் வெளிச்சத்தின் நிழலில் தெரிந்தது. அச் சாயலில் இரக்கத் தன்மை கொண்ட எழில் நிறையப் பெற்றிருந்தது. துயரந் தோய்ந்த அவள் முகத்தில் உறுதி காணப்பட்டது.

வாழ்க்கையில் அவள் கடுமையான அடிகளைத் தாங்க வேண்டி வரும் என்பதை அச்சாயல் உணர்த்திற்று. அதை அவள் விதி என்று கருதிக் கொண்டிருந்தாள். "விதியின் பிடிப்பிலிருந்து யார்தான் தப்பிக்க முடியும்?" என்று தனக்குள்ளாகவே முணுமுணுத்துக் கொண்டிருந்தாள்.

இப்படியாக, ஏழு நாட்கள் சிந்தனைக்கடலில் ஆழ்ந்திருந்தாள். 'ஆம்! ஏழே நாட்கள் தான். எல்லாவற்றிற்கும் ஒரு முடிவு நிலை ஏற்படுவதைப்போல், அதன் பிறகு, அவளுடைய சிந்தனைக்கும் ஒரு முடிவு ஏற்பட்டது. அதுதான் அவளுடைய திருமண வாழ்வு. அவ்வாழ்க்கையும் சிறிதுகால வாழ்வுதான். இருந்தாலும் அதே சமயத்தில் அது நீண்டகால இணைப்புடையதாய் இருந்தது. கொஞ்சகால வாழ்வு. காரணம் அது வேகமாய் ஓடிவிட்டதுதான். நீண்டகால இணைப்புடையது என்பதற்குக் காரணம், அந்த நாட்களில் ஏற்பட்ட இன்ப நினைவுகளைப் போக்கடித்து விட முடியாமல் இருந்ததும், அதன் சில ஞாபகங்கள் அவளது மரணப்படுக்கையிலும் கூட, நினைவு கொள்ளக்கூடியதாய் இருந்ததுமே தான்.

அந்த ஏழு நாட்கள்! அவற்றைப் பிடித்து விடுவதற்கு அவள் முயற்சித்தாள். அவை தங்கச் சிறகடித்துக்கொண்டு அவளிடம் வந்து நின்றன.

பூரணச்சந்திரன் பொன்னிறக் கிரணங்களை வெளியே பரப்பி, உல்லாசமாய்ப் பவனி புறப்பட்ட ஒரு நல் இரவு. அன்றுதான் மாதவனும் தேவகியும் புருஷனும் மனைவியுமாகச் சந்தித்துக் கொண்டது.

"நான் இராணுவத்தில் சேர்ந்தபோது, நீ நிரம்பவும் இளமையாக் இருந்தாய்" என்று அவன் சொன்னான்.

"ஹாம்", என்று அவள் பதிலளித்தாள்.

"நீ இப்பொழுது ஒரு பெரிய பெண்ணாக வளர்ந்து விட்டாய்" என்றான் மறுபடியும் மாதவன்.

"ஹும்" என்றாள்.

"பெண்கள் விரைவில் வளர்ச்சி யடைகிறார்கள்" என்று பொதுவாகச் சொன்னான் அவன்.

அதற்கும் கூட அவள் "ஹும்" என்றுதான் பதிலளித்தாள்.

அவள் முகம், வெளியிலே தோன்றி நிற்கும் பூர்ணச் சந்திரனை 'சவா'லு'க்கு அழைப்பதுபோல் பொலிவு பெற்று விளங்கிற்று. அவ்ள் ஒன்றும் பேசவில்லை; ஒன்றும் செய்யவில்லை. அவன் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருப்பதை விட, தான் சொல்வதை அவன் கேட்க வேண்டுமென அவள் விரும்பி நின்றாள். அவளது கண்கள் வெறுமனே தரையை நோக்கி, ஏதோ ஒரு சிறு சாமான் காணாமல் போனதைத் தேடுவதைப்போல் வட்டு மிட்டுக்கொண்டு இருந்தன. அவளது கைகள் சேலையின் முந்தானை ஓரத்தை வளைத்துப் பிடித்து விளையாடிக்கொண்டிருந்தன.

"நீ ஏன்...........?"

அப்படிப் பேசாம லிருப்பதின் காரணம் அவளுக்கே தெரியவில்லை. அவள் நிரம்பப் பேசவும் நினைத்தாள். என்ன வெல்லாமோ செய்ய வேண்டுமெனவும் நினைத்தாள். தன் கணவனுடைய கழுத்தைப் பிடித்து முத்தம் கொடுத்து, அவனோடு பேசவும் விரும்பினாள். "நான் எவ்வளவுதூரம் உங்களை நேசிக்கிறேன் தெரியுமா' என்று. ஆனால் அவள நினைத்தபடி ஒன்றும் பேசவுமில்லை, செய்யவுமில்லை. காரணம் என்ன? அவளுக்குத் தெரியாது.

நாட்கள் உருண்டோடின. ஒன்று......இரண்டு......மூன்று தேவகி முன்போல் சல சலவென்று பேசக்கூடியவளாகி விட்டாள். மாதவனிட மிருந்து முறையீடு இனித் தேவையில்லை.

கடற்படையிலுள்ள வாழ்க்கை நிலைமையைப்பற்றியும், சிங்கப்பூரிலிருந்தும் ரங்கூனிலிருந்தும் தம் படைப் பிரிவு, மூட்டை முடிச்சுகளோடு வெற்றிகரமாக வெளிக் கிளம்பியது, ஜப்பானியர் செய்த கொடுமைகள், பர்மியர்களின் வீரமார்த்தாண்டமான செயல்கள்.........முதலியவற்றை யெல்லாம் எடுத்துச் சொன்னான் மாதவன்.



அதற்குப் பதிலாக தேவகி, ஸ்தலத்திலுள்ள ஜென்மியின் (நிலச் சுவான்தாரர்) மூன்றாவது மகனுக்கு நடந்த கலியாணத்தையும், அவனுக்குக் கீழ்தான் வேலை செய்ததையும், உள்ளூர்க் கோவிலான மலங்காவில் நடந்த மாட்டுத் திருவிழா பற்றியும் எடுத்துச் சொன்னாள். மேலும் அவள், எந்தக் கட்சியார் முதலில் மாட்டைக் கொண்டுவந்து திருவிழாக் காட்சியில் நிறுத்துவது என்பதைப்பற்றி ஏற்பட்ட சண்டையில் ஒரு கட்சியார் இன்னொரு கட்சியாரின் தப்பு, தம்பட்டைக்களை ஒடித்து முறித்ததையும், இச் சண்டையில் தன் கட்சியார் செய்த வீர தீரச் செயல்களையும்...... எடுத்து விளக்கினாள்.

இந்தமாதிரியான நிலைமைக் கிடையில் அவர்கள் ஏழு நாட்களைக் கழித்தார்கள். அதன் பிறகு பிரிவு ஏற்பட்டது. மாதவன் எடுத்துக்கொண்டு வந்திருந்த 'ரஜா' சரியாகப் போய்விட்டது. அவன் கடற்படையிலுள்ள தன் சகபாடிகளோடு சேர வேண்டிய நாள் வந்துவிட்டது.

"நான் உனக்குக் கடிதம் போடும்போது, நீ அதற்குப் பதில் எழுத மாட்டாயா?" என்று விடை பெற்றுச் செல்லப் போகிற நேரத்தில், அவளைக் கேட்டான்.

"அப்படியே" என்று தொண்டையிலிருந்து கிளம்பிய பெருமூச்சையும் விம்மலையும் அடக்கிக்கொண்டு பதிலளித்தாள் அவள்.

இது நடந்து மூன்று வருஷங்களாகிவிட்டன. ஆனால், அவள் எதிர்பார்த்திருந்ததும், அவன் அவளுக்கு உறுதி யளித்துச் சென்றதுமான கடிதம் எதுவும் வரவில்லை. எப்போதோ சில சமயங்களில் அவளுக்குப் பின் கண்ட குறிப்படங்கிய செய்திகள் மட்டும் கிடைக்கும்.

"நான் இங்கே மகிழ்ச்சியாக இருக்கின்றேன். அதுபோல் நீயும் மகிழ்ச்சியாக இருப்பாய் என்று நம்புகிறேன்" இதுதான் செய்தி. அவன் எங்கே இருக்கிறான், எப்படி வாழ்ந்து கொண்டு இருக்கிறான் என்பதைப்பற்றிய சூசகம் எதுவும் அச் செய்திக் குறிப்பில் இருப்பதில்லை.

கடைசியாக, போர் முடிவுக்கு வந்தது. இதை யறிந்த தேவகி, தன் கணவனுடன் இனி சுகமாக வாழலாம் என்று நினைக்கலானாள். மாதவன் திரும்பியபிறகு, ஏற்பட விருந்த இன்ப நிகழ்ச்சிகளை நினைத்து, அவளது மனத்திரையில் படங்கள் வரையலானாள். சேர்பலாச்சேரி கோவில் உற்சவத்துக்குத் தானும், தன் கணவனும் ஒன்று சேர்ந்து போகவேண்டுமென

வெகுநாளாய்க் காத்திருந்தாள். இந்த வருஷம் அவள் போக முடியும் என்று நினைத்தாள். இந்த விழாவுக்கென சிருநாவின் கணவர் அவளுக்கு எடுத்துக் கொடுத்திருந்த சேலையையும், ரவிக்கையையும்போல் வாங்கி வர வேண்டுமென்று தன் கணவருக்கு எழுத வேண்டுமெனவும் முடிவு செய்துகொண்டாள். தன் மனதுக்குப் பிடித்த சேலையையும், ரவிக்கையையும் அணிந்து கொண்டு உற்சவத்திற்கு செல்வது, தன் வாய் நிறைய உரியப்பமும் பொரியும் அடைத்துத் தின்றுகொண்டு, திருவிழாக் காட்சியை மகிழ்ச்சியோடு அனுபவிப்பது; தன் முழங்கை வரை கண்ணாடி வளையல்கள் வாங்கி அடுக்கிக்கொள்வது......என்பதாகவெல்லாம் மனக்கோட்டை கட்டிக்கொண்டாள் தேவகி.

ஆனால், மாதவனிட மிருந்து வழக்கமாய் வந்த கடிதத்தைத் தவிர, வேறு கடிதம் எதுவும் வரவில்லை. இன்று வரும், நாளை வரும் என்று எதிர்பார்த்து ஏங்கினாள்.

ஒருநாள் அவள் தானியத்தைக் குத்திக்கொண்டு இருக்கும் போது, வெளியிலிருந்து யாரோ ஒருவர், "தேவகி அம்மா, உள்ளே இருக்கிறீர்களா?" என்று கேட்டார்.

"யார் அது?" என்று கேட்டுக்கொண்டு வெளியே வந்தாள் தேவகி. அவள் உடம்பு முழுதும் தானியத்தூசி படிந்திருந்தது. தபால்காரன் தான் வெளியிலிருந்து கூப்பிட்டது. அவளது உள்ளம் துள்ளிக் குதித்தது. கடைசியாக, கடிதம் வந்து விட்டது என்று அவள் நினைத்தாள். தபால்காரன் அநேக லட்டர் கவர்களை ஒன்றன் பின் ஒன்றாக வேகமாய்த் தள்ளி, அவற்றினுள்ளே இருந்த ஒரு கடிதத்தை தேவகிக்கு எடுத்தான். கவரின் நீளத்தைப் பார்த்துவிட்டு, அது நீளமானதொரு கடிதமாய் இருக்கும் என்று அவள் நினைத்தாள். பொதுவாய்ப் பெண்கள் புதிய ஆபரணத்தைப் பார்ப்பதுபோல் அவள் தன் விரித்த கைவிரல்களுக்கு நடுவே கடிதத்தைப் பெற்றுக்கொண்டாள். தன் கணவனை எதிர்கொண்டு அழைப்பதற்குத் தயாராவதுபோல் சமையலறைக்குள் முகத்தையும், கைகளையும் கழுவுவதற்குச் சென்றாள். ஆம்; தன்னுடைய கணவனை அந்தக் கடிதம் மூலம் அவள் சந்திக்கத்தான் போகிறாள்.

தன்னுடைய ஈரக் கைகளை தன் சேலையில் துடைத்து விட்டு தேவகி கவரைப் பிரித்தாள். ஆ! அவள் எதிர்பார்த்திருந்ததைப்போல் அது நீண்ட கடிதமாக இல்லை. ஆனால் அது ஒரு சுருக்கமான துண்டுக் கடுதாசி. மேலும் அக் கடிதம் ஆங்கிலத்தில் சுத்தமாக 'டைப்' செய்யப்பட்டு இருந்தது. பயங்கரமான எண்ணங்கள் அவளைப் பிடித்து அலைக்க ஆரம்பித்தன. தன் அண்டை வீட்டுக்காரர்களில் ஒருவரான ராமன நாயரின் மரணச் செய்தியைத் தாங்கி வந்ததைப்போன்ற துண்டுக் கடுதாசிதான் அவளுக்கு வந்திருந்தது. அதைத் தானாகவே பார்த்துக்



கொண்டாள். அருகாமையில் யாரோ ஒருவரிடம் பேசிக்கொண்டிருந்த தபால்காரனை வந்து போகும்படி கூப்பிட்டாள்.

"இந்தக் கடிதம் எனக்குத்தான் என்று உங்களுக்கு நிச்சயமாகத் தெரியுமா?" என்று கேட்டு, "தயவு செய்து அந்த விலாசத்தைப் படியுங்கள்" என்று தபால்காரனைக் கேட்டுக்கொண்டாள்.

"ஆம், உண்மையில் இது உங்களுக் குரியதுதான்" என்று தபால்காரன் சொல்லி, மலையாளத்தில் தான் கவருக்குமேல் எழுதி வைத்திருந்த விலாசத்தையும் அவளுக்குக் காண்பித்தான்.

மறுபடியும் அவள், "உங்களுக்கு ஆங்கிலம் படிக்கத் தெரியுமா?" என்று கேட்டுத்; தபால்காரனிடம் கடிதத்தைப் படித்துச் சொல்வதற்காக நீட்டினாள்.

"மிகவும் வருத்தப்படுகின்றேன், தேவகி அம்மா" என்ற பீடிகையோடு "எனக்கு ஆங்கிலம் தெரியாது" என்று பதிலளித்தான். தான் அடுத்தபடி என்ன செய்வது என்று, அவளுக்கு ஒன்றுமே புரியவில்லை; ஆங்கிலம் தெரிந்தவர்கள் யாரும் கிராமத்தில் இல்லை. இந்தப் பாஷை தெரிந்த நண்பர்கள் அவளுக்கு உண்டு. ஆனால், அவர்கள் 4 அல்லது 5 மைல் தொலைவில் இருந்தார்கள்.

இதற்கிடையில், நாலுமைலுக் கப்பாலுள்ள பரப்பூர் பள்ளிக்கூட உபாத்தியாயரான கோபாலன் மாஸ்டர் அவ்வழியே போய்க்கொண்டு இருந்தார். இச்செயல்களும் கூட, அவளுடைய விதியைப் பொறுத்தது என்று விளக்கம் சொல்லிக்கொண்டாள் தேவகி. கோபாலன் மாஸ்டர் பக்கத்திலிருந்த கிருஷிகர் சங்க ஊழியர். எப்போதாயினும் சில சமயங்களில் அவர் தேவகி வீட்டுக்கு வந்து செல்வதுண்டு. அவரை அவள் கூப்பிட்டாள்.

"இந்தச் சமயத்தில் உங்களை நான் சந்திப்பதில் எவ்வளவு மகிழ்ச்சி கொள்கிறேன் என்பது உங்களுக்குத் தெரியுமா?" என்று கூறி, "தயவு செய்து இந்தக் கடிதத்தைப் படியுங்கள்" என்று சொன்னாள்.

"ஜனங்கள் எங்களை விரும்பும் போதெல்லாம், அவர்களோடு நாங்கள் சேர்ந்து நிற்கிறோம்" என்று பதிலளித்து, "கடிதத்தை என்னிடம் கொடுங்கள்" என்று சொன்னார்.

உபாத்தியாயர் கடிதத்தை வாசித்து, அதிர்ச்சி யடைந்து போய் நின்றார். "என்ன விஷயம், மாஸ்டர் சாகேப், என்ன விஷயம்" என்று அவள் பயப்பிராந்தியோடு கேட்டாள். அவளை, அவர் பரிதாபமான பார்வையோடு மட்டும் பார்த்துக்கொண்டு நின்றார். அந்தச் செய்தியை எப்படி அவளிடம் சொல்வது?

"அதைப் படியுங்கள், மாஸ்டர் சாகேப்" என்று அவள் மறுபடியும் அவரைத் தூண்டினாள். நடுங்கிக் கொண்டிருந்த கையில், வைத்திருந்த துண்டுச் சீட்டை மலையாளத்தில் மொழிபெயர்த்தார்.

"சமீபத்தில் பம்பாயில் நடந்த கடற்படைக்கலகத்தில், ஸ்ரீ மாதவன் நாயர் என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டார் என்ற செய்தியை, ராயல் இந்தியக் கடற்படையின் தலைமைக் காரியாலயம் அவர் மனைவியான ஸ்ரீ தேவகி அம்மாவுக்கு வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறது."

தேவகி தாங்க முடியாத அதிர்ச்சியால் மூர்ச்சை யடைந்து போனாள். அந்தக் கடுதாசியைச் சுக்கல் சுக்கலாய்க் கிழித்தெறிந்து விட்டு, அச் செய்தியை நம்பாமலிருக்க வேண்டுமென விரும்பினாள். அந்தமாதிரியான ஒரு கடிதம் வந்தது என்றும், அதைக் கோபாலன் மாஸ்டர் தனக்குப் படித்துக் காண்பித்தார் என்றும் தான் நம்பாவிருக்க வேண்டுமென நினைத்தாள்.

"என்னைப் பெருமிதத்தின் உச்சாணிக் கொம்பிலே இருக்கும்படி செய்த அந்த மோகனப் புன்புறுவல்..................எள் இருதயத்தை ஊடுருவிச் சென்று அமைதியும் மிருதுத் தன்மையும அளித்த அந்தப் பார்வை.........சாவையுங் கூட விழுங்கி விடக் கூடிய நிலையில் இருந்த பலம் பொருந்திய அந்த மார்பு.........பெரிய.....உயர்ந்த இருதயத்திலிருந்து பீறிட்டுக் கிளம்பிய அந்தக் கெக்கலிப்பு, சாவையுங்கூட மல்லுக்கு அழைத்து விதியை ஏளனம்-பரிகாசம் செய்த இவைகள் எல்லாமே ஒரு கனவுதானு?

இல்லை: இல்லை; அவர் இறக்கவில்லை. தன்னோடு சிரித்துப் பேசிக்கொண்டு இருக்கின்றார். என் அதரங்களில் 'முத்த'மாரி பொழிந்துகொண்டு இருக்கிறார்; தம் மார்போடு இணைத்து விளையாடுகிறார். அவர் சண்டையைப்பற்றியும், போருக்குப் பிறகு, தாங்கள் சந்தோஷமாக அனுபவிக்கப் போகும் இனப அன்பு வாழ்க்கையைப்பற்றியும்........பேசிக்கொண்டு இருக்கிறார். சாகவே இல்லை அவர்."

தேவகி முகத்தின் வழியாகக் கண்ணீர் பொங்கி ஓட்ட மெடுத்துக்கொண்டு போயிற்று. அந்தக் கண்ணீர்த் திவலைகள் அவளுடைய கணவன் இருதயத்தில் போய் விழுவதைப்போல் அவளுக்குத் தென்பட்டது. ஆம், இந்திய மண்ணின் (துயரின்) ஒவ்வொரு அணுவும் மாதவனின் இருதய பாகத்தை ஒட்டிய ஓர் அங்கமாகும. அதை அவள தெரிந்துகொண்டிருந்தாள். ஆதலினல், தன்னுடைய கண்ணீர்த் திவலைகள் தன் இருதய மூர்த்தியின் உள்ளத்தை வேதனைப்படுத்தும் என்று பயந்தாள். அதனல் அவளுடைய முகத்திலிருந்து அவற்றை வெளியேற்றி விட்டாள்.



அன்றொருநாள் நடந்த பொதுக்கூட்டத்தில், அதே கோபாலன் மாஸ்டர் விவரித்த சோகச் சித்திரங்களின் காட்சி ஒன்றன் பின் ஒன்றும் அவள் மனத்தகத்தே வந்து கொண்டிருந்தன.

குண்டுகள்! குண்டுகள்!! அவை வெறிபிடித்த நிலையில் அவளைச்சுற்றி அலறிக்கொண்டிருந்தன. துப்பாக்கிகள் கர்ஜித்தன. தெருக்களினூடே குதிரைகள், லாரிகள் மீது காக்கி உடை தரித்து பவனி வந்து கொண்டிருந்த வெள்ளையர்களின் காட்சி. எல்லா இடங்களிலும் புகை மேகம். தரை முழுவதும், துப்பாக்கியினல் சுட்டப்பட்டு வீழ்ந்த குழந்தைகள், கிழவர்கள், ஆண்கள், பெண்கள், இந்துக்கள், முஸ்லிம்கள் முதலியோர்களின் மனிதப் பிரேதங்கள் அங்கும் இங்குமாய்ச் சிதறிக்கிடந்தன.

தன்னுடைய் குழந்தையை, தன் இடுப்பிலே தூக்கிச் சென்ற ஒரு மாது, இந்தப் பயங்கரமான குழப்பத்தைப் பார்த்துப் பயத்தினல் உந்தப்பட்டு ஓட்ட மெடுத்தாள். ஆனாலும் குண்டு அவளது மார்பைத் துளைத்துச் சென்றது. ஆனல் அவளுடைய குழந்தை தன் தாயைப் பழி வாங்குவதற்காக...........உயிரோடு இருக்க வேண்டுமென குண்டுங்கூட கருதி யிருக்கலாம்.

கர்ப்பவதியான மற்று மொரு பெண். தனக்குக் குழந்தைப் பாக்கியம் வேண்டுமெனச் செய்து கொண்ட எண்ணற்ற பிரார்த்தனைகளுக்குப் பிறகு அவள் ஆசை பூர்த்தி யடைந்து கர்ப்பவதியாக இருந்தாள். அவள் மிருதுத்தன்மையும், ஆவல் மிக்குடையவளாயு மிருந்தாள். பிறக்கப்போகும் குழந்தைக்காக, அவளது இருதயம் சிறகடித்துக் கொண்டிருந்தது. அவளும் கூடக் குண்டு பட்டு இறந்தாள்.........

அவன் இளைஞன். தொழிலாளி. நேற்றுத்தான் தனக்கு ஒருத்தியை மனைவியாக அடையப் பெற்றிருந்தான். முதல் முத்தக்குறி, அவனுடைய உதடுகளில் இருந்து இன்னுங்கூட மறையவில்லை. நேற்று இரவு ஏற்பட்ட இன்ப நினைவுகள் இன்னுங்கூட அவன் முகத்திலிருந்து அழியாமலிருந்தது. அவனுங் கூடக் குண்டின் குறிக்குத் தப்பவில்லை.........

அந்தச் சிறு பையன்! அவன் கையில் ஒரு பை வைத்துக் கொண்டிருந்தான். அதில் அவனது முழுநாள் சம்பாத்தியமும் அடங்கி யிருந்தது. அதாவது கொஞ்சம் அரிசி, உப்பு முதலான இன்னபிறவும் இருந்தன. அவன் வீடு திரும்பத் தவறினுல், அவனுடைய கிழத்தாயும், சின்னஞ் சிறு தங்கையும் உணவில்லாமல், வயிற்றைக் காயப்போட வேண்டியதுதான். அவனையும் குண்டு பலி கொண்டது.

எல்லாவற்றிற்கும் மேலாகக் அவள் தன் கணவனை தன்னுடைய மாதவனைக் கண்டாள். புரட்சிக் கோஷங்களைக் கூறி,

கொடிகளைப் பிடித்துக்கொண்டு மிருந்த மாதவனைக் கண்டாள். குண்டுகளைத் தாங்கும் பொருட்டு, அவன் ஜனங்களை வழி நடத்திச் சென்றான். தேவகி தன்னுடைய கைகளை பொத்திக்கொண்டு தன் கணவனுடைய புரட்சிக் கோஷத்திற்குப் பதிலளிக்கலானாள்.

ஆனால் ஒரு குண்டு அவள் இருதயத்தையும் துளைத்துக் கொண்டு சென்றது. அவள் தொப்பென்று கீழே விழுந்தாள். அவள் பயங்கரமான திகிலுக்குள் தன்னை மூழ்கடித்துக் கொண்டாள்.

காலையின் அருணோதயம் எற்கனவே புறப்பட்டுக்கொண்டு இருந்தது.

குரூரத்தன்மையும், மிருகத்தனமும் நிறைந்த மனிதன் ஒருவனால், ஒரு பெண் அணங்கு கற்பழிக்கப்பட்ட காட்சியைப் போல் உலகத்தின் நிலை இருந்தது.

"தலைவிதி. தலைவிதி" என்று தனக்குத்தானே அவள் முணுமுணுத்துக் கொண்டாள்.

"இல்லை." என்று அவள் அதைத் திருத்திக்கொண்டாள்.

"தலைவிதியை விட மிகக் கொடூரமானதொரு கை இந்தியாவை ஆட்சி புரிகிறது" என்று கோபாலன் மாஸ்டர் சொல்வதை அவள் நினைவு படுத்திக்கொண்டாள். அதாவது "அமலார் ஆட்சி 40 கோடி மக்களினுடைய வாழ்க்கையோடு விளையாடிக்கொண்டு இருக்கிறது" என்பதே தான்.

இல்லை, தேவகி மட்டும் தனிமையாக இருக்கவில்லை. துன்பத்தில் கிடக்கும் அவளுடைய சகாக்கள் ஒருவர் மட்டுமல்ல ஆயிரம் பேரும் அல்ல. ஆனால் 40 கோடி மக்கள். அத்தகைய வீரமார்த்தாண்டர்களுடைய விதவை மனைவிகளைக் கொண்டது தான் இந்திய நாடு!

தேவகி அழுவதைப் போன்ற உணர்ச்சியைப் பெற்றாள். ஆனால் கண்ணீர்த்திவலைகள் வரவில்லை. அவள் சிரிக்கலாமென நினைத்தாள். ஆனால் அதையுங்கூட அவளால் வரவழைக்க முடியவில்லை. அங்கே அவள் ஒரு சிலையைப்போல் சாதாரணமாய் உட்கார்ந்துவிட்டாள். வருத்தத்தினால் அவள் அப்படி உட்காரவில்லை. அதற்கு மாறாக எக்களிப்பு மிகுதியில் அப்படி உட்கார்ந்து கொண்டிருந்தாள். அவளுடைய கணவன் பிறந்த பொன்னாட்டிற்கா இறந்தான், தாய்த் திருநாட்டிற்கா இறந்தான்!

---

தமிழ் இலக்கியத்தில் தனிப் பெருமையுடைய நாடகக்கலை பற்றி விவரித்து அதை வளர்ச்சி செய்யவேண்டிய அவசியத்தை மிக நன்றாக எடுத்துக்கூறி யிருக்கிறார் இக் கட்டுரையாளர்.

# தமிழ் நாடகக் கலை

அ. இராமசாமி

✶

**வா**னில் மேகங்கள் திரண்டவுடன் கானில் மயில்கள் தம் கலாபத்தை விரித்து ஆடுகின்றன. இதை நாம் பார்த்து அனுபவிக்கிறோம். காதலனும் காதலியுமாக, இரண்டு குயில்கள் சோலையில் உட்கார்ந்து கூவுதலைக் கேட்டு நாம் இன்பமடைகிறோம். அழகிய ரோஜா மலரைப் பார்த்தும் நுகர்ந்தும் நாம் அனுபவிக்கலாம். ஒவ்வொரு பொருளும் ஒருவகைப் பட்டோ பலவகைப்பட்டோ நமக்கு இன்பமளிக்கின்றன. பெண்களிடம் நமது ஐந்து புலன்களும் அடையக்கூடிய இன்பங்களிருக்கின்றன. பெண்களைக் காணலாம், அவர்கள் கூறும் இனிமையான வார்த்தைகளைக் கேட்கலாம், அவர்கள் இதழ் அமுதை உண்ணலாம், நுகர்ந்து பார்த்து அனுபவிக்கலாம். அவர்கள் சரீரத்தைத் தொட்டு உணர்ந்தும் ரஸிக்கலாம். பெண்கள் மாதிரி ஐம்புலன்களுக்கும் ஒருங்கே இன்பம் பயக்கக்கூடிய பொருள் இயற்கையில் வேறு ஒன்றுமேயில்லை.

இதேமாதிரி, இலக்கியத்தில் தனிப்பட்ட பெருமை யுடையது நாடகம். இயல், இசை, நாடகம் என்று மூவகையாகப் பகுக்கப்பட்டுள்ள மொழி தமிழ் ஒன்றே யாகும். அழகிய கருத்துக்களுடன் வசன நடையில் அமைந்திருக்கும் இயலும், நல்ல ராகப்பண்பும் கவிதா நயமும் பொருந்திய இசையும் நாடகத்தில் இருக்கிறது. அத்துடன் கண்ணால் கண்டு, மெய்யால் உணரக்கூடிய பாவம் பொருந்திய நடிப்பும் அதில் அமைந்திருக்கிறது.

நவரஸங்களும் கூடிய வாழ்க்கையை இலக்கியப் பண்பு அமைய, பிரதிபலித்துக் காட்டுதலே நாடகம் எனப்படும். பிறர் படித்தோ, நடிக்கப் பார்த்தோ வாழ்க்கையின் தத்துவங்களை உணர்ந்துகொள்ளக் கூடியதாதலின் இது சற்று மிகைப்படுத்தியே கூறப்பட்டிருக்கும். தன் காலத்தில் நேரே ஆட்கள் நடிக்காமல், அவர்கள் நடிப்பதைப் படம் பிடித்துத் திரையில் காட்டும் சினிமாவும் நாடகத்தின்பாற்பட்டதே.

மேல் நாட்டார் நாடகங்களை அதிகமாகப் போற்றுகின்றனர். அதிலும், முக்கியமாக ஆங்கிலேயர் நாடகங்களை அளவு கடந்து போற்றுகின்றனர் என்பது அவர்கள் ஷேக்ஸ்பியருக்கு, மற்ற

207719

கவிகளைக் காட்டிலும் கொடுக்கும் ஒருவித தனிப்பட்ட மதிப்பினால் நன்கு தெரிகிறது. ஷேக்ஸ்பியர் எழுதின முறையில் எழுதப்பட்ட தமிழ் நாடகங்கள் அதிகம் இல்லை—ஏன்? தற்காலத்தில் எழுதப்பட்டது தவிர வேறு ஒன்றுமேயில்லை என்று கூறலாம். பொதுவாக, நாடகங்களே தமிழில் அதிகமில்லை. இளங்கோவடிகள் எழுதின சிலப்பதிகாரம் ஒரு நாடக காவியம். ஆசிரியர் சுந்தரம் பிள்ளை யெழுதின மனோன்மணீயம் அதே இனத்தைச் சேர்ந்ததே. பின் காலத்தில் எழுதப்பட்டவைகளில் ராவ்பகதூர் சம்பந்தமுதலியார் எழுதிய நாடகங்கள் தனிச் சிறப்பு வாய்ந்தவை.

ஆனால், ஓரங்க நாடகங்கள் என்று கூறப்படத் தகுந்தவை ஏராளமாகத் தமிழ் இலக்கியங்களில் இருக்கின்றன. அவை எல்லாம் பாக்களாகவே இருக்கின்றன. சங்க காலத்தில் புலவர்கள் பாடிய அகம், புறப் பாட்டுக்கள் தான் அவை. இரண்டு அரசர்கள் கொடுஞ்சினம் மூண்டு பொருதும் சமயமாக விருக்கும். இரண்டு பக்கங்களிலும் போருக்காகப் பாரில் பிறந்த படைகள் "எப்பொழுது பொருதுவோம்?" என்று ஏங்கி நிற்கும். ஆனால் ஓர் ஏழைக்கிழவன், தலையிலும் தாடியிலும் நரைத்த மயிர் கொண்ட தரித்திரன், ஏதாவது அவ்விரு அரசருள் ஒருவனின் அரண்மனைக் கவி வந்து இருவரையும் சமாதானம் செய்து விட்டுப் போவான். இது ஒரு அருமையான அங்கம். இப்படிப்பட்ட காட்சிகளைப் புறநானூற்றில் ஏராளமாகப் பார்க்கலாம். தனியாகச் சந்திப்பதற்காக, காதலன், குறிப்பிட்ட இடத்திற்குக் காதலியைப் பார்க்கச் செல்வான். ஆனால், அவள் அங்கிருக்க மாட்டாள். இவன உட்கார்ந்தவுடன் காந்தற்குழை போன்ற கைகள் அவன பின்னாலிருந்து அவன் கண்களை மறைக்கும்! உடனே காதலன் தன்னுடைய காதலியைப்பற்றிப் புகழ்ந்துபாட ஆரம்பித்து விடுவான். இப்படிப்பட்ட காட்சிகள் அகப்பாடலில் ஏராளம்.

தமிழ்நாட்டில் தற்காலத்தில் நடிக்கப்படும் நாடகங்களும் சினிமாப்படங்களும் அவ்வளவு உயர்தரமானவையாக வில்லை. ஏதோ ஒரிரு நாடகக் கழகங்கள் தவிர வேறு ஸ்திரமான சபைகள் ஒன்றுமில்லை. ஸ்திரமுள்ள கொள்கையும், நாடகத்தை நடத்தப்போதிய திறனும் பணபலமும் இல்லாத [கண்டிராக்டர்கள் என்று சொல்லப்படும்] குத்தகைக்காரர்களால் நாடகங்கள் நடத்தப்பெறுகின்றன. நாடகங்களில் நடிக்கும் பிரதம நடிகர்களுக்கு எவ்வளவு உயர்ந்த சம்பளமோ, அவ்வளவு தாழ்ந்த சம்பளம் சில்லறை நடிகர்களுக்கு. நாடகமேடையையும் சினிமாத் திரையையும் இசைமயமாக்கி விடுகின்றனர் இவர்கள். இதனால் இயலும் நடிப்பும் அபிவிருத்தி யடையாது; நாடகத்தினால் பார்ப்பவனுக்கு உண்டாக வேண்டிய பலனே ஏற்படுவதில்லை. நாடகம் ஒரு கலை என்பது அற்று அது ஒரு பிழைப்புமேடை என்று ஆகி விடுகிறது. பழங்கால மாகவே நடிகனுக்குச் சமூகத்தில்



ஒரு அந்தஸ்துக் கொடுக்காமல், அவனை ஒரு கூத்தாடி என்று அழைப்பதால், பெரிய குடும்பத்திலுள்ளவர்கள் தங்கள் மக்களை இவ்வழியில் விடாமல் இருக்கின்றனர். எல்லா விதத்திலும் போதிய ஞானம் இல்லாதவன் பிரதம நடிகனாக வருவதை நாம் அடிக்கடி பார்க்கிறோம். நாடகங்களில் கண்ணகியைக் 'கானகி' என்று சொல்லும் நடிகர்களுக்கும் மாதவியை 'மாதகி' என்று கூறும் நடிகர்களுக்கும் குறைவில்லை.

வடநாட்டினரையும் மேல் நாட்டாரையும் அப்படியே பின்பற்றும் ஒரு கெட்ட பழக்கம் தமிழரிடையே யிருக்கிறது. இதனால் உண்மையிலேயே தமிழ் நாடகங்களிலும் திரைப்படங்களிலும் காட்டப்படவேண்டிய தமிழனின் தனிப்பண்பு காட்டமுடியாது போய்விடுகின்றது. தமிழ்ச் சினிமாக்களில் வடமொழி ஸ்லோகங்களையும், தெலுங்குக் கீர்த்தனங்களையும் நாம் கேட்கிறோம். சமூகக் கதைகளே வராமல் வெறும் புராணக் கதைகளாகவே வருவதும் ஒரு பெரிய சீர்கேடாகும்.

மிக முக்கியமான கெடுதல் ஒன்று நம் தமிழ்ப் படங்களில் புகுந்து விட்டது. வருமானத்தை மட்டுமே கருதி, பொருளைக் காரணங்கொண்டும் காரணமில்லாமலும் லட்சம் லட்சம் ரூபாயாகச் செலவழித்து எடுக்கப்படும் படங்கள் அவை. ஆதலின், எவ்வழியில் புகுந்தால் பொது மக்கள் அதை அநேகமாக ஆதரிப்பார்கள்? எவ்வழியில் எடுத்தால் நமக்கு ஏராளமாகப் பணம் குவியும்? என்பதே அவர்களின் கோட்பாடாக விருக்கிறது. ஆதலின், அவர்கள் பொதுஜனங்களின் இதயத்தை [க்கிள்ளி விடக்கூடிய உண்மையைச் சொன்னால்] கெடுத்து விடக்கூடிய சிருங்கார ரஸம் வாய்ந்த படங்களையே எடுக்கின்றனர். சிருங்கார ரஸம் மட்டுமே நிறைந்து, கொள்கையே சரியாகச் சித்திரிக்கப் படாத படங்களைத்தான் நாம் அடிக்கடி திரையில் பார்க்கிறோம்.

தற்காலத்தில், சீர்கெட்டிருந்த தமிழ் மறுமலர்ச்சி யடைந்து வருகிறது. அத்துடன் தமிழ்க்கலையில் விருப்பங்கொண்டு அதைச் சீர்திருத்தப் பலர் உழைக்கின்றனர். தமிழ்க்கலைகள் ஒவ்வொன்றிலும் ஏதோ சிறிது முன்னேற்றம் ஏற்பட்டுக் கொண்டே வருகிறது. தமிழ்க்கலைகளுக்குள்ளே மிக அருமையானது அதன் நாடகக்கலை. இந்த நாடகக்கலைக்கு விமோசனமுண்டா? அப்படியானால் எப்பொழுது? தமிழ் நாகரிகமும் இலக்கியப் பண்பும் அமைந்த ஒரு நாடகத்தையோ திரைப்படத்தையோ நாம் கண்ணாரக் காணுங்காலம் எப்பொழுதோ?



"அரசர் உன்னை விரும்புகிறார்........நான் அரசருடைய ஊழியன்!"

"ஊழியனாவது? உங்கள் உள்ளத்தின் 'உணர்ச்சியைக் கூடவா ஊழியனாக்கி விட்டீர்கள்? உங்கள் மனப்போக்கைக் கட்டுப்படுத்த மன்னனுக்கு என்ன உரிமை?........

# பொற்கொடி ★

ஆர். எஸ். முத்து ★

பாசறை, இரவு பத்து மணி இருக்கும். பரந்த வெளியில் வெண்மையான கூடாரங்கள் பல. அவை தொலைவிலிருந்து பார்ப்பவர்களுக்கு, நீலக் கடலிடையே பூத்த வெண் தாமரையைப்போல் காட்சியளிக்கின்றன. தீப்பந்தங்களைச் சுற்றிப் போர்வீரர்கள் உட்கார்ந்து ஆனந்தமாகப் பாடிக்கொண்டிருக்கின்றனர், எங்கும் வெற்றியின் எக்களிப்பு!

மத்தியிலிருப்பது அரசனுடைய கூடாரம், எண்ணெயின் நுரைபோல் மிருதுவான மெத்தை விரிக்கப்பட்ட கட்டிலிலே அமர்ந்திருந்தான் மன்னன் வீரவர்மன். அந்தக் கட்டிலங்காலையின் அருகே மந்திரி வீரகேசரி நின்றிருந்தான்.

மந்திரி:—தாங்கள் ஏதோ ஆழ்ந்த யோசனையி லிருப்பது போல் தோன்றுகிறதே!

அரசன்:—ஆமாம், முக்கிய விஷயமொன்றை உம்மிடம் கூற வேண்டுமென்று எண்ணியுள்ளேன். நீரே வந்துவிட்டீர்.

மந்திரி:—என்ன பிரபு?

அரசன்:—இன்று மாலை நடந்த இறுதிப் போரில் நான் பலியாகி யிருப்பேன். ஆனால்......

மந்திரி:—அரசே! என்ன நடந்தது?

அரசன்:—பகையரசனும் நானும் தனித்து நின்று போராடும்பொழுது எதிரிபபடையைச் சேர்ந்த ஒருவன் பின்புறமாக என்னைத் தாக்குவதற்கு ஓடி வந்தான். அதே சமயம் நமமுடைய போர் வீரன் ஒருவன் விரைந்து வந்து அவனை வெட்டி வீழ்த்தி விட்டான். தற்செயலாக நான் காப்பாற்றப் பட்டேன். மந்திரி! அந்தப் போர்வீரன் நான்காவது படையைச் சேர்ந்தவன் என்று எண்ணுகிறேன். இந்தப் போரில் அவனுடைய வீரத்தைப் பல முறை கண்டேன். அவனை அழைத்துவரச் சொல்லும்.

"உத்தரவு பிரபு" என்று சொல்லிவிட்டு வெளியே சென்றார் மந்திரி.

சிறிது நேரத்தில் மந்திரியைப் பின் தொடர்ந்து வந்தான் அரசன் குறிப்பிட்ட போர்வீரன்.

மந்திரி:—அரசே! இவன்தான் அந்தப் போர்வீரன் வில்லவன், தங்கள் தந்தையாரின் பிரதம சேனாதிபதியா யிருந்த ராஜகேசரியின் பேரன்.



அரசன்:—பேஷ், வீரவம்சத்தின் வழித் தோன்றலல்லவா? வில்வலன் வீரன்; இனிமேல் அவன் நம்முடைய மெய்க்காப்பாளன், அந்தரங்கத் தோழனுங்கூட.

ஆனந்தமும் நன்றியும் வில்வலனின் இதயத்திலே துள்ளின. முகம் மலர்ந்தது, அவன் தன்னுடைய மகிழ்ச்சிப் பெருக்கிலே மன்னனுக்கு நன்றி செலுத்தக்கூட மறந்துவிட்டான்!

## 2

மருதஞ்சோலை, இயற்கையாகச் செழித்து வளர்ந்த பூஞ்சோலை அது, கண்ணுக்கு விருந்தையும், கருத்துக்கு இனிமையையும் அளிக்கும் பசுமையான காட்சி. பக்கத்திலே வயல்கள், மார்கழி மாதம்; மஞ்சல் நிறமான நெற்கதிர்கள் தென்றலிலே அசைந்தாடுகின்றன. மாலை நேரத்தின் மஞ்சள் வெயிலின் பொற் கிரணங்கள் நெற்கதிர்களிலே பட்டு ஒளியுடன் விளங்கியது.

சோலையின் நடுவேயுள்ள குளக்கரைமீது அமர்ந்திருந்தாள் கன்னி. கருத்தை எங்கோ விடுத்துக் கலங்கி யிருந்தாள்போலும்! "அம்மா!" என்ற குரல் கேட்டுத் திடுக்கிட்டாள். "பொற்கொடி, குளக்கரையில் உட்கார்ந்திருக்கின்றாயே! என்ன காரணம்? நன்றாயிருக்கிறது நீ வயல்களைப் பார்த்துக் கொள்கிற அழகு" என்றாள் ஒருத்தி. அவள் மகதி; தோழிதான், தலைவியிடமுள்ள அன்பில் உரிமை பாராட்டிப் பேசுகிறாள் இப்படி.

பொற்கொடி மெதுவாக எழுந்து நடந்தாள். மகதி அவள் கைகளைப்பற்றிக் கொண்டு "என்ன ஒரு மாதிரியாக இருக்கிறாய்?" என்றாள்.

"ஒன்றுமில்லையே!" என்று ஏதோ தட்டுத் தடுமாறி கூறினாள் பொற்கொடி.

மகதி:—"இதோ பார்! உன்னுடைய பற்களைப்போல இந்த மல்லிகை மொட்டுக்கள் அரும்பி யிருக்கின்றன."

பொற்கொடியின் கவனத்தை வேறு திசையில் திருப்ப மகதி செய்கிற 'சதி' இது. பொற்கொடியும் விழித்துக் கொண்டாள். தன் சிந்தனையிலிருந்து, "இதோ பார்! தான் விரும்பிய காதலனை அடைந்த காதலியின் முகத்தைப்போலத் தாமரை பூத்திருக்கிறது."

மகதி:—அறிவுடையவர்கள் தம் காரியம் முடிவதற்கேற்ற காலம் வரும்வரை அடங்கி யிருப்பதுபோல அரும்பு மலருவதற்குரிய பருவத்தை எதிர்பார்த்திருக்கிறது.

தன் குறிப்பறியும் திறனை அழகாக எடுத்துக்காட்டினாள் மகதி.

பொற்கொடி:—மகதி! என் மனம் சரியாகவே இல்லை.

மகதி:—எப்படியம்மா இருக்கும்! பருவ காலம் அல்லவா? மேலும் பசுஞ்சோலை......

பொற்கொடி:—என்ன, என்னென்னவோ சொல்லுகிறாய்? குற்றம் புரிந்தவன் அதட்டிக் கேட்க அஞ்சுவதில்லை. குற்றத்தை மறைப்பதற்குச் செய்கிற சூழ்ச்சிகளில் இதுவும் ஒன்று, ஆனால் இதற்கெல்லாம் அஞ்சுபவளல்ல, மகதி!

மகதி:—உம், தெரியாதா உங்கள் நாடகம்! அந்தக் கரையிலே அவர் வந்து நிற்பதும், இந்தக் கரையிலே நீ நிற்பதும், பார்த்துப் பார்த்து ஏங்கி மௌனமாகப் பிரிந்து போவதும், எல்லாக் காட்சிகளையும் இந்தக் கண்கள் பார்த்துக் கொண்டுதானே இருக்கின்றன!

பொற்கொடி:—மகதி! அவர் யாரென்று தெரிந்து கொண்டாயா? நீ என் அந்தரங்கத் தோழியல்லவா?.

மகதி:—அந்தரங்கத் தோழி என்று நீயாக என்னிடம் சொல்லிவிட்டாயாக்கும்! நானாகத் தெரிந்து கொண்ட அப்புறந் தானே......?

பொற்கொடி:—மகதி, அவர் எப்படியோ என் உள்ளத்தில் புகுந்து விட்டாரடி, அவருடைய நினைவு என் உளளத்தை மட்டுமா, உடலையும் உருக்குகிறதடி!

மகதி:—உருக்கும், உருக்கும்! காதல் ரொம்பப் பொல்லாதது!

பொற்கொடி:—ஆமாம், ரொம்ப ரொம்பப் பொல்லாதது!

மகதி:—சரி! நீ வயல் பக்கம் போ. நானைக்கு அவர் யார் என்பதைத் தெரிந்து வந்து சொல்கிறேன்.

பொற்கொடி:—மறந்து விட மாட்டாயே?

மகதி தலையசைத்துக் கொண்டே போய் விட்டாள்.

## 3

“ஐயா! என் தலைவி, பீலி உதிர்ந்த மயில் போல வாடி நிற்கிறாள், தங்கள் மீது கொண்ட காதலால்” என்றாள் மகதி.

துள்ளி எழுந்தான் காளை.

“தோழி! நான் பாக்கியம் செய்தவன், வரப்பிரசாதம் வழங்கிய தேவதை நீ, உன் தலைவியைக் காணப்போவோம் வா” என்றான்.. இருவரும் புறப்பட்டனர்.

தடாகக் கரையைக் காண்பித்து, “இங்கேயே இருங்கள்!” என்று சொல்லிவிட்டுப் போனாள் மகதி. உட்கார்ந்தான். அவன் கண்கள் நாலா புறமும் நோக்கின. இருதயம் படபடவென்று அடித்துக் கொண்டது.



மகதி அடுத்த கரைக்குப் போய்ச் சேர்ந்தாள். தோழியை எதிர்பார்த்து ஏங்கிப் போயிருந்த தலைவியின் கண்களுக்கு மகதியின் வருகை அமுதத்தை அள்ளிக் கொடுத்தது போலிருந்தது.

“ஏண்டி! அவர் யாரென்று தெரிந்துகொண்டாயா?” என்றாள் ஆவேசமாக.

“என்ன அவசரம்?”

காதலினால் பொலிவிழந்து கிடந்த அவள் முகம். அடாடா. எவ்வளவு சோபை பெற்று விட்டது.

“பொற்கொடி! அவரைப்பற்றித் தெரிந்து கொண்டு மட்டும் தான் வந்தேன் என்று நினைக்கிறாயா? அவரையே அழைத்து வந்து விட்டேன். அவர்தான் வீரன் வில்வலன். மன்னரின் தோழர்.”

மாலை மங்கி விட்டது. தம் புகழைக் கேட்ட சான்றோரைப் போல மரங்கள் தலை சாய்ந்து விட்டன. அறிவற்றவனின் நெஞ்சைப்போலக் கரிய இருள் லேசாகப் படர ஆரம்பித்தது.

புல் தரையிலே கம்பீரமாக நின்றிருந்தான் வில்வலன். அவன் மார்பில் தன் தலையைச் சாய்த்திருந்தாள் பொற்கொடி.

“கண்ணே! நூற்றுக் கணக்கான அம்புகள் என் உடம்பில் பாய வருவதாக எண்ணும் பொழுதும் கலங்காத மனம, ஒரு பெண்ணின் நினைவால் உருகியே விட்டது.”

“மாரன் அம்பு அவ்வளவு பொல்லாதது, சுவாமி!”

வில்வலன் சொன்னான்:—“பொற்கொடி! உன் தந்தையாரைக் கண்டு விரைவில் நம் திருமணம் நடைபெற ஏற்பாடு செய்கிறேன்!”

## 4

நாட்கள் சில சென்றன. மன்னனின் அந்தப்புரம். மன்னனும் வில்வலனும் உட்கார்ந்து தாயம் விளையாடிக் கொண்டிருக்கின்றனர்.

வில்வலன்:—நீங்கள் இன்னும் திருமணம் செய்து கொள்ளாமலிருப்பது மந்திரியாருக்கு மிகவும் வருத்தத்தைத் தருகிறது. தங்களுக்கு ஞாபகப்படுத்தும்படியாக......

மன்னன்:—வில்வலா! இதைப்பற்றி நானே உன்னிடம் பிரஸ்தாபிக்க வேண்டுமென எண்ணினேன்.

வில்வலன்:—ஏதாவது ஏற்பாடு செய்திருக்கிறீர்களா, பிரபு?

மன்னன்:—எனக்கு மனைவியாக வரப்போகிறவளைத் தேர்ந்தெடுத்து விட்டேன்.

வில்வலன்:—அப்படியா? மிகவும் மகிழ்ச்சி. அந்தப் பாக்கியம் செய்தவர் யார், அரசே?

மன்னன்:—சோலையிலே கண்டேன் அவளை. ரதி தேவியின் பிரதிபிம்பம் அவள். பொன்மேனி, நாணல் மொட்டுப் போன்ற பற்கள், செம்பவள வாய், மான் விழியை வென்ற கண்கள். அடடா, என்ன சொல்வேன்? என் உள்ளத்தைப் பறிகொடுத்து விட்டேன்.

வில்வலன்:—அப்படிப்பட்ட அழகி யார்?

மன்னன்:—நான் வேட்டைக்குச் சென்று திரும்பிய பொழுது மருதஞ் சோலையிலே இளைப்பாறுவதற்காகத் தங்கினேன்.

வில்வலன்:—மருதஞ் சோலையிலா?

மன்னன்:—ஆமாம், ஏன்?

வில்வலன் முகம் கருகியது. ஏதோ விபரீதமான செய்தி வரப் போகிறதென்று அவன் உள்ளம் துடி துடித்தது.

மன்னன்:—அதன் பின் அவளைப் பலமுறை மருதஞ் சோலையிலேயே பார்த்தேன். அவள் பெயர் பொற்கொடி என்பதை மட்டுமே தெரிந்து கொண்டேன்.

வில்வலன், "பொற்கொடியா?" என்று தாங்க முடியாமல் கேட்டு விட்டான்.

மன்னன்:—வில்வலா! பொற்கொடியை உனக்குத் தெரியுமா?

வில்வலன்:—உம்,......இல்லை, பிரபு! சொல்லுங்கள்.

மன்னன்:—அவளைத்தான் தேர்ந்தெடுத்திருக்கிறேன்...... உனக்கு உடல் நிலை சரியில்லையா?

வில்வலன்:—ஆமாம் அரசே! என்னவோ போலிருக்கிறது, நான் பிறகு வருகிறேன்.

அரசன் யோசிக்க ஆரம்பித்தான்; "மகிழ்ச்சியோடு வந்தான். உல்லாசமாகப் பேசினான். பொற்கொடியைப்பற்றிப் பேசியதும் ஏன் இப்படியாகி விட்டான்? பொற்கொடியை இவன் அறிவானா? ஒருவேளை அவள் மணமானவளோ? என் தவறுதலை என்க்கு எடுத்துக் காட்ட முடியாது மனம் தடுமாறுகிறானா? அல்லது அவள் இவனுக்கு ஏதேனும் சொந்தமோ?"

பக்கத்திலே கிடந்த போர்வையை எடுத்துப் போர்த்திக் கொண்டு நடந்தான். மாலை மங்கி இருள் பரவுகின்ற அந்த வேளையில் வில்வலனைப் பின்பற்றிப் போவது அரசனுக்குச் சுலபமாகவே இருந்தது..

## 5

பாழடைந்த சுவருக்குப் பக்கத்திலே இரண்டு உருவங்கள் நின்றிருந்தன.

"பாலிலே ஊற்றப்பட்ட பாகு பாலோடு பாலாய்க் கலந்து விட்டதைப் போல என் கனவு மனத்தின் அடியிலே மறைந்து போக வேண்டிய காலம் வந்து விட்டது" என்றான் வில்வலன்.



"ஐயோ, தெளிவாகச் சொல்ல மாட்டீர்களா? உங்களுடைய வேதனை நிறைந்த பேச்சு என் மனதை என்னமோ செய்கிறதே."

பொற்கொடி துவண்டாள்.

"அரசர் உன்னை விரும்புகிறார், உன் அழகு அவர் உள்ளத்தைக் கவர்ந்து விட்டதாம்."

"என்ன, நான் அவரைப் பார்த்ததுகூட இல்லையே!"

"பார்த்ததில்லை. ஆனால் அவர் உன்னைப் பலமுறை பார்த்திருக்கிறார்.",

"அரச ஆணைக்காக ஏற்படுவதா காதல்? நம் காதலை அரசரிடம் தெரிவிக்க வேண்டியதுதானே?"

"அதில் பயனில்லை; கண்மணி! நான் அரசருடைய ஊழியன்."

"ஊழியனானால் உங்கள் உள்ளத்தின் உணர்ச்சியைக்கூடவா ஊழியனாக்கி விட்டீர்கள்? உங்கள் மனப்போக்கைக் கட்டுப்படுத்த மன்னனுக்கு என்ன உரிமை? அப்படி அரசர் சொல்வாரா?"

"கண்ணே! நான் அரசாங்க உத்தியோகஸ்தன். அவர் அரசன். தம் மகள் ராணியாவதைத்தானே உன் தந்தை விரும்புவார்?"

"அப்படி நீங்கள் நினைக்கிறீர்கள், தவறு. நம்முடைய மனப் போக்குக்குக் குறுக்கே நிற்கமாட்டார் என் தந்தை."

இப்படிச் சொல்லும் பொழுது அவள் உணர்ச்சி மேலோங்கி விட்டது.

"தந்தை மட்டுமல்ல, அரசன்கூட உங்கள் மனப் போக்குக்குக் குறுக்கே நிற்கமாட்டான" என்றொரு குரல் எழுந்தது.

இருவரும் திடுக்கிட்டுத் திரும்பினர். அரசன் நின்றிருந்தான்.

"வில்வலரே, முன்னமே என்னிடம் சொல்லவில்லையே! அரசன் என்றால் இதயமற்றவன் என்றல்லவோ நினைத்து விட்டீர் போலும்! இதோ என் சகோதரி பொற்கொடி, உம்முடைய மனைவி."

இருவர் கரங்களையும் ஒன்று சேர்த்தான் மன்னன். ஆனந்தம் அதிகமானால் பேச முடியாமல் தவிப்பது என்ற இயற்கை விதிப்படி சிலையாய் நின்றான் வில்வலன். ஆனால் அவன் கண்கள் மட்டும் நன்றியறிதலை அள்ளி வீசின.



# வாலிபர் சங்கம்!

வித்வான்—எம். சாம்பசிவம்

★

நம் நாட்டில் ஒவ்வொரு கிராமத்திலும் இன்று கிழடு தட்டாத பல 'வாலிபர் சங்கங்'களும், முதுமை யடையாத சில 'இளைஞர் கழகங்'களும் தூங்கி வழியாமலேயே முனைப்பாக வேலை செய்து வருகின்றன. அது குறித்து எனக்கு எவ்வளவோ மகிழ்ச்சி! ஏனென்றால், கூட்டினத்தன்று, கூட்டத்திற்கு இரண்டொரு நபர்கள் வந்தாலுஞ் சரி, வராவிட்டாலுஞ் சரி, பிரசங்கத்தையோ, கூட்டத்தையோ எக்காரணத்தை முன்னிட்டும் நிறுத்தி வைப்பதே கிடையாது; அதற்குப் பதிலாக தட்டுத் தடங்கலின்றி அன்றுதான் அவை மும்முரமாக நடக்கும்! எந்தக் குறைகளும், இந்த இலட்சியப் பேச்சாளர்களின் முன்னிலையில், வெட்கத்தால் தலை குனிந்தே தீரும்! இவர்கள், தலைகுனிய ஏதுவே இல்லை!

'பகை அகத்துச் சாவார் எளியர்; அரியர், அவையகத்து அஞ்சாதவர்' என்பதை—அதாவது, நீ முந்தி, நான் முந்தி என்று, போர்க்களம் சென்று, போர் செய்து சாக, கணக்கில்லாத வீரர்கள் ஓடோடியும் முன் வருவார்கள் இந்த உலகத்திலே; ஆனால், சபையிலே பேச முன் வருபவர்களோ, இப்பரந்த—பிரமாண்டமான உலகத்தில், அருமையிலும் அருமை! ஒருவரும் முன்வர மாட்டேன் என்கிறார்கள். காரணம்? அது, என்னவோ!' என்ற கருத்தைத் திருக்குறளிலே ஒருநாள் நான் பார்க்க நேர்ந்தது, என்றாலும், அதை என்னால் நம்பவே முடியவில்லை! ஏனென்றால், நான் ஒரு வாலிபர் சங்கத்தின் உறுப்பினன்; தவிரவும், திருவள்ளுவர் சொல்லுவதை யெல்லாம் நம்பவேண்டுமென்று, எந்தச் சட்டம் கட்டளை இடுகிறது?

ஐயா, அப்படியே கட்டளை இடுகிறது என்றே வைத்துக் கொள்வோம்; பிறகு வாலிபர் சங்கமோ, இளைஞர் கழகமோ இந்த உலகத்திற்கு நன்மைகள் புரிய முடியுமா!

'கூட்டத்தில் அச்சமே யில்லாமல் உயர்ந்த கருத்துக்களை எளிய இனிய நடையில், கவர்ச்சியாக விவரிக்கும் பொருட்டு, முறைப்படி தெரிந்திருக்கவேண்டியவற்றையும், சிறந்த நூல்களையும் முன் கூட்டியே தெரிந்துகொள்ளவேண்டும்' என்று, இதோ! 'ஆற்றின் அளவு அறிந்து கற்க, அவை அஞ்சா மாற்றம் கொடுத்தற் பொருட்டு!' என்ற குறள் கூறுகின்றது, இதையும் நான்,—அதாவது 'வாலிபர் சங்கத்தினர், ஒப்புக்கொள்ளுவதற்கில்லை; ஆனாலும், காரணத்தைக் கூற ஆசைப்படுகிறேன்:

எங்களூர் இளைஞர் கழகத்தின் அமைச்சர்—திரு. கோவிந்தசாமி என்பவரைத் தெரிந்துகொள்ளாதவர்கள், புண்ணிய மில்



லாதவர்களே. ஏனென்றால், வயதோ, இருபத்தைந்து; அழகாக இருப்பார்! கிராப்பு அழகுக்கே நோபெல் பரிசு தரலாம்; நோபெல் பரிசு கொடுப்பவர்கள், இதை எங்கே கவனிக்கிறேனென்கிறார்கள்? சரி, அது கிடக்கட்டும்.

பிறகு, அவர்—கோவிந்தசாமி என்பவர்தாம்!—பிரசங்கஞ் செய்ய ஆரம்பித்தாரானால், அடடா! அரிச்சந்திரன் கதை என்ன, பிரகலாதன் கதை என்ன, ராமன், வீமன், நளன், பகன் முதலியோரின் கதைகள் என்ன! இவைகளையெல்லாம் பொருத்தமான கட்டங்களில், தக்க பக்க வாத்தியங்களோடு—இல்லை—உபமானமாக அலங்கரித்து, அருமையாக—ஆனால், இனிமையாகப் பேசி, கேட்பவர்களைப் பித்துக்கொள்ளியாக அடித்து விடுவாராம்! ஆனால், நான்தான் ஒருநாளேனும் கேட்கக் கொடுத்து வைக்கவில்லை; காரணம், ஒவ்வொரு விநாடி நேரத்தையும், வாலிபர் சங்கத்துக்காக நானே என்னைத் தியாகம் செய்துகொண்டிருப்பதுதான்!

அப்புறம்......அவர் பிரசங்கத்தைக் கேட்டுக் கொண்டே இருக்கிறார்களா! கேட்டுக்கொண்டே சபையோர்கள், சொக்கி, காலம் போவதே தெரியாமல், கீழே சாய்ந்து கிடப்பார்களாம்! கூட்டத்தில் குறைந்தபட்சம் பத்துப்பேர் இருப்பார்களானால், ஐந்து பேர்களுக்குமேல் வெளியே போகமாட்டார்கள். இந்த ஒரு விஷயத்தில் எங்கள் சங்கத்தைப் பின்னிட்டுச் செய்து விடுகிறார்கள், இளைஞர் கழகத்தார்! பிறகு—அவர் ஐந்து நிமிஷங்களில் பேச்சைச் சுருக்க வேண்டுமானாலும் சுருக்கி விடுவாராம்; ஆறு மணி நேரம் சேர்ந்தாற்போல் வளர்த்தி வர்ணிக்க வேண்டுமானாலும் அவர், வளர்த்தி வருணித்து சபையோர்களை ஆச்சரியத்தால் திக்கு முக்காடச் செய்து விடுவாராம்! இவ்வளவுக்கும் அவர், இரண்டாங் கிளாசே படித்தவர்தாம்!

ஆகவே, ஆற்றின் அளவறிந்து, காலத்தை வீணாக்கி, ஏன் கற்கவேண்டும்? அவசியமே இல்லை அல்லவா!

ஆனால், ஒன்று: 'உளர் எனினும் இல்லாரோடு ஒப்பர், களன் அஞ்சிக் கற்ற செலச் சொல்லாதார்' என்பது யாவரும் உடன்படக்கூடிய ஒன்று; ஒவ்வொருவரும் தத்தமக்குத் தெரிந்தவற்றை வாலிபர் சங்கத்திலே சாங்கோபாங்கமாக விவரித்துச் சொல்லவேண்டும்; இல்லையேல், அவற்றால் பயனே இல்லை யல்லவா? விவரிக்காதவர்கள், இறந்தவர்களே! ஏனென்றால், இறந்தவர்கள், எதையாவது விவரிக்கிறார்களா!

இது, உண்மை! சபையிலே சொல்வதை நன்றாய் அழுத்தந் திருத்தமாகச் சொல்லவேண்டும்; இரைந்து சொல்லவேண்டும்; இல்லாவிடில், கடைத்தெருவிலே படித்தவை—கற்றவை யெல்லாம் வீண்! ஆம்! 'பல்லவை கற்றும் பயன் இலரே, நல் அவையுள் நன்கு செலச் சொல்லாதார்!

இதனால், பலவற்றைக் கலாசாலைகளில் சென்று கற்காமலேயே யாவரும் பிரசங்கம் செய்ய வேண்டும் என்பதை அறிகிறோம்! இதற்கு அத்தாட்சி? இதோ, வாலிபர் சங்கம்! அதோ, இளைஞர் கழகம்!

அதனாலே, படிக்கவேண்டாம்; நான், மீண்டும் கேட்டுக்கொள்கிறேன், அந்தத் தவற்றை இனி, யாரும் செய்யாதீர்கள்; அதிலும் திருக்குறளைத் தயவுசெய்து படித்துவிடாதீர்கள்; தப்பித் தவறி இதுவரை படித்தவர்கள், உடனேயாவது மறந்து தொலைக்க வேண்டுகிறேன்.

மேலும், புதுப் புது விதமான மொழி பெயர்ப்பு நூல்களும், கண்ணைப் பறிக்கும் புத்தகங்களும் வெளிவந்து, இப்பொழுது—மாய வேலைகள் புரிந்துகொண்டு வருகின்றன. எச்சரிக்கை! முக்கியமாக வாசகசாலை வைத்திருப்பவர்கள், இவ்விஷயத்தைக் கவனிப்பதுடன், விரைவாக வாசக சாலையின் கதவை இன்றே—இப்பொழுதே இழுத்துப் பூட்டிக்கொண்டு வெளியேற வேண்டுகின்றேன்; அந்தோ! இன்றுவரை எவ்வளவோ இதழ்களை வாங்கிக் காசுகளையெல்லாம் கரியாக்கினீர்களே. ஹூம்!.........

ஆண்டவனே! விபரீதமாக—நேற்றுப் பிறந்த வாண்டும், கையிலே ஒரு பத்திரிகையை வைத்துக்கொண்டு, உடம்பைப் பாழாக்கிக் கொள்கின்றதே; இந்த அநியாயம், எங்கு நடக்கும்? கடவுளே! எங்களைக் காப்பாற்று; எங்களைக் காப்பாற்று! உனக்குக் கோடி கோடிப் புண்ணியமுண்டு!

அன்பர்களே? உலகம் போகிற போக்கிலே, நமக்கு நிற்க நேரமேது? நம் வாலிபர் சங்கத்திலே, தற்செயலாய் இரண்டொருவர் சந்தித்தாலும், உடனே அதைச் சங்கக் கூட்டமாக மாற்றி, சமயோசித புத்தியோடு நடந்துகொண்டு, வந்தவர்களைத் தட்டியெழுப்பி, உணர்ச்சியைக் கிளறிவிட்டு, சொற்பொழிவைக் குதூகலத்தோடு உலுக்க வேண்டும்! நீட்டிக்கொண்டும், நெளித்துக்கொண்டும், எதைச் சொன்னாலும் மந்தாரமான ஒரே கதியில்,—இந்த அழகிலே, பிரசங்கி, யோசனை வேறு இடையிடையே செய்துகொண்டு,—மக்களை மடக்கினால் முடிகிற காரியமா? கேளுங்கள்:

'அவை அறிந்து, ஆராய்ந்து, சொல்லுக; சொல்லின்
தொகை அறிந்த தூய்மை யவர்.'

'இடைதெரிந்த, நன்குணர்ந்து, சொல்லுக; சொல்லின்
நடைதெரிந்த நன்மையவர்.'...

சகுனமெல்லாம் பார்த்துப் பேசவேண்டுமாம்! எப்படி இருக்கிறது, கதை? உலகத்திற்கு அனர்த்தகாலம் நெருங்கிவிட்டதென்பதை இன்னும் ரேடியோ மூலம் வேறு விளம்பரப் படுத்த வேண்டுமா?



முடிவாக, வாலிபர்களின் பிரதிநிதி என்ற முறையில் நான் அன்பர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளும் சுற்றறிக்கை யாவது:

இளைஞர் கழக உறுப்பினர்களே! வாலிபர் சங்க அங்கத்தினர்களே! இன்று, படித்த மாயா ஜாலக்கார நபர்கள் யாராயிருந்தாலும் சரி, அவர்களை உங்கள் சபையில் கலந்து கொள்ள நீங்கள் அனுமதிக்காதிருப்பதோடு, மறந்தும் அவர்களை அங்கத்தினராகப் பேரேட்டில் பதிவு செய்யக் கிஞ்சித்தும் இணங்காதீர்கள். ஏனென்றால், பசும்பாலைத் தரையிலே ஊற்றினால் ஏதேனும் பயனுண்டா? அதற்குச் சமானம் அப்படிச் செய்வது. நம் இனத்தவர் அல்லாதவர்களினிடையே நாம், உயர்ந்த தத்துவங்களை விளக்குதல், தரையில் கொட்டிக்கொண்ட பால்போல் பயனறும். இப்படித் திருவள்ளுவரே நம் கட்சிக்குப் பலமாக எழுதி வைத்துவிட்டுப் போயிருக்கிறார். என்றாலும், இப்பொழுதே இதை மறந்துவிட வேண்டிக்கொள்கிறேன். வணக்கம்!

'அங்கணத்துள் உக்க அமிழ்து அற்றால், தங்கணத்தர்
அல்லார்முன் கோட்டி கொளல்.'

---


## ஜாதக பலன்களை

சரியாய்த் தெரிந்துகொள்ளுவதற்கு, அவை 'திருக்' ரீதியாகக் கணிக்கப் பெற்றிருக்க வேண்டும். நமது **'ஆனந்தபோதினி சுத்த திருக் கணித பஞ்சாங்க'** ஆசிரியரால், விரும்புவோர்களுக்கு 'யுரேனஸ்—'நெப்டியூன்' என்னும் நூதனக் கிரகங்களுடன் ஜாதகங்களைக் கணித்து அனுப்புவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். வேண்டியவர்கள் தாங்கள் கோருகிற அயிட்டத்திற்குரிய சார்ஜு முழுவதையும் முன் பணமாக அனுப்பி பதிவு செய்து கொள்ளுங்கள். ஆர்டர்கள் 31-8-46 வரை அல்லது குறிப்பிட்ட எண்ணிக்கை பூர்த்தியாகும் வரைதான் ஏற்றுக் கொள்ளக் கூடும். ஏற்றுக் கொண்ட வரிசைப்படி ஜாதகங்களைக் கணித்து 1.9.46 முதல் ரிஜிஸ்டர்ட் போஸ்ட் மூலம் அனுப்பி வைக்கப் பெறும்.

பிறந்த வருஷம், மாதம், தேதி, நேரம், ஊர் இந்த விவரங்களைத் தெளிவாக எழுதவும்.

**சார்ஜ் விவரம்:**

| | | | |
|---|---|---|---|
| (1) | இராசி-அம்சச் சக்கரங்களுடன் திசை இருப்புக் கணிக்க ஜாதகம் 1-க்கு | ரூ. | 5—4—0 |
| (2) | பாவ ஸ்புட-கிரக ஸ்புட சகிதம் கணிக்க | ரூ. | 15—4—0 |
| (3) | துவாதச பாவ பலன் ஆயுள் முழுவதும் | ரூ. | 30—8—0 |
| (4) | திசா பலன்-புக்தி வாரியாக திசை 1-க்கு | ரூ. | 12—4—0 |

குறிப்பு:—3-4 அயிட்டங்களுக்கு ஆர்டர்கள், 1-2 அயிட்டங்களில் ஏதாவது ஒன்றுடன் சேர்ந்திருக்க வேண்டும். 3- அயிட்டங்களுக்கு ஆர்டர் செய்பவர்கள், தங்களுக்கு முக்கியமாகவும்-விரிவாகவும் தெரிய வேண்டியவைகளைப் பற்றி விவரமாய் எழுதவும்.

**பிரசண்ட விகடன் ஆபீஸ்,**

நெ. 6, லாயர் சின்னத்தம்பி முதலி தெரு, சென்னை.

**அவன் தொழில் திருடுவதுதானா! இல்லை, இது உயிர்வாழ்க்கை நடத்தவேண்டிய அவசியத்தை உத்தேசித்து, இடையில் ஏற்பட்டது. பின், அவன் ஒழுங்காக நடக்க விரும்பினாலும், சமூகநிலை அதற்கு இடந்தரவில்லை. கந்தசாமியின் சமாச்சாரமும்-விடுதலையடைந்த கந்தசாமி மீண்டும் ஜெயில் கம்பிகளை எண்ணத் தொடங்கியதும் இப்படித்தான்!**

# அவன் தொழில்

“ராஜ நாராயணன்”

★

ஒன்று, இரண்டு, மூன்று......பத்து. மறுபடியும் ஒன்று, இரண்டு,—பத்து.........இப்படியே திருப்பித் திருப்பி ஜெயில் கம்பிக் கதவுகளில் உள்ள கம்பிகளையே எண்ணி எண்ணிப் பழக்கமாய்ப் போய்விட்டது. அவற்றை அவன் எண்ண ஆரம்பித்தது இன்றைக்கு நேற்றைக்கல்ல. அவன் அந்த ஜெயிலில் அடைக்கப்பட்டது ஆறு அல்லது ஏழு வருஷத்திற்கு முந்தி இருக்கும். அதில் குடியேறிய இந்த ஆறேழு வருஷமாக அவனுடைய ஜோலியே ஒன்று கதவுகளில் உள்ள கம்பியைத் திருப்பித் திருப்பி எண்ணுவது. இரண்டாவது தூங்க வேண்டியது என்ற இரண்டு முக்கிய பிரிவுகளாகப் பிரித்துக் கொண்டான்.

“ஏய்! நாற்பத்தேழு!” அவன் தூக்கத்தில் இருந்து திடுக்கிட்டு விழித்தான். ஜெயில் வார்டர் பக்கத்தில் நின்றுகொண்டிருந்தான்.

“என்ன நாற்பத் தேழு! நல்ல தூக்கம் போட்டே! உம்! எழுந்திரு அப்பா” என்றான் ஜெயில் வார்டர்.

தூக்கத்தில் இருந்து திடுக்கிட்டு விழித்த அவன் அவசர அவசரமாகச் சாபபாட்டுத் தட்டைத் தேடினான்.

“அப்பேன் கந்தசாமி! இனிமேல் உன்னை அப்படித்தான் அப்பேன் கூப்பிடணும். உன் நம்பர் நாற்பத் தேழு இன்றோடு அழிந்து விட்டதடா. ஆமாம். இன்றைக்கு உனக்கு விடுதலை; சோத்துத் தட்டைத் தேட வேண்டாம்.”

கந்தசாமிக்கு தூக்க மயக்கம் தெளியவில்லை. உட்கார்ந்தவாறே தலையைச் சொறிய ஆரம்பித்தான். “நாற்பத் தேழு” என்று சர்க்காரால் அளிக்கப்பட்ட பெயரே அவன் காதில் திரும்பத் திரும்ப ஒலித்துக் கொண்டிருந்தது. தன் பெயர் கந்தசாமி என்பதை அடியோடு அவன் மறந்திருந்ததில் ஆச்சரியமே இல்லை.

ஜெயில் வார்டன் உரக்கச் சப்தம் போட்டான். அப்புறம் தான் கந்தசாமிக்கு இந்த லோக சிந்தனை வந்தது. ஜெயிலை விட்டு வெளியேறினான். அந்தச் சமயத்தில் கந்தசாமி—நீயே



தஞ்சம் என்ற ரீதியில், பசி, சோம்பேறித்தனம், தூக்கம் இவை மூன்றும் தஞ்சம் அடைந்திருந்தன.

ஜெயிலைவிட்டு வந்த அவன் செய்வது அறியாமல், கொஞ்ச தூரம் நடந்து வந்தான். வழியில் பூட்டிக் கிடந்த ஒரு பங்களா இருந்தது சிவனே என்று போய்ப் படுத்தான்.

திரும்ப அவன் கண் விழித்தான். மாலை மணி ஆறு. பசி ரொம்பவும் அதிகமாய் இருந்தது. உட்கார்ந்த இடத்தை விட்டுக் கிளம்பிக் கொஞ்ச தூரம் போனான். வழியில் முனிசிபல் தண்ணீர்க் குழாய் ஒன்று திறந்திருந்தது. ஜலம் கொட்டிக்கொண்டு இருந்தது. விழுகிற ஜலத்தைப் பிடிப்பவர் எவரையும் காணோம். கந்தசாமி போய்க் கைநிறைய ஜலத்தை ஏந்தி ‘மடக் மடக்’ என்று வேண்டிய மட்டும் குடித்தான். தாடி வளர்ந்திருந்த முகத்தைக் கழுவிக்கொண்டு குழாயை மூடினான்.

பின்பு எதிர்த்தாற் போலிருந்த ஒரு ‘பார்க்’கில் அங்கு போட்டப்பட்டிருந்த ஒரு பெஞ்சியில் உட்கார்ந்தான். கண்ணை மூடிக்கொண்டு என்னவோ தியானத்தில் ஆழ்ந்திருந்தான்.

என்ன ஆச்சரியம்! பத்து நிமிஷம் கழித்து அவன் கண் விழித்து பார்த்தபோது எதிரில் அதே பெஞ்சியின் மறு பக்கத்தில்—ஒரு பெண் உட்கார்ந்துகொண்டிருந்தாள். “என்ன தைரியம் இவளுக்கு” என்று மனதிற்குள்ளேயே சொல்லிக் கொண்டான் கந்தசாமி.

அப்பொழுது நன்றாய் இருட்டியிருந்தபோதிலும் மின்சார விளக்கு ஜகஜ் ஜோதியாய் பிரகாசித்துக் கொண்டிருந்தது.

‘பெஞ்’சியின் ஓரத்தில் உட்கார்ந்திருந்த பெண் எங்கேயோ ‘பராக்கு’ பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் முகத்தில் இலேசாகப்பட்ட மின்சார வெளிச்சத்தில் அவள் விழிகள் இரண்டிலிருந்தும் கண்ணீர் பெருகிக் கொண்டு இருப்பதைக் கவனித்தான். “யாரோ, என்ன பாவமோ கஷ்டமோ, தெரியலையே” என்று அந்தப் பெண்ணுக்காகப் பச்சாதாபப் பட்டான். எப்படியாவது அவளுடன் பேசி அவள் கஷ்டத்தைத் தான் போக்க முடிந்தால் ஒருவேளை தனக்கு ஏதாவது வரும்படி.........கடைசியில் அவன் எண்ணம் பாதி நிறைவேறியது. அந்த அபலைப் பெண்—கந்தசாமியின் முழு பச்சாதாபத்திற்கும் பரிவுக்கும் இரக்கத்திற்கும் ஆளான அந்தப் பெண்—பேச ஆரம்பித்தாள்.

“என்னவோ நீங்க ஒத்தாசை பண்ணுவீருன்னு நினைச்சுத்தான் இந்தக் காரியத்தை உங்களிடம் சொல்லறேன். என் புருசன்—அவரை உங்களுக்குத் தெரியுமா?...அவருதான்...உம்...அவரை உங்களுக்குத் தெரிய வேண்டாம்....அவரு பெரிய குடிகாரரு. தெரியாமே எங்கய்யா இங்கே இவருக்கு என்னைக் கட்டிக் கொடுத்திட்டாரு. எங்கய்யா போட்ட நகைகளையும் குடிக்கக் காசில்லேன்னு எடுத்துண்டு போகப் பாத்தாரு. நான் தடுத்தேன். அவரு என்னை வெளியிலே பிடிச்சுத் தள்ளி வீட்டையும்

பூட்டிக்கிட்டே போயிட்டாரு. நகையெல்லாம் உள்ள இரும்புப் பெட்டியிலே கிடக்கு. அவைகளையாவது எடுத்துக்கிட்டு பிறந்த வீடு போகலாமின்னு இருக்கேன்."

வரவர அவள் கண்களில் நீர் அதிகமாய்த்தான் வந்தது. குரலும் கம்மிற்று. வார்த்தைகள் தொண்டையை விட்டு வர மறுத்தன. "பாவம்! அம்மா! உங்க கதையைக் கேட்டா ரொம்ப வருத்தமா இருக்கம்மா" என்றான் கந்தசாமி நிரம்பப் பரிவுடன். "அந்தக் குடிகாரன் யாருன்னு காண்பியுங்கோ! அந்த இடத்திலேயே அவனை ஒரே சுருட்டாச் சுருட்டி ஆகாயத்தில்"...என்றான் ஆக்கிரோஷத்துடன் கந்தசாமி மேலும் விடாமல் "சே! சே! இந்தா! அப்படி ஒண்ணும் செய்திடாதேயுங்க. என்ன இருந்தாலும் அவர் என் புருசருங்க தானே."

'நல்லா' புருசர் வந்து வாச்சாரு அம்மா, உங்களுக்கு என்றான் கந்தசாமி. "சரி! இப்போ உங்களுக்கு என்னாலான உதவி ஆக வேண்டியதைச் சொல்லுங்க" என்று மறுபடியும் கந்தசாமி குரலைத் தாழ்த்திக் கொண்டே சொன்னான்.

"நீ வேறு ஒண்ணும் செய்ய வேணும்: என் புருசரு கதவைப் பூட்டிட்டு வெளியே போயிருக்காரு. வர நேரம் ஆகுங்க, அதுக்குள்ளே, எப்படியாவது வீட்டைத் திறந்து, அங்கிருக்கும் இரும்புப் பெட்டியைத் திறந்து......"

"அதிலிருக்கிற நகைகளை உங்க கையிலே அள்ளிக் கொடுத்துடணும், அவ்வளவு தானுங்களே. உம்...புறப்படுங்க......நம்ப வீட்டைக் காண்பியுங்கோ!" என்றான் கந்தசாமி இடத்தை விட்டு எழுந்திருந்து கொண்டே.

பெண்ணும் எழுந்திருந்தாள். அவள் முகத்தில் புன்னகை தோன்றியது. கன்னங்களில் வழிந்த கண்ணீரைப் புடவை முன்தானையால் துடைத்துக் கொண்டாள்.

"இந்தாங்க. எனக்குப் பதினெட்டு வயசிலே இவருக்குக் கலியாணம் ஆச்சுங்க, இப்போ நாலு வருசம் கூட ஆகல்லே. அதுக்குள்ளே இவரு இப்படி நடத்தை கெட்டு...என் பேரு வந்துங்க... கண்ணம்மான்னு கூப்பிடுவாங்க......" என்றெல்லாம் சொல்லிக் கொண்டே போனாள்.

கந்தசாமியின் காதில் இவைகள் எல்லாம் விழவில்லை. அவள் பெயர் மட்டுந்தான் அவன் கவனத்தில் கேட்டது.

கண்ணம்மாவிற்கு ஆச்சரியம் உண்டாகும்படி வெகு சீக்கிரத்தில் அவள் காண்பித்த வீட்டைத் திறந்தான். பின்பு அவள் காண்பித்த இரும்புப் பெட்டியையும் திறந்தான். நகைகளை அள்ளி அவளுக்காக ஒரு துண்டில் வைத்துக் கட்டுவதற்காக கீழே ஒரு துண்டை விரித்தான். அதோடு 'என், வேலை எப்படி?' என்று கேட்பதுபோல் அவளைப் பெருமிதத்தோடு பார்த்தான். அவள் முகத்தில் புன்னகை தவழ்ந்தது.



அடுத்த விநாடியில் அது மறைந்தது. ஐயோ......என்று அலறினாள். ஆம்...அவர்கள் இருந்த வாசற்படி அருகில்...... அவள் கணவன்...அந்தப் பாழும் குடிக்காரன்...நின்று கொண்டிருந்தான். கையில் ஒரு துப்பாக்கி வேறு வைத்திருந்தான்.

கண்ணம்மா இரைந்தாள். "ஐயோ........எப்படியாவது நீங்கள் தப்பி விடுங்கள். இல்லாவிடில் உங்கள் உயிருக்கு ஆபத்து தான்."

கந்தசாமி நிலைமையை உணர்ந்தான். அவனுக்கு ஏற்கனவே பசி. அதோடு அதையும் லட்சியம் பண்ணாமல் அந்தப் பெண்ணுக்காக இவ்வளவு சிரமப்பட்டதில் இருக்கிற பசியும் அதிகமாயிற்று. கையில் சக்தி இல்லை. ஆகவே தப்புவதை விட் அவனுடன் குஸ்தி போட்டால் தன் நிலைமைதான் மோசமாகும்.

குடிகாரனின் அதட்டல் அதிகமாயிற்று. அவசரமாக ஓடி வந்து கண்ணம்மாவைக் கையில் பிடித்தான். சமயம் அறிந்து கந்தசாமி தப்பினான்.

மறுநாள் காலையில், தன் கையில் கிடைத்த கடிதத்தை ஆவலுடன் கந்தசாமி பிரித்துப் படித்தான்.

நண்பருக்கு.

நேற்றிரவு...தெருவில்...மைய வீட்டில் நடந்த கொள்ளையில், வீட்டு வாசல் கதவு இரும்புப் பெட்டி முதலியவைகளைத் திறந்து உதவி செய்ததற்கு மிகுந்த வந்தனம் செலுத்த நானும் என்னுடைய கணவரும் மிகுந்த கடமைப் பட்டவர்கள். மேற்படி விஷயத்தில் தங்களை ஏமாற்ற நேர்ந்ததற்கு மன்னிக்கவும்.

தங்கள்

கண்ணம்மா.

கடிதத்தைப் படித்து முடித்தானோ இல்லையோ! திரும்பினான். மேற்படி கொள்ளையில் அவனைச் சந்தேகிப்பதாக அழைத்துக்கொண்டு போனார் இன்ஸ்பெக்டர். மறுபடியும் அவன் தொழிலுக்கே வந்து சேர்ந்தான். ஒன்று, இரண்டு, மூன்று... பத்து என்று ஜெயில் கதவுக் கம்பிகளை எண்ண. ஆனால் இப்பொழுது அவன் பெயர் கந்தசாமியும் இல்லை; நாற்பத்தேழும் இல்லை. ஐம்பத்தேழு.

---

## கேள்வியும் பதிலும்

மனைவி:—என்ன...மூன்று எழுத்திலே ஒரு வார்த்தை...கடைசி இரண்டு எழுத்து-த,...ல் அது என்ன வார்த்தை, சொல்லுங்கோ!

புருஷன் (அப்பாவி):—சாதல்.

—ஜி. சுவாமிநாதன்.

"இனிமேல் நீ ஏழைகளைப்பற்றிப் பாடக்கூடாது. வறுமையின் கொடுமையைக் கவிதையாக மாற்றக்கூடாது. என் மீது காவிய மியற்றவேண்டும்."

..............

"விதியின் வறுமையால் வாடுகிறான் பாட்டாளி. அவனுக்கு நானும் நீயும் என்ன பரிகாரம் செய்ய முடியும்?"

"அரசே! விதி என்ற வார்த்தை பாமர மக்களின் வழுக்கும் பாறை. அதில் தாங்களும் சறுக்கி விழ முயல்கிறீர்கள்."

# சொல்லும் செயலும்

"சலம்"

☆

இடம்:—

விசாரணை மண்டபத்தில் அரசனும் கவிஞனும்

*அரசன்:*—கவிஞனே! நான் இந்நாட்டின் காவலன் என்பதையும் எண்ணாமல் எனது ஆணையை அலட்சியம் செய்த உனது பிற்கால வாழ்வைப்பற்றிச் சிறிதேனும் எண்ணிப் பார்த்தாயா?

*கவிஞன்:*—வரப்போகும் பிற்கால வாழ்வைப்பற்றி வீண் கனவு கண்டு விலையுயர்ந்த தற்கால நேரத்தைப் போக்கும் குணம் எனக்கில்லை. வருங்காலத்தைப்பற்றி அவசரமாய் முடிவு செய்து அந்தரத்தில் கோட்டை கட்டி, அழிவிலே மயங்கிச் சாவதிலும் எனக்கு விருப்பமில்லை.

*அர:*—நீ கவலைப் படாவிடினும் பரிதாபகரமான எதிர்காலத்தைப்பற்றி எண்ண என் மனம் வருந்துகிறது.

*கவி:*—உங்களது வருத்தத்தை நீங்களே மாற்றிக் கொள்வதுதான் நல்லது.

*அர:*—உனது பேச்சும் எழுத்தும், பிரசங்க வன்மையும் விழலுக்குப் பாயும் நீராவது நலமல்ல என்பதே என் கருத்து.

*கவி:*—தங்கள் கருத்தின்படி எனது உழைப்பு நாட்டில் விழல்களை வளர்க்கவில்லை. அதற்கு மாறாக வருங்காலப் பயிர்களையே உரமூட்டி வளர்க்கின்றது, வேந்தே!

*அர:*—இதுதான் முழுப்பொய்.

*கவி:*—அரசே! ஒரே பொருள் மனிதனுக்கு பூரண உண்மையாகவும் மற்றொன்று மனிதனுக்குப் படு பொய்யாகவும் மாறித் தோன்றுவது இயல்புதான். எனது களங்கமற்ற உண்மையைத் தாங்கள் முழுப்பொய் என்று சொல்கிறீர்கள், இது நகைப்புக்கிடமான நிகழ்ச்சி.



*அர:*—எனது செயலா நகைப்புக்கிடந் தருகிறது! உம். புரட்சிப் புயலை வீசச் செய்து, குழப்பக் கடலில் கொந்தளித்தலைக்கும் சில வாலிபர்களைக் கூட்டி நீ நடத்தும் சங்கந்தான் நாட்டின் விழல் என்று குறிப்பிடுகிறேன்.

*கவி:*—அதுவா, அரசே! காரசாரமான பதங்களைப் பிரயோகிப்பதாலும், குற்றப் பத்திரங்களை வாசிப்பதாலும் நாட்டு வாலிபர்களை விழல்கள் ஆக்கி விட முடியாது. மேலும் அவர்களது லக்ஷியங்கள் மிகத் தெளிவானது; குழப்பமில்லாதது. கொந்தளிப்பற்றது. அமைதியின் அஸ்திவாரம். அவர்கள் வாழ விரும்புகிறார்கள். அவர்கள் நரம்புகளிலும் ரத்தம் ஓட வேண்டுமென்கிறார்கள். இதைத்தான் தாங்கள் புரட்சி என்று ஆத்திரமான வார்த்தையால் குறிக்கிறீர்கள்.

*அர:*—உம். நீ ஓர் அதிகப் பிரசங்கி.

*கவி:*—சிறு பிரசங்கத்தால் கருத்துப் புரியாவிட்டால் தங்கள் உரைப்படி அதிகப் பிரசங்கம் தேவையாகத்தானிருக்கிறது.

*அர:*—உம்; உன்னைப்பற்றிப் பிணைத்திருக்கும் இரும்புச் சங்கிலிகளின் கொடுமையை நீ இன்னும் உணரவில்லையா?

*கவி:*—நன்றாய் உணர்ந்துகொண்டேன், அரசே! மிருகத்தைப் பிணைக்கும் இரும்புச் சங்கிலி நாட்டின் கவிஞனைப் பிணைத்திருக்கிறது. எருமையின் முரட்டுத் தோலில் புரள வேண்டிய இந்த இரும்பு வடம், எனது தோள்களில் புரளுகின்றது.

*அர:*—அதற்காக நீ வெட்கப்பட்டுப் பின்னாவது திருந்தாமல் பிதற்றுகிறாயே.

*கவி:*—வெட்கப்படுகிறேன். ஆனால் அச்சப்படவில்லை.

*அர:*—அவைகள் உன் உடலை இறுக்கக் கட்டினால்......!

*கவி:*—அதுவும் உங்கள் இயற்கைக்குகந்ததே எனக் கூறுவேன்.

*அர:*—உன்னை விழுங்கக் காத்து நிற்கும் இருட் சிறையின் பயங்கரம் உனக்குத் தெரியுமா!

*கவி:*—தெரிந்துகொண்டு தானிருக்கிறேன்.

*அர:*—அங்கே உன்னை வரவேற்கும் பொருள்கள் என்ன தெரியுமா?

*கவி:*—இரும்புக் கம்பிகள்! ஈட்டிக் கரங்கள்! விஷப்பாம்புகள்! தூக்கு மேடைகள்!

*அர:*—ஆம், தூக்கு மேடையில் உன்னை ஏற்றினால்......

*கவி:*—ஆச்சர்யப்படமாட்டேன்.

*அர:*—கடைசியாக இதோ ஒரு நிபந்தனை. இதையாவது ஒப்புக்கொள்.

*கவி:*—கூறுங்கள் பார்க்கலாம்.

அர:—இனிமேல் நீ ஏழைகளைப்பற்றிப் பாடக் கூடாது. வறுமையின் கொடுமையை கவிதையாக மாற்றக்கூடாது. என் மீது காவியமியற்ற வேண்டும்.

கவி:—அரசே! வருந்துகிறேன்.

அர:—ஏன் எதற்காக?

கவி:—ஒன்றுவது நிறைவேற்றக்கூடிய தில்லையே?

அர:—உன்னை சும்மாத்தான் இருக்கக் கூறுகிறேன். இது முடியாத காரியமா?

கவி:—கவிஞன் சும்மா யிருப்பதைக் கேவலமாக எண்ணுகிறான்.

அர:—விதியின் வறுமையால் வாடுகிறான் பாட்டாளி. அவனுக்கு நானும் நீயும் என்ன பரிகாரம் செய்ய முடியும்?

கவி:—அரசே! விதியென்ற வார்த்தை பாமர மக்களின் வழக்குப் பாறை. அதில் தாங்களும் சறுக்கி விழ முயல்கிறீர்கள். தாங்கள் நாட்டின் வேந்தர். தாங்கள் நினைத்ததைச் செய்ய இயலும்.

அர:—விதியை எதிர்த்து வெற்றி கண்டவர்களில்லை, கவிஞனே! அவர்களுக்கு வந்தது தோல்விதான்.

கவி:—விதியை எதிர்க்காதவர்களுடைய செயலின்மையைக் காட்டிலும் அதனை எதிர்த்து அடைந்த தோல்வி சிறப்புடையது. அரசே ஏனெனில் அத்தோல்வி இலட்சியத்துடன் கூடியது. செயலின்மைக்கு இலட்சியமே கிடையாது. தோல்வி எதிலும் உண்டு. வெற்றிதான் கடந்து வருவது. இலட்சியமோ என்றும் உயிர்த்திருப்பது. உள்ள நிலைமையைப் பறை சாற்றுவதே என் கடமை.

அர:—உனது கடமை அதுவானால் எனது செங்கோலின் கடமை யாதென அறிந்தனையா?

கவி:—மன்னிக்க வேண்டும். செங்கோல் என்னை அணைக்கும். ஆயின் தமது நிர்வாகமோ என்னைத் தண்டிக்கும்.

அர:—அதைத் தவிர்த்துக் கொள். தண்டனை மிகக் கடினமானது.

கவி:—அதேபோல் தான் நாட்டின் ஏழ்மையும் மிகக் கொடுமது.

அர:—உனது அழகிய இளம் மனைவியை எண்ணிப் பார்.

கவி:—ஆம். அவள் அன்பு மிகவும் உயர்ந்ததே.

அர:—அவளைப் பிரிய நேரும்.

கவி:—ஆம். ஆனால் இலட்சியத்தைப் பெறுவது இயலாது.

அர:—உம். நாட்டு வாலிபர்கள் வான வில்லைப் போன்றவர்கள்—அவர்களையும் நம்பாதே—அலையும் எண்ணமுடையவர்கள்.



கவி:—ஆனால் அவர்களது வீரத்தை ஒன்று திரட்டி வைத்துள்ளேன்.

அர:—இதுவரை அதற்கு அத்தாட்சி காணவில்லை நான்.

கவி:—சமயம் நேருகையில் பார்ப்பீர்கள்.

அர:—உம். உன்னைச் சிறையில் வைக்கப் போகிறேன்.

கவி:—ஆனாலும் சித்தம் கலங்காது.

அர:—சளைக்காமல் பேசுகிறாய்.

கவி:—கடமைதான் என் வாழ்வு.

(ஒரு பிரதானி ஓடி வருகிறான்.)

பிர:—(பதைப் பதைப்போடு) அரசே! எதிரிகள் நமது நாட்டை ஆக்ரமிப்பார்களாம். நமது படை பலம் போதாது.

அர:—என்ன?

கவி:—அரசே! எதிர்காலத்தையும் விதியையும் நிர்ணயிக்கத் தங்களால் ஆகுமென்றீர்களே!

அர:—ஆம்......என்ன செய்வது?

கவி:—நாட்டின் வாலிபர்கள் விழல்கள் அல்லவென நிரூபிக்கும் கடமை என்னுடையது. ஆகையால் என் தோழர்களுடன் எதிரிகளை ஓட்டி வீர வாகை சூடி வருவேன்.

அர:—வாழ்த்துகிறேன். வெற்றி நமக்கே வரும். வாருங்கள். வேற்றுமைகளைப் பற்றி பிறகு வாதிப்போம்.

கவி:—வெல்க கடமை. செயலை முடிப்போம்.

---


## "ஆனந்த போதினி"

(மாதப் பத்திரிகை)

### சந்தா விவரம்

| | |
|---|---|
| வருடம் 1-க்கு தபாற்கூலி யுள்பட இந்தியா, சிலோன் | ரூ. 2—0—0 |
| நடந்துகொண்டிருக்கிற வருடத்திய தனிச் சஞ்சிகை | ரூ. 0—3—0 |
| சென்ற வருடங்களின் தனிச் சஞ்சிகை | ரூ. 0—4—0 |
| ஜீவிய சந்தா | ரூ. 30-0—0. |

ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.

எப்பொழுது சேர்ந்தாலும் ஆடிமீ முதல் கணக்கு வைக்கப்பட்டு சஞ்சிகைகள் அனுப்பப்படும்.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால் பெட்டி நெ. 167, சென்னை.

# ஜ்யோதிஷ பல ரகஸ்யம்

சி. பி. ஆனந்தம்

★

## தனுஸில் 'யுரேனஸ்'

உபயகேந்திர ராசிகளில் மூன்றாவதாக வருவது 'தனுஸ்' 'தீ' ராசித் திரிகோணங்களில் இறுதியில் உள்ளது. வான மண்டலத்தில் ஒன்பதாவதான இராசி. 'குரு'க் கிரகத்தின் நேர்முக இயற்பலம் வாய்ந்தது. ஆண் அம்சம் கொண்டது. இதன் வடிவு 'வில்' ஆகும்.

வருங்கால பலன்களுக்குரிய இன்றைய உழைப்பின் மேன்மைகளையே முக்கியமாய்க் குறிக்கும் உபயராசிகளில் இந்த தனுசும் ஒன்றாகும். ஆயினும், 'புத'க் கிரகத்தின் ஆட்சி பலன்களுக்குரிய 'மிதுனம்' 'கன்னி'களைப்போல மட்டுமின்றி சேவையின் இனிமைகளிற் பெரிதும் பற்றுக்கோடு மிகுந்தது தனுசு. கபட-சூதுகள் அற்றது; பரிசுத்தமுள்ள மனநிலை வாய்ந்தது. காருண்யம் மிக்க நேர்மையும்-தாராள சிந்தையும் இதன் ஜீவன். பலன்களிற் காட்டிலும் கருமத்தில் விசேஷ திருஷ்டியுள்ளது. இடைவிடாத சேவையில் சதாவும் நாட்டமுடையது. உண்மைக்காகவும்-நியாயத்திற்காகவும் ஒழுங்குமுறை பிசகாமல் நின்று போராடும் விசேஷம் இதன் பெருமைகளிற் தலைமைக்கண் உள்ளதாகும். புரட்சிகரமற்ற தொண்டுகளில் எவ்வித தியாகத்திற்கும் பின்வாங்கி நிற்காது. மாறுதலை வேண்டாத மனப்பான்மை நிறைந்தது. ஆயினும், காலதனின் முற்போக்கில் வரும்—அல்லது நேரும் படிப்படியான அபிவிருத்திகளை இனிது வரவேற்றிற்குமென்பதில் ஐயமில்லை.

நல்ல சாஸ்திர பிரக்ஞையும்—தத்துவ ஞானமும்—ஆராய்ச்சி நேர்மையும், கலைத்துறைகளிலும்-ஆத்மார்த்த சித்திப பாதைகளிலும் விசேஷ வெற்றிகளுக்கு உதவுவனவாக எப்பொழுதும் நிறைந்திருக்கும். உயர்ந்த லக்ஷ்யங்களில் கவனம் மிகுந்த இதன் பலம், வீண் ஆடம்பரங்களில் இல்லாமல் சாமான்ய வாழ்க்கையைப் பெரும்பாலும் மேற்கொள்ளச் செய்யும். ஆசையும்—பாசமும் நிறைந்ததே யாயினும், முழுவதும் அவற்றின் வசமாய் விடாமல் காத்துக்கொள்ளும் திறமை கொண்டது. மாசற்ற உள்ளமும்—தெய்வ நம்பிக்கையும் கோரிய வெற்றிகளை அனுயாசமாக்கி வரும்.



இத்தகைய தனுசில், ஞான ஆஸ்ரயமே தன் முக்கிய இல்லாகவுடைய 'யுரேனஸ்' கிரகத்தின் ஸ்திதி, அதன் பலன்களைப் பெருக்குவதில் நன்கு உதவுகிறது. அரிய கற்பனா வளத்தையும்—புதியன காணும் பெற்றியையும் முக்கியமாய் வளர்க்கும். மதக் கோட்பாடுகளில் அதிகம் ஆழ்ந்திருக்கும்படி செய்யும். இதில் ஆராய்ச்சி நேர்மை ஒரு அளவு எல்லை வரைதான் உதவக் கூடுமென்பது இதன் கொள்கையாக விருக்கும். கல்வித் துறைகளில் விசேஷ வெற்றிகளை வழங்கும். உயர்தரமான உறவுகளை வெகு மதிப்புக்குரியதாகப் பெருக்கும். சுதேசத்தைவிட-அயல் நாடுகளில் அன்னியராலும் வணக்கஞ் செய்யும்படி உயர்நலங்களைத் தரும். நீதி காக்கும் நேர்மை மிக்க இதன் உன்னதம் எங்கும் இனிய செல்வாக்கை உயர்த்தும். சிறந்த ஆலோசகராகவும்—தனி ஒரு விதி இயற்றும் மேதையாகவும் உலகு புகழ் கீர்த்தியைத் தரும்.

இதர கோள்களின் தீய செல்வாக்குகளிலும், இந்நிலைமையை மேலும் பெருக்குவதற் கேற்ற பலவும் வாழ்வின் போக்கில் நேரும். அவை தரும் பெரும் சோதனைகளிலும் நேர்மை சிறிதும் வழுவாத பெரும் தியாகிகளாகச் சிறப்பர்.

உலகில், பொருள் எல்லையின வெற்றிகள் வெறுங் கனவாயிருக்கும். உறவினர் என்போர்களாலும்—அன்பும் அபிமானமும் கொண்டவர்களாலும் வஞ்சனைகள் காத்திருக்கும். இவையெல்லாம் வாழ்வின் நடுவில், தீய செல்வாக்குகளின் சம்பந்தங்களில் ஒருவருக்கு நேரும். இறுதியில் கோதண்டராசி யென்னும் தனுஸில் யுரேனஸின் ஸ்திதிபலம் உயர்தரமுள்ள சித்திகளிற் பெருஞ் சிறப்புக்களைப் பெருக்கிச் செல்லும்.

---

**அடுத்த இதழிலிருந்து!**

ஆங்கில மகாகவி

**வில்லியம் ஷேக்ஸ்பியர்**

இயற்றியுள்ள

**ஜூலியஸ் ஸீஸர்**

நாடகம்

தொடர்ந்து வெளியாகும்.

மாற்றாந்தாய்மார் கொடுங்குணத்தையும், அவர்கள் சக்களத்திகளின் குழந்தைகளையும், வளர்ப்புக் குழந்தைகளையும் படுத்தும் கொடுமையையும் குறித்து இதுவரை எத்தனையோ கதைகள் வந்திருக்கின்றன. அவைகளில் இதுவும் ஒன்று.

# மாற்றாந்தாய் ☆

ஆர். வெள்ளைச்சாமி ★

சொக்கன் என்னும் இளைஞன் வழக்கப்படி தன்னுடைய படகில், வலை வீசி மீன் பிடிப்பதற்காகப் புறப்பட்டான். சாயங்காலம் சுமார் ஐந்து மணியிருக்கும். திடீரென்று வானம் இருண்டது. கடலில் புயலடிக்கவே திடமனதுடைய சொக்கனுக்குக் கூடக் கொஞ்சம் பயம் ஏற்பட்டது. இருந்தாலும் கடவுளைத் தியானம் செய்துகொண்டு கரையை நோக்கிப் படகைத் துரிதமாகச் செலுத்தினான். கொஞ்ச தூரத்தில் வந்துகொண்டிருந்த ஒரு கப்பல் திடீரென்று கவிழ்ந்தது. சொக்கனுடைய மனம் திடுக்கிட்டது. சிறிது தூரத்தில் கப்பலின் உடைந்த பலகை ஒன்றின்மேல் ஒரு ஸ்திரீ தள்ளாடிக் கொண்டிருப்பதைப் பார்த்தான். உடனே தன் நலத்தையும் கருதாது படகை அந்தப்பலகையிருக்குமிடம் ஓட்டிக்கொண்டு சென்றான். அருகில் சென்றதும், அலங்கோலமாக மிதந்துவரும் அந்த ஸ்திரீயைப் படகில் ஏற்றிக்கொள்ளப் பிரயத்தனப்பட்டான். ஆனால் அவள் தன் மார்போடு அணைத்திருந்த ஓர் அழகிய பாலகனைப் படகில் எறிந்துவிட்டு மறுநிமிடம் கடலில் விழுந்து மறைந்தாள். சொக்கன் திக்பிரமை அடைந்தான். ஆயினும் ஒருவாறு சமாளித்துக்கொண்டு கஷ்டத்துடன் குழந்தையோடு கரைவந்து சேர்ந்தான்.

நமது கதாநாயகன் சொக்கனுக்குக் கலியாணம் ஆயிருந்தது. அவன் மனைவியின் பெயர் அழகி. அவள் மிகவும் அழகாகவும், சிகப்பாகவும், யௌவனப் பருவத்தையுடையவளாயுமிருந்தாள். இவர்களுக்கு நெடுங்காலமாகக் குழந்தை பிறக்கவில்லை. இவர்களிருவரும் புத்திரப் பேற்றையடைய நெடுங்காலம் கடவுளைப் பிரார்த்தித்து வந்தனர்.

சொக்கன் கையில் குழந்தையுடன் மனைவியிடம் போனான். அவள் குழந்தை கிடைத்த வரலாற்றையறிந்து மிகவும் ஆச்சரியப்பட்டாள். இவர்களிருவரும் குழந்தையை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வந்தனர். அவர்கள் அக்குழந்தையைச் சின்னான் என்று அழைத்தனர். சின்னானுக்கு ஒரு வயது நிரம்பிற்று. கடவுள் சின்னானுடைய இன்ப வாழ்வைக் கெடுக்க எண்ணங்கொண்டார் போலும். அழகிக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அதற்கு மாணிக்கம் என்று பெயரிட்டனர். சின்னானுக்குச் சனியன் பிடித்தது. தன் கணவன் பாடுபட்டுச் சம்பாதிப்பதை வெட்டித் தண்டமாக, சின்னானுக்குக் கொடுக்க அழகிக்குச் சகிக்கவில்லை. தான் வீட்டுக்குச் சொந்தக்காரியும்,



ஒரு பிள்ளைக்குத் தாயும் ஆகிவிட்டதால் தான் இட்டது சட்டம் என்று ஆரம்பித்தாள். எனவே, சின்னானுக்கு அடி கிடைக்காத நாள் கிடையாது. முகத்தைக் காட்டினால் அறை, முதுகைக் காட்டினால் குத்து. அவள் இருதயத்தை விட்டு இரக்கம் என்பதே ஓடிப்போய் விட்டது. தன் குழந்தையைப்போல் சின்னானும் ஒரு சிறுவன் என்பதை எண்ணாது அவனுக்குக் கடும் வேலைகளை இட்டாள். பாவம்! குழந்தை சின்னான் பேசுவதில் பயனில்லை என்று கண்டு மௌனம் சாதித்து, மனஞ் சோர்ந்து கண்ணீர்விட்டுக் கழிக்கலானான். சரியான நேரத்திற்கு ஆகாரமில்லை. உடைகளும் இல்லை. சிறுவன் உருக்குலைந்து, முகம் வாடி, சோர்வடைவதையும், அவனுக்குக் கந்தையைக் கொடுத்து, கஞ்சி வார்ப்பதையும் அக்கம் பக்கத்தார்கள் கவனிக்காமல் இல்லை. ஆனால் அவர்களால் என்ன செய்ய முடியும்?

சொக்கன் மீன் பிடித்துவிட்டுச் சாயங்காலம் வீடு வந்து சேர்ந்தவுடன் தன் குழந்தை மாணிக்கத்தையும், தன் வளர்ப்புப் பிள்ளை சின்னானையும் எடுத்து வாரி முத்தமிட்டு அகமகிழ்வான். சின்னானைத் தன் குழந்தைக்குச் சரிசமானமாகத் தன் புருஷன் பாவிப்பதைப் பார்த்தால் அழகிக்கு வயிற்றெரிச்சல். ஆனால் உடைத்துச் சொல்லப் பயப்பட்டாள். தன் கணவன் தலை மறைந்ததும் வட்டிக்கு வட்டி வாங்கி விடுவாள். சின்னான் வாடுவதை சொக்கன் கவனிக்காமலில்லை. கேட்டால் மனைவி சிறுவன் மேல் இல்லாததும் பொல்லாததும் சொல்ல ஆரம்பித்து விடுகிறாள். குழந்தை சின்னானுக்கு அவளை மறுத்துப் பேசத் துணிவில்லை.

காலச் சக்கரம் சுழன்றது. சின்னான் 19-வயது உடைய வாலிபனானான். சொக்கன் சின்னானைத் தன்னுடன் மீன் பிடிக்கக் கூட்டிச் செல்வான். தன் கணவன் சின்னானுடைய சுறுசுறுப்பையும், தீரச் செயல்களையும் புகழ்வது அழகிக்குப் பொறுக்க முடியவில்லை. பழிக்குப்பழி வாங்க ஏற்ற சமயத்தை ஆவலோடு எதிர்பார்த்திருந்தாள். சொக்கன் கடலில் சென்று ஒரு வாரமாயிற்று. அன்று அவன் திரும்பி வரும் நாள். சின்னானால் சிற்றன்னையின் கொடுமையைப் பொறுக்க முடியவில்லை. தகப்பன் வந்ததும் அவனைத் தரிசித்துவிட்டு எங்கேயாவது போகலாமென்று காத்திருந்தான். எதிர்பார்க்கப்பட்ட படகு வரவில்லை. தூரத்திலும் தெரியவில்லை. மேகமந்தாரம் ஆகாயத்தை மூடிற்று. அலைகள் மலைபோல் எழும்பிப் பாறைகள்மீது மோதின.

சின்னானுக்கு மனதில் பயம் உண்டாயிற்று. தாயாரிடம் ஓடினான். "அம்மா, கடும்புயல் அடிக்கும்போல் தோன்றுகிறது. என் தகப்பனாரைத் தேட வரலாமென்று நினைக்கின்றேன்" என்றான். அழகியின் மனதில் ஒரு யோசனை தோன்றிற்று. மனப்பூரிப்பு அடைந்தாள். தொலைந்தான் பயல் என்று நினைத்துச் சந்தோஷப்பட்டாள். "சரி, அப்படியே செய்யப்பா. ஆனால்

ஐந்து நிமிஷம் இங்கே இரு. வந்து விட்டேன்" என்று சொல்லி விட்டு முகத்துவாரத்தில் கட்டியிருந்த படகுகளுக்குச் சென்றாள். சின்னானின் படகிற்கு அடியில் ஒரு துவாரம் செய்து கந்தையால் மூடிவிட்டு வந்து விட்டாள்.

அழகி வீட்டின் ஜன்னலருகே உட்கார்ந்து கடலைப் பார்த்துக் கொண்டிருந்தாள். யாரோ படகில் ஏறிச் செல்வதைக் கண்டாள். சின்னான்யாதிரி இருந்தது. "சரி, இனி அவன் சாவது நிச்சயம்" என்று மனம் பூரித்துத் தன் மகன் மாணிக்கத்தின் வரவை எதிர்பார்த்திருந்தாள். இரவு சுமார் 9 மணியிருக்கும். யாரோ கதவைத் தட்டும் சப்தம் கேட்டது. சின்னான் எதிரில் வந்து நின்றான். அவனருகே தன் புருஷனும் நின்றிருப்பதைக் கண்டாள். "அம்மா, நான் மாணிக்கத்தின் படகில் ஏறிச் சென்றேன்" என்றதும் அழகிக்கு ஒரு சந்தேகம் வந்துவிட்டது. ஒருவேளை தன் மகன் அந்தப் படகில் சென்றானோ என்னவோ? மனம் பதைத்தது. துக்கம் தாங்க முடியவில்லை. ஓ! என்று அலறிக் கொண்டு கடற்கரையை நோக்கி ஓடினாள். சொக்கனும் சின்னானும் பின் தொடர்ந்தார்கள்.

ஆஹா! என்ன கோரக் காட்சி! அசைவற்ற உடலை இருவர் தூக்கிக் கொண்டுவந்தனர். உடல் மாணிக்கம் என்று அறிந்ததும் அழகி துக்கம் தாங்க முடியாமல் கடலில் குதித்தாள். சின்னானும் கடலில் குதித்துத் தன் அன்னையைத் தூக்கிக் கொண்டு வந்தான். மாணிக்கத்திற்கு உயிர் வந்துவிட்டது. அழகிக்கு நினைவு வந்ததும் தன் மகன் மாணிக்கத்தைக் கட்டிக்கொண்டு முத்தமிட்டாள். தன் கணவனையும், சின்னானையும் பார்த்து, "நான் சின்னானுடைய பொன்னான குணத்தை இதுவரையில் தெரிந்து கொள்ளாமற் போனேனே" என்று ஆனந்தக் கண்ணீர் வடித்தாள்.

---

## சந்தா நேயர்களுக்கு

சந்தா நேயர்கள் நமது காரியாலயத்துக்கு எழுதும் கடிதங்கள் ஒவ்வொன்றிலும் தங்களுடைய சந்தா நம்பரைக் குறிப்பிட்டு எழுதும்படி கேட்டுக் கொள்கிறோம். சந்தா நம்பர் குறிப்பிடாமல் விலாசத்தை மாற்றும்படியோ, அல்லது வேறு எந்த விதமான காரியத்துக்கோ எழுதப்படும் கடிதங்களால் காரியாலயத்ினருக்கு வீண் காலதாமதமும் சிரமமும் ஏற்படும் என்பதை அறிவித்துக் கொள்கிறோம்.

# சுற்றுப் பிரயாணம்

வி. எஸ். சுந்தரராஜன்...

(சென்ற இதழின் தொடர்ச்சி)

### அத்தியாயம் 15

### "உடனே வரவும்!"

மனேகர் பாபு சென்னை செண்ட்ரல் ஸ்டேஷனில் தம் பிள்ளையுடன் இறங்கி—அன்றுடன் இருபது நாட்களுக்கு மேலாகி யிருந்தன. அவர் சுற்றுப் பிரயாணத்திற்குக் கிளம்பவேண்டிய தினம் வெகு சமீபத்திலிருந்தது.

ஒரு தடவை பம்பாய் சென்று அங்கு ஒரு வாரம் தங்கி இருந்துவிட்டு, தம் மனைவியுடன் திருச்சிக்குப் புறப்படுவது. நேராக வத்ஸன் இருக்குமிடம் சென்று, அவனையும், அழைத்துக் கொண்டு கிருஷ்ணனிடம் செல்லுவது. வத்ஸனை மாதவனாகக் கிருஷ்ணனுக்கு அறிமுகப் படுத்தி உயிலை அடைவது. அவ்வளவுதான்! முன்னதாகவே கிருஷ்ணனுக்கு மாதவன் அகப்பட்டு விட்டான் என்று எழுதி விடுவது என்றும் தீர்மானித்துக் கொண்டார்.

தன் மகனுக்கு இடையே ஒரு கடிதம் எழுதினர். அவனை அதிகமாக வெளியே சுற்றப் போகவேண்டாம் என்று எழுதியிருந்தார். எங்கே கிருஷ்ணனின் கண்களில் அவன் அகப்பட்டு விடுவானோ என்று பயந்தார்.

* * * *

அவர் பம்பாய்க்குப் புறப்படவிருந்த தினம் அவருக்குத் திருச்சியிலிருந்து ஒரு கடிதம் வந்திருந்தது.

"என் அக்காவின் பெண் செல்லத்திற்கு...தேதி விவாகம் நடக்கப் போகிறது. ஆகவே தங்கள் குடும்ப சகிதம் முன்னதாக வந்துவிட வேண்டுகிறேன்.

"இவளைத்தான் காணமற் போன மாதவனுக்குக் கொடுப்பதாக இருந்தது. ஆனால் இவளுக்கு வயதோ ஆகிவிட்டது. அவன் வரும் வழியைக் காணோம். ஆகவே, விவாகததிற்கு ஏற்பாடு செய்துவிட்டேன். மாதவன் வந்துவிட்டானானல் அவனுக்கு சுசிலா இருக்கவே இருக்கிறாள்.

"ஏதாவது தகவல் அகப்பட்டதா? வேறு விசேஷமில்லை. கிருஷ்ணன்."

மனேகார் செல்லத்தையும், சுசிலாவையும் பார்த்திருக்கிறார். அவரும் சுசிலாவைத்தான் அதிகமாக விரும்பினர். அவள்

அழகு செல்லத்திற்குக் கிடையாது என்பதே அவருடைய கருத்து.

ஆகவே தம் மகனுக்குத் தாம் விரும்பியபடியே சுசீலா மனைவியாகக் கிடைக்கப் போவதைக் குறித்துப் பெரிதும் மகிழ்ந்தார். அதே சுசீலாவையே வத்ஸனும் காதலித்தான என்று அவர் அறிந்திருந்தால் அவர் மகிழ்ச்சி எவ்வளவு அதிகரித்திருக்குமோ?

ஆனால் மகனும், தந்தையும் விரும்பினால் மட்டும் போதுமா? சமயமும், சந்தர்ப்பமும் கூடி வர வேண்டாமா? 'கைக்கெட்டியது வாய்க்கெட்டுமா?'' என்று தந்தையும், 'காதல் கைகூடுமா?' என்று தனயனும் எண்ணியவாறே தங்கள் காரியங்களைக் கவனித்து வந்தனர்.

இரண்டும் நடக்காது என்று சொல்லுவதுபோல் வந்தது ஒரு தந்தி பம்பாயிலிருந்து, தம் மனைவியுடன் புறப்படவிருந்த மனோகருக்கு கிருஷ்ணன்தான தந்தி அடித்திருந்தார்.

"மாதவன் அகப்பட்டு விட்டான். உடனே புறப்படவும்! மற்றவை நேரில்—கிருஷ்ணன்."

மனோகரின் உணர்ச்சிகளை எப்படி வர்ணிக்க முடியும்? முகூர்த்தம் நடக்க இன்னும் மூனறே நாட்கள் இருந்தன.

தம்பதிகள் திருச்சிக்குப் பயணமாயினர்.

## அத்தியாயம் 16

### வாக்குறுதி

சுசீலாவால் மறக்க முடியவில்லை. எவ்வளவோ சிரமப்பட்டும் அவளால் முடியவில்லை. ஐயோ! அவ்வளவு அழகிய கலை பொருந்திய—முகத்தை மறக்கவும் இயலுமா?

புத்தகப் பையைப் பெற்றுக்கொண்ட அன்று சுசீலா வத்ஸனைக் கண்டு தலை குனிந்தா ளல்லவா? கூச்சம் என்பதே யில்லாத சுசீலாவா தலை குனிந்தாள் என்று சுசீலாவை அறிந்தவர்கள் ஆச்சரிய மடைவார்கள்.

ஏன்? அவளே முதலில் அதைக் குறித்து வெட்கமும் ஆச்சரியமும் அடைந்தாள். அந்த வாலிபனைக் கண்டதும் ஏன் நான் நாண மிகுந்து, முகம் சிவக்க, தலை குனிந்தேன்?'' என்று தன்னையே கேட்டுக் கொண்டாள்.

இரண்டு நாட்களில்—அதே வாலிபனை இன்னும் இரண்டு மூன்று முறை சந்தித்த பிறகு—அவளுக்கு விஷயம் விளங்கி விட்டது.

அவள் அவன் மீது காதல்கொண்டு விட்டாள்.

*　　*　　*　　*

"சுசீலா! ஏன் ஒருமாதிரியாக இருக்கிறாய்?'' என்று கேட்டான் வத்ஸன்.



"..................?"

அவர்கள் காவேரி நதியின் கரையில் உட்கார்ந்திருந்தார்கள். அவள் முகம் வாடியிருந்தது. அவன் முகத்திலோ நம்பிக்கையொளி படர்ந்திருந்தது.

அவளுக்கு அவ் விஷயத்தை எப்படி விளக்குவது என்று தெரியவில்லை. மௌனமாக இருந்தாள்.

ஐந்தாறு நாட்களாகவே சுசீலா தன் வாக்குறுதியைப்பற்றி வத்ஸனிடம் சொல்லிவிட வேண்டும் என்று பார்த்தாள். ஆனால் அவளால் முடியவே யில்லை;

இன்னும் வளரவிட்டால் பிறகு கஷ்டமாகிவிடும் என்று அவளுக்குத் தெரிந்திருந்தது. முளையிலேயே கிள்ளிவிட நிச்சயித்தாள். ஆனால் அது அவள் மனதில் எவ்வளவு வேதனையை உண்டாக்கிறது? ஏன் மாமாவுக்கு வாக்குறுதி கொடுத்தோம் என்று எண்ணி மனம் புண்ணானாள்.

''என்ன, சுசீலா! பதில் சொல்ல மாட்டாயா?'' என்று வத்ஸன் வற்புறுததினான்.

''நம் காதல் வீண்'' என்று கூறிவிட்டு விம்மினாள் சுசீலா. வத்ஸன் திடுக்கிட்டான். அவள் கூறிய வார்த்தைகள் அவன் தலையில் குண்டுகள்போல் விழுந்தன.

''ஐயோ, சுசீலா! ஏன் இப்படிச் சொல்லுகிறாய்? உன் பெற்றோர் இதறகுச் சம்மதிக்கமாட்டார்களா? நான் உங்கள் ஜாதியைச் சேர்ந்தவன் அல்ல என்ற காரணத்திற்காகவா நம் மணத்தைத் தடை செய்வார்கள்?'' என்று அடுக்கிக்கொண்டே போனான்.

"என மாமாவுக்கு ஜாதிவித்தியாசம் ஒன்றும் கிடையாது. ஆனால் வேறொரு காரணம் இருக்கிறது.''

''என்ன? என்ன?'' என்றலறினான் வத்ஸன்.

''உங்கள் அறைக்குப் போகலாம், வாருங்கள்'' என்றாள். அவளால் அந்த ஆற்றங்கரையில் உட்கார்ந்து தன் உணர்ச்சிகளைக் கொட்ட முடியவில்லை.

வத்ஸன் அவள் கரங்களைப்பற்றி அழைத்துச் சென்றான்.

*　　*　　*　　*

"நான் சிறிது நாட்களுக்கு முன்பு என் மாமாவுக்கு ஒரு வாக்குறுதி யளித்தேன். 'அதை உத்தேசித்தே நம் மணம் நடைபெறாது என்று கூறினேன்'' என்று பேச்சைத் துவங்கினாள் சுசீலா.

''உம்!''

''அவருக்கு ஒரு நண்பர் இருந்தார். எங்கள் அப்பாவும் அந்த நண்பரும் வெகுகாலம் நெருங்கிய நண்பர்களாக இருந்தார்களாம். அந்த நண்பரின் மகனை என் அக்காவான செல்லத்திற்கு விவாகம் செய்து கொடுப்பதாய் ஏற்பாடு.

"என் அப்பா இறந்துவிட்டார். அப்பாவின் நண்பர் காணமற் போன துக்கத்தில் கண்ணை மூடிவிட்டார். பொறுப்பு என் மாமாவின் தலைமேல் விழுந்தது."

வத்ஸன் ஏதோ கதை கேட்பதுபோல் ஸ்வாரஸ்யமாகக் கேட்டுக்கொண்டிருந்தான்.

"ஐயோ பாவம்! அவர் இறந்துபோய் விட்டாரா?" என்று மட்டும் இடையே கூறினான்.

"அந்தப் பையன் காணமற்போய் வெகு காலமாகிறது. என் அக்காவிற்கோ விவாகத்திற்கு வயதாகி விட்டது. ஆகவே என் மாமா என்னை ஒரு வாக்குறுதி கேட்டார். காணமற்போனவன் வரும் வரை காத்திருந்து அவனையே நான் மணம புரிவது என்ற வாக்குறுதியைக் கேட்டார். நானும் கொடுத்து விட்டேன. என் அக்காவுக்கும் வேறு வரன் நிச்சயமாகி அடுத்த வாரம் விவாகமாகப் போகிறது" என்று முடித்துவிட்டு, முகத்தை மூடிக் கொண்டு விம்மினாள்.

"சுசீலா! உன் மாமா யார்? உன் மாமாவின் நண்பர் என்று சொன்னாயே, அவர் பெயர் என்ன?" என்று கேட்டான வத்ஸன்.

"என் மாமாதான் கிருஷ்ணன் என்பவர். காணமற்போன மாதவனின் தகப்பனார் பெயர் சங்கரதாஸ் சேட்ஜி."

வத்ஸன் சுசீலாவின் கரங்களை எடுத்து தன கண்களில் ஒற்றிக்கொண்டு, "சுசீலா! நீ உன் வாக்குறுதிப்படி நடபபதே தருமமாகும். கவலைப்படாதே. உன் கணவன் சீக்கிரமே வந்து விடுவான" என்றான்.

அவன் கண்களிலிருந்து கொஞ்சம் கூட ஜலம் வராதது சுசீலாவிற்கு ஆச்சரியமாக இருந்தது. இவருடைய காதல் இவ்வளவுதானா என்று அவள் எண்ணாமல் இல்லை.

"நான்போய் வருகிறேன். என்னை மறந்து விடுங்கள்" என்றாள்.

"சுசீலா! உன்னை மறப்பது என்பது மட்டும் முடியாது" என்று அவன் கூறியது அவள காதுகளில் வெகுநேரம் ஒலித்துக் கொண்டிருந்தது.

## அத்தியாயம் 17

### "மாமா! வந்துவிட்டேன்!"

அன்றிரவெல்லாம் சுசீலாவுக்குத் தூக்கமே வரவில்லை. அழுது அழுது அவள் கண்கள் சிவந்திருந்தன. தன் இஷ்டப்படி வத்ஸனை மணக்க முடியாமல் போய்விட்டதே என்று ஒரு புறம்; மற்றொருபுறம் வத்ஸனின் கடைசி வார்த்தைகள் அவளை வருத்த மடையச் செய்தன.

"உன்னை மறப்பது என்பது மட்டும் முடியாது" என்று சொன்னவர் ஏன திடீரென்று மனம் மாறிவிட்டார். 'உன் வாக்



குறுதிப்படி நடப்பதே தருமம்' என்றும் 'காணமற்போன மாதவனையே விவாகம் செய்து கொள்' என்றும் சொன்னாரே. என்னிடம் உண்மையான காதல் கொண்டிருந்தாரானால் அவ்வளவு சுலபமாக எப்படிச் சொல்லியிருக்க முடியும்? மேலும் இதைக் குறித்து அவர் வருத்த மடைந்ததாகவும் காட்டிக்கொள்ளவில்லை.........எனக்கொன்றும் புரியவில்லையே" என்று யோசித்துப் பார்த்தாள்.

"இந்த ஆண்களே இப்படித்தான். நான் மட்டும் என் வாக்குறுதியைப்பற்றிச் சொல்லாமல் இருந்தால் அவரே என்னைக் கைவிட்டு விட்டிருப்பாரோ என்னமோ?" என்று முடிவு செய்தாள்.

கடவுள் தனக்கு மனவுறுதியைத் தந்து, தன்னை ஒரு ஆபத்திலிருந்து மீட்டதற்கு—தன் வாக்குறுதியினின்றும் மீறாமல் இருக்கச் செய்ததற்கு—மனமார வாழ்த்தி, வணங்கி அவர் கருணையைப் போற்றினாள்.

இனியும் இம்மாதிரி நெருக்கடியை உண்டாக்காமல் இருக்கும்படி பிரார்த்தித்தாள். 'உன் கணவன் சீக்கிரமே திரும்பி வருவான்' என்று வத்ஸன் சொன்னது விரைவில் பலிக்கட்டும் என்று வேண்டிக்கொணடாள்.

அவள் பிரார்த்தனைக் கிணங்கவோ, அல்லது வத்ஸனின் ஜோசியம் பலிக்கவோ அந்தச் சம்பவம் நிகழ்ந்தது.

* * * *

செல்லத்தின் விவாகம் நடக்க இன்னும் மூன்று நாட்கள் இருந்தன. வீட்டிலுள்ளவர்கள் எல்லோரும் கல்யாண சம்பந்தமாக ஓடியாடி உழைத்துக் கொண்டிருந்தார்கள்.

கிருஷ்ணன் சில கணக்குகளைப் போட்டுக் கொண்டிருந்தார். அவருடன்கூட வக்கீலும் இருந்தார். சென்றதை மறந்து இருவரும் கல்யாண காரியங்களில் ஒத்துழைத்தார்கள். செல்லமும், சுசீலாவும் கூடத்தில் பேசிக் கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது வாசற்கதவு தட்டப்பட்டது. செல்லம் கதவைத் திறக்க எழுந்து சென்றாள். சுசீலா சமையல் அறைக்குச் சென்றாள்.

திறந்த கதவின் வழியாக ஒரு வாலிபன் நுழைந்தான்.

"கிருஷ்ணன் என்பவர் இங்குதானே இருக்கிறார்?" என்று வந்தவன் கேட்டான்.

"ஆமாம்!" என்று கூறிவிட்டு, "மாமா! உங்களைப் பார்க்க யாரோ வந்திருக்கிறார்கள்" என்று கூறிக் கொண்டே உள்ளே போய் விட்டாள்.

அதைக் கேட்டுக் கொண்டே வந்த கிருஷ்ணன் அவ்வாலிபனை நோக்கித் திகைத்தார்.

"மாமா! என்னைத் தெரியவில்லையா?" என்று கூறிக் கொண்டே அவன் கிருஷ்ணனை நெருங்கினான்.

'சட்'டென்று அவருக்கு ஞாபகம் வரவில்லை. அவன் அருகில் வந்ததும் காதினருகேயிருந்த மச்சம் அவருக்குப் புரிய வைத்தது.

"என் மாதவனா? மாதவா!" என்று அவனை இறுகத் தழுவிக் கொண்டார். அவர் கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் விழுந்தது.

கிருஷ்ணனைத் தொடர்ந்து வந்த வக்கீல், "இது என்ன உண்மைதானா? மாதவன் தானே வந்திருக்கிறான்? இது கனவில்லையே?" என்று கூவிக் கொண்டே அவனை யணுகினார்.

இந்தச் சந்தடியெல்லாம் சமையலறையை எட்டியது.

சுசீலாவும், செல்லமும் 'மாதவன் வந்து விட்டான்' என்ற செய்தி கேட்டு ஓடிவந்தனர். கிருஷ்ணனின் அன்புத் தழுவலிலிருந்த மாதவனைப் பார்த்துவிட்டு அப்படியே பதுமைபோல் நின்று விட்டாள் சுசீலா.

## அத்தியாயம் 18

### பிரயாண முடிவு

வக்கீலும், கிருஷ்ணனும் முதலில் யோசனை செய்தார்கள். உயில்படி மாதவனை செல்லத்திற்கல்லவா விவாகம் செய்து வைக்க வேண்டும்? ஆனால் செல்லத்திற்கு இன்னும் மூன்றே நாட்களில் விவாகம் நடக்கவிருந்தபோது அது எப்படி சாத்தியமாகும்?

அதே முகூர்த்தத்தில் சுசீலாவை மாதவனுக்கு விவாகம் செய்து வைத்துவிட வேண்டியதென அதே க்ஷணத்தில் முடிவுக்கு வந்தார் கிருஷ்ணன். வக்கீல் மனதிலும் அதே முடிவே ஏற்பட்டது.

* * * *

சுசீலாவின் வியப்புக்குக் காரணம் இல்லாமல் இல்லை. அத்துடன் அவளுக்குக் கோபமும், வெறுப்பும் ஏற்பட்டது. தான் சொன்ன விஷயங்களை ஆதாரமாக வைத்துக் கொண்டு வத்ஸன் இப்படிப் பித்தலாட்டம் செய்வான் என்று அவள் எதிர்பார்க்கவே யில்லை.

'விடு விடு' என்று கிருஷ்ணனை நோக்கி நடந்தாள்.

"மாமா! இது என்ன கேலிக் கூத்து? இவரா மாதவன்? இவர் பெயர் வத்ஸன் அல்லவா? இந்த ஊர் கல்லூரியிலல்லவா படித்துக் கொண்டிருக்கிறார்?" என்று வார்த்தைகளை அடுக்கினாள்.



வத்ஸன் என்ற மாதவன் 'ஹோ! ஹோ!' வென்று சிரித்தான்.

"சுசீலா! நீ சொல்லுவது உண்மைதான். நான் வத்ஸன் தான். இவ்வூரில் படித்துக் கொண்டிருப்பதும் உண்மைதான்," என்றான்.

கிருஷ்ணனும், வக்கீலும் திடுக்கிட்டார்கள். அவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. கிருஷ்ணன் மறுபடியும் வத்ஸன் முகத்தை உற்று நோக்கினார். அவன் மாதவனே என்பதில் அவருக்குச் சிறிதும் சந்தேகமில்லை.

அப்படியானால் சுசீலா கூறுவதன் அர்த்தமென்ன? அவளுக்கு இவனை எப்படித் தெரிந்தது?

வத்ஸன் அவர்களை அதிக நேரம் சந்தேகத்தில் ஆழ்த்தாமல் விஷயத்தை விளக்கினான்.

* * * *

அக்காலத்தில் குழந்தைத் திருட்டுகள் நடந்தன. ஆப்கனிஸ்தானத்திலிருந்து வந்த ஒரு ஜாதியார் அழகிய குழந்தைகளை எடுத்துச் சென்று அவர்களை நல்ல விலைக்கு விற்று வந்தார்கள்.

அவர்களில் ஒருவன் மாதவனையும் கவர்ந்து சென்று பம்பாயில் ஒரு நாடக சபை மானேஜருக்கு விற்று விட்டான். இவனுடைய அழகில் மயங்கிய அந்த மானேஜர் தம் கம்பெனி நாடகங்களில் அவனுக்கும் சிறிய பாகங்களைக் கொடுத்தார்.

* * * *

'கிருஷ்ண லீலா' நாடகம் பொது மக்களை வெகுவாகக் கவர்ந்தது. மாதவன் தான் அதில் கிருஷ்ணனாகத் தோன்றினான்.

நாடகம் பார்க்க வந்தவர்களுள் மனோகரர் அவன் அழகில் மயங்கி விட்டார். மனோகரருக்கு மற்ற செல்வங்கள் இருந்தும் குழந்தைச் செல்வம் மட்டும் இல்லை. எவ்வளவோ தான தருமங்கள் செய்தார். வெகு நாட்கள் யோசித்த பிறகு, தம் செல்வத்தை ஆள ஒரு குழந்தையைத் தத்து எடுத்துக் கொள்வதே உசிதம் என்று பட்டது அவருக்கு. ஆகவே வலையை வீசினார்.

அதில் சிக்கினான் மாதவன். நாடக சபை மானேஜர் அவனை மனோகரருக்குக் கொடுத்து விட்டார். அவர் பணப்பை இன்னும் கொஞ்சம் பருமனாயிற்று.

* * * *

'வத்ஸன்' என்ற பெயரைத் தம் வளர்ப்புப் பிள்ளைக்கு வைத்து அன்புடன் வளர்த்து வந்தார்கள். அவனுக்குத் தமிழை சுலபமாக வந்ததால் பாபு அவனை 'சௌத் இந்தியன் ஸ்கூ'லில்

சேர்த்து வாசிக்க வைத்தார். அதுவே அவருடைய இன்னொரு காரியத்திற்கும் உபயோகப் பட்டது.

*        *        *        *

"மேல் படிப்புக்காக என்னை இவ்வூரில் சேர்த்தார். நான் ஹாஸ்டலில் இருக்கிறேன். சுசீலாவுடன் சம்பந்தம் ஏற்பட்ட பிறகுதான் எனக்கு நீங்கள் இங்கிருக்கும் விஷயமும், மற்ற விஷயங்களும் தெரிய வந்தன.

"என் மனதை அடக்கினேன். இந்த நான்கைந்து நாட்களாக எவ்வளவோ அடக்கிப் பார்த்தும் முடியவில்லை. ஓடி வந்தேன்" என்று முடித்தான்.

ஏன் அவன் தன் மனதை அடக்கப் பார்த்தான் என்பது நேயர்களுக்குத் தெரிந்திருக்கும். செல்லத்திற்கு விவாகம் ஆகி விட்ட பிறகு கிருஷ்ணனைப் பார்த்தால் அல்லவா சுசீலாவை அடைய முடியும்?

சுசீலா நாணம், வருத்தம்......இன்னும் பற்பல உணர்ச்சிகளினால் தூண்டப் பட்டவளாய் உள்ளே ஓடிப்போய் விட்டாள்.

*        *        *        *

மனோகரர் தம் கைக்கெட்டியது வாய்க்கும் எட்டியதை அறிந்து பேருவகை கொண்டார். அவர் ஆச்சரியக் கடலில் மிதந்தார் என்றே சொல்ல வேண்டும். அவரால் பேசவே முடியவில்லை.

*        *        *        *

இரண்டு கல்யாணங்கள் தடபுடலாக நடந்தேறின.

வத்ஸன் (மாதவன்) சுசீலாவைக் குறும்பாகப் பார்த்துச் சிரித்தான். அவள் வெட்கத்துடன் தலை குனிந்துகொண்டாள்.

கிருஷ்ணனும் மனோகரரும் இதைப் பார்த்துவிட்டுத் தங்களுக்குள் சிரித்துக் கொண்டார்கள்.

முற்றிற்று.

## ஆஸ்பத்திரிக்கு வழி

ஒருவன்:—(மற்றொருவனைப் பார்த்து) ஏனப்பா, ஆஸ்பத்திரிக்கு எப்படிப் போகிறது.

மற்றொருவன்:—அதோ அங்கே வருகிற மோட்டாருக்கு முன்பக்கமாகப் போ.

—வி. கே. கிருஷ்ணன்.

## விய ஞூ ஆடி மீ நவக்கிரக * நிராயன சுத்த ஸ்புடம்

(இந்தியா ஸ்டாண்டர்ட் கடிகாரமணி-சென்னை காலை 5½-மணிக்கு)

| தேதி | நக்ஷத்திர ஹோரை | சூரியன் | சந்திரன் | அங்காரகன் | புதன் | குரு | சுக்கிரன் | சனி | †ராகு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ம நி ச | பா க | பா க | பா க | பா க | பா க | பா க | பா க | பா க |
| 1 | 19 32 54 | 89 52 | 288 19 | 141 59 | 112 45 | 175 50 | 129 32 | 94 45 | 56 07 |
| 2 | 19 36 51 | 90 50 | 301 00 | 142 34 | 113 03 | 175 57 | 130 41 | 94 52 | 56 04 |
| 3 | 19 40 47 | 91 47 | 313 54 | 143 10 | 113 12 | 176 03 | 131 50 | 95 00 | 56 01 |
| 4 | 19 44 44 | 92 44 | 327 02 | 143 46 | 113 21 | 176 09 | 132 59 | 95 08 | 55 57 |
| | | | | | (வ) | | | | |
| 5 | 19 48 40 | 93 41 | 340 23 | 144 22 | 113 21 | 176 15 | 134 08 | 95 15 | 55 54 |
| 6 | 19 52 37 | 94 39 | 354 00 | 144 59 | 113 19 | 176 21 | 135 17 | 95 23 | 55 51 |
| 7 | 19 56 34 | 95 36 | 7 50 | 145 35 | 113 10 | 176 27 | 136 26 | 95 31 | 55 48 |
| 8 | 20 00 31 | 96 33 | 21 55 | 146 11 | 112 57 | 176 33 | 137 34 | 95 39 | 55 45 |
| 9 | 20 04 27 | 97 31 | 36 14 | 146 47 | 112 42 | 176 40 | 138 42 | 95 47 | 55 42 |
| 10 | 20 08 24 | 98 28 | 50 43 | 147 24 | 112 16 | 176 46 | 139 50 | 95 54 | 55 38 |
| 11 | 20 12 20 | 99 25 | 65 21 | 148 01 | 111 56 | 176 52 | 140 58 | 96 02 | 55 35 |
| 12 | 20 16 17 | 100 23 | 80 01 | 148 38 | 111 18 | 176 59 | 142 06 | 96 10 | 55 32 |
| 13 | 20 20 13 | 101 20 | 94 38 | 149 15 | 110 48 | 177 06 | 143 14 | 96 18 | 55 29 |
| 14 | 20 24 10 | 102 17 | 109 04 | 149 51 | 110 04 | 177 13 | 144 22 | 96 25 | 55 26 |
| 15 | 20 28 06 | 103 15 | 123 13 | 150 28 | 109 24 | 177 20 | 145 30 | 96 33 | 55 22 |
| 16 | 20 32 03 | 104 12 | 137 01 | 151 05 | 108 40 | 177 27 | 146 37 | 96 41 | 55 19 |
| 17 | 20 35 59 | 105 09 | 150 26 | 151 42 | 107 55 | 177 34 | 147 44 | 96 48 | 55 16 |
| 18 | 20 39 6 | 106 07 | 163 26 | 152 19 | 107 10 | 177 42 | 148 51 | 96 56 | 55 13 |
| 19 | 20 43 52 | 107 04 | 176 03 | 152 56 | 106 25 | 177 50 | 149 58 | 97 03 | 55 10 |
| 20 | 20 47 49 | 108 02 | 188 21 | 153 33 | 105 40 | 177 58 | 151 05 | 97 11 | 55 07 |
| 21 | 20 51 45 | 108 59 | 200 24 | 154 10 | 105 00 | 178 06 | 152 12 | 97 19 | 55 04 |
| 22 | 20 55 42 | 109 57 | 212 17 | 154 48 | 104 18 | 178 14 | 153 18 | 97 26 | 55 01 |
| 23 | 20 59 38 | 110 54 | 224 06 | 155 25 | 103 44 | 178 22 | 154 25 | 97 34 | 54 58 |
| 24 | 21 03 35 | 111 52 | 235 55 | 156 02 | 103 10 | 178 30 | 155 31 | 97 42 | 54 55 |
| 25 | 21 07 32 | 112 49 | 247 49 | 156 39 | 102 46 | 178 38 | 156 37 | 97 50 | 54 52 |
| 26 | 21 11 29 | 113 47 | 259 53 | 157 17 | 102 21 | 178 49 | 157 43 | 97 57 | 54 48 |
| 27 | 21 15 25 | 114 44 | 272 09 | 157 55 | 102 08 | 178 56 | 158 49 | 98 04 | 54 45 |
| 28 | 21 19 22 | 115 42 | 284 40 | 158 33 | 101 56 | 179 05 | 159 55 | 98 12 | 54 42 |
| 29 | 21 23 18 | 116 39 | 297 26 | 155 11 | 101 56 | 179 13 | 161 00 | 98 19 | 54 39 |
| | | | | | வ நி | | | | |
| 30 | 21 27 15 | 117 37 | 310 28 | 159 48 | 101 58 | 179 22 | 162 05 | 98 27 | 54 35 |
| 31 | 21 31 11 | 118 35 | 323 45 | 160 26 | 102 13 | 179 31 | 163 10 | 98 35 | 54 32 |
| 32 | 21 35 08 | 119 32 | 337 14 | 161 04 | 102 29 | 179 40 | 164 15 | 98 42 | 54 28 |

ஆகாயக் } 16உ இரவு மணி 0-02க்கு சசிக்குத் தெற்கு பா 4-24ல் சுக்ரனும்,
காட்சி:— } 17உ ,, ,, 5-27க்கு ,, ,, பா 3-39ல் நெப்டியூனும்,
சந்திர சமாகமம் 10-13-14-17-19 தேதிகளில் முறையே யுரேனஸ் சனி-புதன்-செவ்வாய்-குரு இந்தக் கிரகங்களின் சமாகமங்கள் நம் பிரதேசத்திற்கு காட்சிக் குரியன வல்ல.
பிரவேசங்கள் முதலியன:—1உ காலை மணி 8-05க்கு சூரியன் கடகத்திற்கும், 14உ பகல் மணி 11.20க்கு செவ்வாயும், 19உ காலை மணி 6-14க்கு சுகரனும் கன்யாராசிக்கும் பிரவேசிக்கின்றன, 5உ புதன் வக்ராரம்பம்; 10உ மேற்கில் வக்ராஸ்தமனம்; 27உ கிழக்கில் வக்ரோதயம்; 29உ வக்ர த்யாகம். 25உ சனி கிழக்கில் உதயம், 8உ வரை மேற்கில் புத-சுக்ர சாமீப்யம்; அதன்மேல் 'பாது மத்யம்'

* அயனாம்சம் பா-22 கலை-58 விகலை 42·3643 கூட்ட சாயன ஸ்புடம் வரும்.

† ஆறு ராசிகள் அல்லது பாகை 180 கூட்ட கேது ஸ்புடம் வரும்.

## "ஆனந்தபோதினி" பஞ்சாங்கம்.

வியஹு ஆடிமீ கலியுகாதி 5048, சாலிவாகனம் 1869,
பசலி 1356, கொல்லமாண்டு 1121, ஹிஜிரா 1365
இங்கிலீஷ் 1946௵ ஜூலைமீ—1946௵ ஆகஸ்ட்மீ

| ஆடிமீ | ஜூலை ஸ்ரீ | வாரம். | திதி. | நக்ஷத்ரம் | அமிர்தாதி யோகம். | விசேஷங்கள் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 16 | செவ் | துதி27-25 | திரு22-44 | சித்60 | தக்ஷிணாயன புண்யகாலம் |
| 2 | 17 | புத | திரு28-17 | அவி25-21 | ம25-21சி | ஸ்ரீ விஜய தீர்த்தம், கரிநாள் |
| 3 | 18 | வியா | சது27-58 | சத-26-22 | ம26-22சி | சங்கட சதுர்த்தி |
| 4 | 19 | வெ | பஞ்26-35 | பூர27-19 | சித60 | காரியஞ் செய்ய |
| 5 | 20 | சனி | சஷ்24-06 | உட்26-39 | சி26-39ம | ஆயுதம் பயில |
| 6 | 21 | ஞா | சப்20-38 | ரே24-59 | அ24-59சி | காரியஞ் செய்ய |
| 7 | 22 | திங் | அ16-11 | அசு22-24 | சித்60 | ருத்ராஸாவர்ணி மன்வாதி |
| 8 | 23 | செ | நவ10-46 | ✻18-50 | சித60 | கிருத்திகை விரதம் |
| 9 | 24 | புத | தச4-45 ஏ57-58 | ரோ14-31 | அ14-31சி | காமிக ஏகாதசி, அவமாகம் |
| 10 | 25 | வியா | து50-26 | ரோ9-39 | மர60 | வை-ஏகா, கரிநாள் |
| 11 | 26 | வெ | திர42-59 | மிரு4-16 திரு58-49 | சித்60 | பிரதோஷம், மாஸ சிவராத்திரி, அவமாகம் |
| 12 | 27 | சனி | சசி35-37 | புன53-33 | சித்60 | போதாயன அமா |
| 13 | 28 | ஞா | ●28 42 | பூச47-31 | சித்60 | சர்வத்ர அமாவாசை, ஸத்யாதீர்த்தம் |
| 14 | 29 | திங் | பிர22-35 | ஆ45-53 | சி45-53ம | சிராவண சுத்தம் |
| 15 | 30 | செ | துதி17-10 | மக42-36 | சித60 | |
| 16 | 31 | புத | திரு14-10 | பூர41-59 | அ60 | |
| 17 | 1 | வியா | சது12-23 | உத்42-59 | ம42 59சி | |
| 18 | 2 | வெ | பஞ்12-38 | அ45-55 | அ45-55சி | |
| 19 | 3 | சனி | சஷ்14 48 | சித50-37 | ம50-37சி | |
| 20 | 4 | ஞாயி | சப்18-43 | சு56-51 | சி56-51ம | |
| 21 | 5 | திங் | அ23-41 | வி60-00 | மர60 | |
| 22 | 6 | செவ் | நவ30-05 | வி4 08 | ம4-08சி | |
| 23 | 7 | புத | தச36-24 | அ11-50 | சித்60 | |
| 24 | 8 | வியா | ஏ42-22 | கே18-32 | ம18-32சி | |
| 25 | 9 | வெ | த47-37 | மூல26-12 | அ26-12சி | வரலக்ஷ்மி விரதம், |
| 26 | 10 | சனி | திர51-17 | பூரா31-57 | சித்60 | சனி பிரதோஷம் |
| 27 | 11 | ஞா | சசி53-47 | உத்36-24 | அ60 | ஆராய்ச்சிக்கு |
| 28 | 12 | திங் | ○54-49 | திரு39-32 | அ39-32சி | பௌர்ணமி பூஜா - விரதம், ருக்-யஜுர் உபாகர்மம் |
| 29 | 13 | செவ் | பிர54-31 | அவி40-14 | சி40-44ம | சிராவண பகுளம் |
| 30 | 14 | புத | த்வி53-07 | சத-41-49 | சி41-49அ | சாதுர்மாஸ்ய த்விதீயா |
| 31 | 15 | வியா | திரு51-37 | பூர41-24 | சித்60 | கஜ்ஜலி திருதியை |
| 32 | 16 | வெ | சது47-25 | உட்40-10 | சித்60 | சங்கட சதுர்த்தி |

1946௵ ஆகஸ்ட்மீ

| | | ராகு | சூ |
|---|---|---|---|
| | 1-கடக-சூர் 5-வ-ஆ-புத 14-கனி-செவ் 19-கன்-சுக் 29-வ-தி-புத | | புத சனி |
| | | | சுக் செ |
| | கேது | | குரு |

EDITED, PRINTED & PUBLISHED BY N. MUNISWAMY MUDALIAR,
AT THE "ANANDA BODHINI" PRESS,
No. 6, LAWYER CHINNATHAMBI MUDALI STREET, MADRAS.

தமிழ்நாட்டில் தன்னிகரற்று விளங்கும்
இலக்கியப் பத்திரிகை

# "ஆனந்தபோதினி"க்கு

ஆடி மாதத்திலிருந்து

## முப்பத்திரண்டாவது ஆண்டு

பிறந்து விட்டது.

ஆடவர், மகளிர், சிறூர் அனைவருக்கும் அரசியல், இலக்கியம், ஹாஸ்யம், சிறு கதைகள், வேதாந்தம், விஞ்ஞானம், ரசாயனம் முதலிய பல் சுவைகளோடு கூடிய அறிவு விருந்தை வழங்கும் இம்மாதப் பத்திரிகை முற்றிலும் புதிய முறையில் வெளி வரும்.

கண்ணையும் கருத்தையும் கவரும் வகையாக உள்ளும் புறமும் திகழும்.

**வருஷ சந்தா ரூ. 2. தனிப் பிரதி விலை அ. 3.**

கமது பிரசண்ட விகடன் ஏஜண்டுகளிடமும், ஹிக்கிம்பாதம், சுதேச மித்திரன், ரயில்வே புக் ஸ்டால்களிலும் கிடைக்கும்.

: : ஆனந்தபோதினி ஆபீஸ், : :
தபால்பெட்டி நெ. 167, சென்னை.

## அயத்தங்கத் திராவகம்

மித்திரர்களே! இந்த அபூர்வ மருந்தானது அநேக கொடிய வியாதிகளை ஆச்சரியமாகக் கண்டிக்கக் கூடியது. இதை அநேக ஆயிரக் கணக்கான ஜனங்கள் உபயோகித்துச் சந்தோஷிக்கின்றனர். வியாதியினாலாவது வேறு எந்தக் காரணத்தினாலாவது இளைத்துப்போயிருக்கும் தேகத்தைப் புஷ்டியாக்கி பலவிருத்தி தருவதில் இது நிகரற்ற மருந்தாகும். ஆங்கிலேய



முறைப்படி தயாரிக்கப்பட்ட அருமையான மருந்து. சாப்பிடுவதற்கு மிக இன்பமாயிருக்கும். இருமல் நோய்கண்டு அவஸ்தைப்படுபவர்கள் இதை உட்கொண்டால் இரண்டே வேளையில் ஆச்சரியமான சுகத்தை யடைவார்கள். இதனால் உண்டாகக் கூடிய அநேக குணங்களில் முக்கியமான சிலவற்றை இங்கே குறிக்கிறோம்.

இது, நரைந்த மயிரைக் கருப்பாக்கும், உஷ்ணத்தினாலாவது, புழு வெட்டினாலாவது மயிர் உதிர்வதை நிறுத்தும்: இதனால் நீர் வியாதிகள் தீரும். கண்ணெரிச்சல், கைகால் காந்தல் இவை தீரும். இன்னும் இது முக வசீகரத்தை உண்டாக்கும். தேக அசதியை யோட்டும். ஜீரண சக்தியையும், நல்ல பசியையும் உண்டாக்கும். மனதை அதிக உற்சாகப்படுத்தும், நரம்புகளுக்கு அதிக வலுவைத் தரும், தேகத்தில் நல்ல இரத்தத்தைச் சுரப்பிக்கும், க்ஷயரோகத்தை க்ஷணத்தில் தீர்க்கும், சத்த தாதுக்களுக்கும் நல்ல பலத்தை தரும், மூலச்சூடு, மூலவாய்வு, மலச்சிக்கல் ஆகியவை தீரும்.

இந்தச் சஞ்சீவியை நல்ல போஜனத்துடன் 15 நாள் சாப்பிட்டால் இணையில்லாத ஆனந்தத்தைத் தரும். மனிதர் தாம் இழந்துபோன தேகதிடத்தைப் பழையபடி யடைவதற்கு இதைவிட வேறு மருந்தே கிடையாது. ஒருவர் 40-நாள் மருந்தை உட்கொள்ளும் பக்ஷத்தில் அவனுடைய தேகம் வஜ்ஜிரமேயாகும். இதற்கு யாதொரு பத்தியமும் கிடையாது.

20-நாள் மருந்து விலை ரூபா 1. 40-நாள் மருந்து விலை ரூபா 1-12-0.

## நரை மயிர் கருக்கும் தைலம்

தற்காலத்தில் பலவிதமாகச் செய்து விற்கப்பட்டு வருகிற கப்புகள் மயிரைச் செம்பட்டையாகவும், பசுமை நிறமாகவும், சாம்பல் வர்ணமாகவும் ஆக்கி விகாரப்படுத்தி விடுகின்றன. நமது தைலமோ நரைத்த மயிருக்குப் பூசிய 3 நிமிஷத்திற்குள்ளாக நரைப்பதற்கு முன்மிருந்த கருமை நிறத்தையும் பளபளப்பையும் உண்டுபண்ணும், மேலே கூறியுள்ள விகார குணங்கள் இதில் உண்டாகமாட்டா. இதைப் பூசிய பிறகு முகலட்சணமும் வசீகரமு முண்டாகிறபடியால் வயோதிகரும் வாலிபரைப்போல் தோற்றப்படுவார்கள். இதை உபயோகிக்கும் விதம் பார்சலோடு தெரிவிக்கப்படும். இதன் விலை ரூபா 1.



தனலட்சுமி கம்பெனி, 6, லாயர் சின்னதம்பி முதலி தெரு, மதராஸ்

மலையாள முறையில் சிட்டுக்குருவி சத்தினால் செய்யப்பட்ட

## ஜீவானந்த ரஸாயனம்

**இதில் சுக்கில சுரோணிதப் போஷணைக்கு உரிய அரிய பெரிய மருந்துகளும், மலையாள மூலிகைகள், பழ ரசங்கள், புஷ்பச் சத்துக்கள் முதலிய பல மூலிகைகளும் சேர்த்து சாப்பிடுவதற்கு மிக இனிய லேகிய பதமாய் தயார் செய்யப்பட்டது.**

'ஜீவானந்த ரஸாயனத்'தை ஒரு மண்டலம் நீடித்துச் சாப்பிடுவதினால் ஜீவ நரம்புகளில் பற்றிவரும் மேகவிஷ துர்நீர்களைப் போக்கும். கெட்ட சகவாச தோஷத்தினால் ஏற்பட்ட வெள்ளை, கிரந்தி, மேகவியாதி, மேகச்சொறி, பித்தப்பாண்டு, துர் அப்பியாசம் முதலியவற்றால் ஏற்பட்ட பலஹீனம், தாது நஷ்டம், சொற்பன ஸ்கலிதம், நரம்புத் தளர்ச்சி, ஆயாசம், உடல் நடுக்கம், பசியின்மை, குன்மம், தூக்கமின்மை, மேக காங்கை, மூலச்சூடு, மார்பு வலி, இடுப்பு வலி, மலச்சிக்கல், இருமல், மூத்திரத்துடன் இந்திரியம் நீத்துப்போகுதல், கைகால் ஓச்சல், ஞாபகமறதி, கண்மங்கல் முதலிய பல வியாதிகளையும் போக்கும். வீரிய விருத்தி, தாதுபுஷ்டி, இரத்தவிருத்தி, போகசக்தி முதலியவைகளை அபாரமாய் உண்டாக்கும். தளர்ந்து துவண்டு போன ஆண் நரம்புகளை முறுக்கேற்றும். தசைகளை வளரச் செய்யும். உடைந்துபோன இந்திரியத்தை இறுகச் செய்யும். இல்லற வாழ்க்கையில் இணையற்ற இன்பத்தை அளிக்கும். பெண்களுக்குக் காணும் சூதகச்சிக்கல், பெரும்பாடு போகுதல், அதிகப் பிள்ளைகளைப் பெற்றதனால் ஏற்பட்ட தளர்ச்சி, பலஹீனம், மர்மஸ்தானத்தில் நமை, எரிச்சல், வெள்ளை, வெட்டை முதலிய பல வியாதிகளையும் கண்டிக்கத் தக்கது. பத்தியமில்லை.

**1-பவுண்டு டின் 1-க்கு ரூ. 5. ½-பவுண்டு டின் 1-க்கு ரூ. 2-8-0.**

## மாலதி முகவசீர மருந்து (முகப் பருக்களுக்கு)

முகத்தில் ஏற்படும் பருக்கள், தழும்புகள், வெய்யிலில் சுற்றுவதால் உண்டாகும் கருமை வேர்க்குருக் கட்டிகள் முதலிய முக அழகைக் கெடுத்து விகாரரூபத்தை யுண்டாக்கும் சர்வ பருக்களையும் போக்கி முகத்திற்கு நல்ல தேஜஸையும், பளபளப்பையும், காந்தியையும் கொடுக்கவல்ல மருந்து. விலை டின் 1-க்கு ரூ. 1.

## நயன பிந்து (EYE DROPS)

**கண் சம்பந்தமான வியாதிகளுக்கு மிகவும் சிறந்தது.**

கண்ணோய், கண்ணில் பீளை கட்டுதல், கண் எரிச்சல், கண்ணில் சதை வளருதல், கண் வீக்கம், கண் சுருங்குதல், கண்ணிலிருந்து சதா நீர் வடிதல், கண் பார்வைக் குறைவு, கண்ணில் பூ படுதல், மாலைக்கண், கண் புளித்தல், கண் புகைதல், கண் கொதிப்பு, கண் சிவப்பு, கண்ணுக்குள் தூசு துரும்பு முதலானவை விழுந்ததுபோல் கண் அருகுதல் முதலிய கண்ணைச் சார்ந்த எல்லா நோய்களும் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கும். கண்ணுக்கு நல்ல ஒளியைக் கொடுக்கும். கண்ணோய் பரவும் காலத்தில் இம்மருந்து கையிருப்பிலிருந்து விட்டால் மேற்படி நோய்கள் வராமல் தடுத்துக் கொள்ளலாம். சிறு குழந்தை முதல் கிழவர் வரை யாதொரு பயமுமில்லாமல் கண்ணில் விடலாம். 1-அவுன்ஸ் புட்டி 1-க்கு விலை ரூ. 1-4

தனலட்சுமி கம்பெனி, நெ. 6, லாயர் சின்னதம்பி முதலி தெரு, மதராஸ்

# சர்வதேள் விஷ சஞ்சீவினி.

(ரிஜிஸ்டர் டிரேட் மார்க்)

பட்டவுடனே விஷம் பறக்கும்! அழுதவன் சிரிப்பான்!!

**இதில் குணமில்லையென்று நிரூபிப்பவர்களுக்கு 100-ரூபாய் இனும்.**




நமது நாட்டிற்கு இது அவசியமாய் ஒவ்வொரு குடும்பத்திலும் சதா கையிருப்பில் இருக்கவேண்டிய ஓர் ஔஷதமாகும். இது ஆங்கில யூனனி தமிழ் வைத்திய நிபுணர்களால் நன்கு மதிக்கப்பட்டுள்ளது. இதை நாள்பட வைத்திருப்பதால் இதன்குணம் சற்றும் குறையாது. தேள், நட்டுவாய்க்காலி, செய்யான், பாம்பு, எலி முதலியவற்றின் விஷங்களை இரண்டொரு நிமிஷங்களில் இது அடியோடு நீக்கக்கூடியது. எண்ணிறந்தோர் இதனால் சுகமடைந்திருப்பது பிரத்தியக்ஷ அனுபவமானதால் இதைப்பற்றி நாம் அதிகம் கூறவேண்டியதில்லை. இது இரண்டுவித மருந்துகள் அடங்கியது. இதை உபயோகிக்கும் முறை மருந்தோடு அனுப்பப்படும்.

விலை:—இரண்டுவித மருந்தும் அடங்கிய பாக்கெட் 1-க்கு அணா 8. தபாற் கூலி அணா 4. டஜன் 1-க்கு விலை ரூபா 5.

**ஏககாலத்தில்6-பாக்கெட் வாங்குவோருக்குத் தபாற்கூலி இனும், வியாபாரிகளுக்கு 100-க்கு 25 கமிஷன் கொடுக்கப்படும்.**

# மேகராஜ சஞ்சீவி எண்ணெய்



இந்த எண்ணெயை ஒருமுறை மூன்றுநாள் சாப்பிட்ட மாத்திரத்திலேயே, கிரந்தி. மேக தாமரை மேக தமைச்சல், மேக இரணம்; மேகப் புண், கால் கைகளிலே சேரும் மேக துர்நீர், மேக வெடிப்பு, எல்லா வகைகளான வெள்ளை, மூத்திரக் கருவியிலே தோன்றும் பலவித வியாதிகள் தீரும். அநேக காலமாக இருக்கும் வியாதிகளுக்கு ஒருமுறை சாப்பிட்டு, 15 நாள் பொறுத்து, மற்றொருமுறை சாப்பிடவேண்டும்.

3-நாள் எண்ணெய், புட்டி 1-க்கு ரூபா 1—8—0; மருந்து ஆர்டர் செய்யும்போது வியாதியின் பூரண நிலவரத்தை தெரியப்படுத்தவும்.

# சுகபேதி மாத்திரை

இந்த மாத்திரையில் 2-முதல் 5-வரை திரேக திடமறிந்து மாத்திரையைச் சாப்பிட்டு கொஞ்சம் ஜலம் சாப்பிடவும். இவ்விதம் சாப்பிட்டால் சுகமாய் பேதியாகிவிடும். மாத்திரையை அனுப்பும்பொழுது உபயோகிக்கும் முறை தெரிந்துகொள்ளலாம்.

25-மாத்திரை அடங்கிய புட்டி 1-க்கு விலை அணா 6

**தனலட்சுமி கம்பெனி, கே. 6, லாயர்சின்னதம்பி முதலி தெரு, மதராஸ்**

207719